# சமாதான நோக்கு

குரல் 3, நோக்கு 1
ஆகஸ்ட் 2003



## சமாதானமும், அபிவிருத்தியும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கே...... இப்படத்தை பார்க்கும் போது உங்கள் எண்ணங்களில் தோன்றுவதை கவிதையாக எழுதி, எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள், அடுத்துவரும் இதழ்களில் பிரசுரிப்போம்.

"சமாதான நோக்கு" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு. மா.கொ.நி பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், அதனை பலப்படுத்தலும் அவசியமென கருதுகின்றது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மா.கொ. நி ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சினைகளில் அவதானம் செலுத்துகிறது. "சமாதான நோக்கு" வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்க பங்களிப்புச் செய்யும் பிரச்சினைகள் குறித்தும், பொது மக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு...

ஒருங்கிணைப்பாளர்,
முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவு,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
32/3, பிளவர் வீதி, கொழும்பு- 07
தொ.பே: 94-1-2565304/06, பக்ஸ் : 94-74-714460,
ஈ-மெயில் : cpa@sri.lanka.net

மாற்றுக் கண்ணோட்டம்

சமாதான நோக்கு

குரல் 3,
நோக்கு 2

ஆகஸ்ட் 2003

# அபிவிருத்தி மூலம் சமாதானம் : பிரச்சினைகளும், சாத்தியங்களும்

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**

2002 டிசம்பர் ஒஸ்லோ பிரகடனம் எவ்வாறு அமைந்திருந்தபோதிலும், தற்போதைய சமாதானச் செயல்முறையின் அடிப்படை அனுமானம் அரசியல் விடயங்களைவிட பொருளாதார விடயங்களில் முக்கியத்துவத்தின் மீது முழுநிறைவான நம்பிக்கை வைக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது. இது உள்மை அரசியல் பிரச்சினைகளைவிட, நிவாரண, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி மீதான வலியுறுத்தலால் வெளிப்படுகின்றது. "அபிவிருத்தி மூலம் சமாதானம்" என்னும் நியாயவிளக்கம் மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் முழுமூச்சாக ஈடுபட்டுப் பணியாற்றும்போது யுத்தத்துக்குத் திரும்பும் சாத்தியக்கூறு அருகிப்போகுமென்ற சுய-விளக்க உண்மையிலிருந்து பிறப்பதாகும்.

"அபிவிருத்தி மூலம் சமாதானம்" என்னும் நியாயவிளக்கத்தின் செயற்பாடு மூலம் அது ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படும் சமாதானமும், சுபீட்சமும் வந்துசேருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆயினும் இதுவரை இடம்பெற்ற விடயங்களை வைத்துப்பார்க்கும்போது, அரசியல் விடயங்களைவிட பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதென்பது தனது உள்ளார்ந்த பிரச்சினைகளையும் கொண்டுள்ளதென்று வாதிடுவதற்கான காரணங்கள் உள்ளன. இது ஒரு போலியான இருபுடைத் தன்மைக்கு இட்டுச்சென்று, சமாதானச் செயல்முறையில் தடங்கல்களை ஏற்படுத்தி, மீண்டும் அரசியல் அடிப்படைகளுக்குத் திரும்பச் செய்துள்ளது.

டோக்கியோ கொடையாளர் மாநாட்டுக்கு முன்பாக நிகழ்வுகள், எல்ரீரீஈ அமைப்பு பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தமை, வடக்கு, கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகள் குழு (சிரான்) சம்பந்தமான பிரச்சினைகள், வடக்கு-கிழக்குப் புனர்வாழ்வு நிதியம்(NERF) மற்றும் இறுதியாக நேரடிப் பேச்சுவார்த்தைகளைத் தீர்மானிக்கவுள்ள இடைக்கால

ம.ப.பா-

4 பொருளாதார நிகழ்ச்சிநிரலும், கொடை தருநர்களும், சமாதான செயற்பாடுகளும்....

சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான பிரச்சினை குறித்து - கேதீஸ் லோகநாதனுடன் நேர்காணல் 9

14 சமாதானப் பங்குலாபம், அபிவிருத்தி மற்றும் பகிர்ந்துகொள்ளல் பிரச்சினை

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து டோக்கியோ மாநாட்டில் ஆற்றிய உரை...... 18

28 உதவியை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்....

கடந்தகால பேச்சுவார்த்தைகளில் இடைக்கால ஏற்பாடுகள் : ஒரு பொதுவான பார்வை 30

34 இடைக்கால நிர்வாகத்தினுள் மனித உரிமைகள் பேணப்படுதல் வேண்டும்....

எல்ரீரீஈ அமைப்பு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவது நிச்சயம்..... 37

ஆசிரியர்
பா.விஜயசாந்தன்

ஆசிரியர் குழு
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
கேதீஸ்வரன் லோகநாதன்
ரொஹான் எதிரிசிங்க
சுனந்த தேசப்பிரிய

தொடர்புகளுக்கு :
சமாதான நோக்கு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
24/2, 28வது ஒழுங்கை, ஓவ் பிளவர் வீதி, கொழும்பு 7.
தொ.பே : 01-2565304/6, பக்ஸ் : 074-714460
ஈ-மெயில் : cpa@sri.lanka.net
வெப்தளம் : www.cpalanka.org

நிர்வாகப் பிரச்சினை அனைத்தும் வெளிக்காட்டுவது இதையே ஆகும். இப்பிரச்சினைகள் அனைத்தும் தோற்றத்தில் பொருளாதாரத் தன்மை கொண்டிருந்தபோதிலும், உள்ளார்ந்த ரீதியில் அரசியல் முக்கியத்துவம் மற்றும் விளைவுகளைக் கொண்டவையாகும். அவை உள்மைய அரசியல் பிரச்சினைகளான அதிகாரப்பகிர்வு, இறைமை மற்றும் பன்மைத்துவம் என்பவற்றை உள்ளடக்குவதால் அவை ஓர் இறுதி அரசியல் தீர்வுக்கான வடிவமைப்பு மற்றும் உள்ளடக்கத்துக்குக் கவனம் செலுத்துவதாக அமைதல் வேண்டும். ஆரம்பத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கத்தில் அதிகாரப் பகிர்வு குறித்த உள்மைய அரசியல் பிரச்சினைகளைத் தவிர்த்துப் படிப்படியாக முன்செல்வதற்கான தீர்மானம் இருந்தபோதிலும் இப்பொழுது கவனம் சமாதானம் செயல்முறை ஓரேயடியாகச் செயலிழந்து விடாமல் மீண்டும் உயிர்த்துடிப்புடன் முன்செல்வதை உறுதிப்படுத்தும் வகையில் இயற்கையாகவே உள்மைய அரசியல் பிரச்சினைகளை நோக்கித் திரும்பியுள்ளது. ஓர் உண்மையான அர்த்தத்தில் நோக்குகையில் இரு தரப்பினருமே இப்பிரச்சினைகள் இல்லையென்று பாவனை செய்யவோ, அவற்றிலிருந்து விலகி ஓடவோ முடியவில்லை.

இது பிரத்தியேகமாக, அரசாங்கத்தரப்பிலான எண்ணக்கரு ரீதியிலான பலவீனமாகும். இது அதிகாரத்தைப் பலப்படுத்துவதில் தீவிரமான ஈடுபாடு கொண்ட அரசியல் - இராணுவ அமைப்பான எல்ரீரீஈயின் சுபாவம் குறித்த ஒரு தவறான கணிப்பீட்டின் விளைவாகும். ஒருவேளை இது ஐதேமு அரசாங்கத்தின் தொழில்நுட்பவியல் முன்னுரிமைத் தத்துவார்த்தப்போக்கு மற்றும்/அல்லது பொருளாதாரம் பிரிவினைவாத முனைப்புகளை மழுங்கடித்துச் சமத்துவத்தை ஏற்படுத்துமென்றும் கணிப்பீடு என்பவற்றால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

எல்ரீரீஈ அமைப்பு நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்து, இப்போது இடைக்கால நிர்வாகத்தில் அனைவரின் கவனத்தையும் குவிக்க முடிந்துள்ளமை இது சொல்வதற்கு இலகுவானதும், செய்வதற்கு மிகவும் கஷ்டமானதுமாகும் என்பதையே காட்டுகின்றது. "அபிவிருத்தி மூலம் சமாதானம்" என்னும் நியாயவிளக்கத்தின் செயற்பாடு சமாதானப்பொறி ஒன்று சம்பந்தமான எல்ரீரீஈ கருத்துணர்வையும், இடைக்கால நிர்வாகம் ஒன்றினூடாக அதற்கெதிரான உத்திரவாதத்தைப் பெற்றுக்கொள்ளும் உறுதிப்பாட்டையுமே வலுப்படுத்தியுள்ளது. ஐதேமு அரசாங்கம் அபிவிருத்தி மூலம் எல்ரீரீஈ அமைப்பின் அரசியல் கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யும் எதிர்பார்ப்புகளுடன் செயற்பட்டிருந்தால், எல்ரீரீஈ அமைப்பு அதற்கெதிராக இடைக்கால நிர்வாகத்தினூடாக இறுதி அரசியல் தீர்வைத் தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்ற முயலுவதாக இருக்கக்கூடும். இது ஓர் இடைக்கால ஏற்பாடாக இருந்தபோதிலும், நடைமுறைக்கு வரும்போது இது இலங்கை அரசை மீள்கட்டமைப்புச் செய்வதில் முதல்படியாகவுமே அமையும்.

எல்ரீரீஈ அமைப்பு நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்பவை அரசியல் விளைவுகளைக் கொண்டுள்ளவையென்பதையும், அரசியல் மூலதனத்தைக் கட்டியெழுப்பவும், வலுப்படுத்தவுமான விலைமதிப்பற்ற வாய்ப்புகள் என்பதையும் பூரணமாக அறிந்துவைத்துள்ளது. இச்செயல்முறையில் அவர்களின் குறைவான கட்டுப்பாடு அல்லது கீழ்நிலை பங்குதாரர் என்றவகையில் அவர்கள் இதில் சம்பந்தப்படுவது தமிழ் மக்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளென்று அவர்களின் சுய-கருத்துணர்வைப் பாதித்து, தற்போதுள்ள அரசியல் மூலதனத்தை நலிவடையச் செய்யும் இடர்வரவு கொண்டதாகவே அமையும். அவர்கள் இதை அனுமதிக்கப் போவதில்லை. இடைக்காலத் தவணையிலாவது அவர்கள் வெற்றியடைவர் என்பதை நிகழ்வுகளின் போக்கு காட்டுகின்றது. சமாதானச் செயல்முறை அரசாங்கத்துக்கு மிகவும் பெறுமதியும், வாழ்வாதாரமான முக்கியத்துவமும் கொண்டதாகும். சமாதானச் செயல்முறை பங்குடைமை அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். இந்தப் பங்குடைமையின் தன்மை தற்போதுள்ளதைப்போன்ற சந்தர்ப்பங்களில் பிணக்குக்கு உரியதாகலாம். ஆகவே இச்செயல்முறையின் ஜீவனாக விளங்குவது ஒருவர்மேல் மற்றவர் தங்கிநிற்றலாகும். அது இல்லையெனில் சமாதானச் செயல்முறை இல்லையென்றாகிறது. அபிவிருத்தி மூலம் சமாதானமென்பது எல்ரீரீஈ நலன் பிரதிநிதிகளாக இருக்கவேண்டுமென்பதை எதிர்பார்த்து நிற்கின்றது. இதன் விளைவாக அவர்கள் சமாதானச் செயல்முறை பரிணமிக்கும் அடிப்படை தமது அமைப்பின் நலன்களுக்கு விரோதமாகச் செல்லாதிருப்பதை உறுதி செய்துகொள்வர்.

அதிகார உறவுகளுக்கு மேலதிகமாக "அபிவிருத்தி மூலம் சமாதான"ச் செயல்முறையில் கவனத்திற் கொள்ளவேண்டிய வேறு பல காரணிகளும் உள்ளன. இவை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், செயல்முறையில் மிகப்பரந்த பங்கேற்பு, விசேடமாக பலவீனமானவர்களின் பங்கேற்பு, தற்போதுள்ள அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்துதல், உள்ளூர் இயலுமைகளைக் கட்டியெழுப்புதல், மற்றும் செயல்முறையில் ஒளிவுமறைவின்மை, வகைப்பொறுப்பு என்பவற்றோடு தொடர்புற்றவையாகும்.

செயல்முறை தற்போதுள்ள துன்பங்களையும், கஷ்டங்களையும் குறைப்பதற்கு மேலதிகமாக, ஜீவனோபாயங்களையும் பெற்றுக்கொடுக்க

ம.ப.பா-

வேண்டுமென்பதால் அது தவிர்க்கமுடியாதபடி வலுவளிக்கும் ஒன்றாகும். அதன் பயனாளிகள் பொருளாயத ரீதியில் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதோடு, மனித கௌரவம் மற்றும் சுயாதிபத்தியம் என்பவற்றையும் மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மனித கௌரவமும், சுயாதிக்கமும் இச்செயல்முறையின் சட்டநிலைத்தகவுக்கு வாழ்வாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதால், இச்செயல்முறையில் மனித உரிமைப்பாதுகாப்புகள் உள்ளடங்கவேண்டியதன் தீர்மானகரமான முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. எப்பொழுதும் இச்செயல்முறையின் அடிப்படை விடயம் பயத்திலிருந்து விடுதலை மற்றும் தேவைகளிலிருந்து விடுதலை என்பனவாகும்.

இது எல்ரீரீஈ அமைப்பின் நிலைமாற்றத்தோடும், அதனைப் பிரதான பிரவாகத்தோடு ஒன்றிணைப்பதோடும், உண்மையான அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கை அரசின் நிலைமாற்றத்தோடும் தொடர்பிணைப்புப் பெற்றவிடயமாகும். இவை இரண்டுமே சமாதானச் செயல்முறையின் வெற்றியில் ஒருங்கிணைவுபெற்ற, தவிர்க்கமுடியாத அம்சங்களாகும். அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் உரித்துகள் வெளிப்பாடடைவதற்கான வாய்ப்பு ஏற்பாடுகள் தெரிவுபெற்ற சிலருக்கு மாத்திரம் உரியவை அல்ல. மாறாக அவை வடக்கு, கிழக்கில் வாழும் பல்லின மக்களைத் தனியாகவும், கூட்டாகவும் உள்ளடக்குதல் வேண்டும். இதன் விளைவாக சமாதானம் மற்றும் அபிவிருத்திச் செயல்முறையில் "பகிரப்படும் ஆட்சி" மற்றும் "தன்னாட்சி" என்றும் சமஷ்டி எண்ணக் கருக்கள் கிடைநிலையாக சகல ஜனசமூகங்களையும், நலன்பிரதிநிதிகளையும் உள்ளடக்கும் வகையிலும், நிலைக்குத்தாக நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் முன்னுரிமைப்படுத்தலில் அடிமட்ட மக்களைச் சென்றடையும் வகையிலும் வியாபித்திருத்தல் வேண்டும்.

முக்கியமாக, இச்செயல்முறைக்குச் சட்டநிலைத்தகவு கிட்டவேண்டுமெனில் வடக்கு-கிழக்கில் உள்ளூர் திறன்கள், அறிவு மற்றும் அபிவிருத்தி குறித்த நிறுவன ரீதியான அனுபவங்கள் ஒதுக்கிவிடப்படாது பயன்படுத்தப்படுதல் வேண்டும். கடந்தகாலத்தை உதாசீனம் செய்து "வெற்றுத்தரை" ஒன்றில் வடக்கு-கிழக்கின் அபிவிருத்தியை வடிவமைப்பது செயல்முறை சேவையாற்ற வேண்டிய அதே ஜனசமூகங்களை அந்நியப்படுத்தும் இடர்வரைவைக்கொண்ட விடயமாகும். இது தொடர்பில் பல்தரப்புக் கொடையாளர்கள் நடாத்திய வடக்கு-கிழக்கின் தேவைகள் மதிப்பீடு முடிவுறுத்தப்பட்ட ஒன்றாகவன்றி, தொடரும் பணியாகவே நோக்கப்படுதல் வேண்டும். அகநிலையமைவுத் தேவைகளுக்கும் அப்பால் பெரும்பான்மையினரான மக்களின் ஜீவனோபாயங்கள் தங்கிநிற்கும் விவசாய மற்றும் மீன்பிடித் துறைகள் உள்ளன. தேவைகள் மதிப்பீடு இத்துறைகளுக்குப் போதிய கவனம் செலுத்தவில்லையென்ற கரிசனைக் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

சிவில் சமூகத்தின் பிரிவினரும், கொடையாளர் சமூகமும் இனங்கண்ட இப்பிரச்சினைகளுள் பல டோக்கியோ மாநாட்டின் இறுதிப்பிரகடனத்திலும் காணப்படுகின்றன. இடைக்கால நிர்வாகம் குறித்து உடன்பாடு ஏற்படுவதும், அது நடைமுறைக்கு வருவதும் அபிவிருத்தி மூலம் சமாதானச் செயல்முறையை ஆரம்பித்து வைக்கும். இது இதுவரையில் சமாதானச் செயல்முறையின் குணாம்சமாக விளங்கிய யுத்தமுமில்லை, மாதானமுமில்லை என்ற நிலைமையின் பிரிக்க முடியாத அம்சமாக நோக்கப்படலாம். ஆயினும். அந்த நிலைமைக்கும் அப்பால் சென்று அந்த நிலைமாற்றம் செய்யக்கூடிய சாத்தியவளத்தையும் அது கொண்டுள்ளது.

அபிவிருத்தி மூலம் சமாதானமென்பது சமாதானத்தின் பொருளாதார விளைவுகள் மீது கவனம் செலுத்த விழைகின்றது. இதனால் அது சமாதானத்தின் அரசியல் பொருளாதாரத்தை மீள வலியுறுத்தியுள்ளது. இது பிரச்சினைகள் நிறைந்ததும், அதேவேளையில் சாத்தியப்பாடுகள் மிகுந்ததுமான வளர்ச்சியாகும். இது ஆக்கபூர்வமான ஒன்றாக அமைவது சம்பந்தப்பட்ட தரப்பினரின் அர்ப்பணிப்புணர்வு, துணிச்சல் மற்றும் சிந்தனைத் திறன் என்பவற்றைப் பொறுத்த விடயமாகும்.

"அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் உரித்துகள் வெளிப்பாடடைவதற்கான வாய்ப்பு ஏற்பாடுகள் தெரிவுபெற்ற சிலருக்கு மாத்திரம் உரியவை அல்ல. மாறாக அவை வடக்கு, கிழக்கில் வாழும் பல்லின மக்களைத் தனியாகவும், கூட்டாகவும் உள்ளடக்குதல் வேண்டும்."

# பொருளாதார நிகழ்ச்சி நிரல்களும், கொடை தருநர்களும், சமாதானச் செயல்முறையும்



- சுனில் பஸ்தியன் -

எல்ரீரீஈ அமைப்பு பேச்சுவார்த்தைச் செயல்முறையிலிருந்து விலகிக்கொண்டதன் மூலம் தற்போது சமாதானச் செயல்முறையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை பொருளாதார முன்னுரிமைகள் எவ்வாறு சமாதானச் செயல்முறையுடன் தொடர்பு கொண்டுள்ளவென்பதை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. இந்த உறவைத் தெளிவுபடுத்துவதற்கு 2001 ஆம் ஆண்டில் நாடு எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியையும், அதுவே இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் தற்போது இடம்பெற்ற பேச்சுவார்த்தைச் சுற்றுகளுக்குச் செல்ல வழிவகுத்தது என்பதையும் நினைவில் கொள்வது பொருத்தமானதாகும்.

2001ம் ஆண்டு இலங்கையின் நவீன பொருளாதார வரலாற்றில், சுதந்திரத்துக்குப் பின்னர் முதல் தடவையாக நாடு பொருளாதார வீழ்ச்சியைக் கண்ட (மத்திய வங்கி அறிக்கைகளின் பிரகாரம் மொத்த தேசிய உற்பத்தியில் - 1.5வீதம்) ஆண்டாகும். இதற்கு நிச்சயமான மிக முக்கிய காரணி யுத்தமாகும். உலகளாவிய பொருளாதாரத் தேக்கநிலை மற்றும் காலநிலைச் சீர்கேடுகள் என்பவை ஏனைய காரணிகளாகும்.

2001 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி 77 க்குப் பிந்திய காலத்தில் இலங்கையில் தாராளவாத முதலாளித்துவத்தில் தீவிர செல்வாக்கைக் கொண்டிருந்த இருவிதமான செயற்பாட்டாளர்களின் நலன்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களைப் பாதித்தது. இதில் முதலாவது பாரிய வியாபாரத் தொழிலின் நலன்களாகும். 2001 ஆம் ஆண்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலை மற்றும் பொருளாதார வீழ்ச்சி என்பவை பிரபல வியாபாரத்தொழில் நிலையங்களின் நலன்கள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தத்தொடங்கியது. யுத்தம் தொடர்ந்தால் தமது எதிர்காலம் இருளடைந்ததாகவே இருக்குமென்பதை அவர்களுள் பெரும்பாலானோர் கண்டுகொண்டனர். இதனால் வியாபாரத்தொழில் சமூகத்தின் பிரதிநிதிகள் வெளிப்படையாகவே சமாதானத்துக்காகக் குரல்

கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இரண்டாவதாக, இப்பொருளாதார நெருக்கடி சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் போன்ற பாரிய கொடை தருநர்களின் நிகழ்ச்சி நிரல்களின் தோல்வியைக் குறித்தது. 1977 இலிருந்து இலங்கையில் இடம்பெற்ற வெளிநாட்டுதவிப் பிரவாகமும், கொடை தருநர் ஈடுபாடும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அக்கறையினால் அல்ல என்பதையும், 1977 இல் இலங்கை பின்பற்றிய பாரிய பலதரப்பு கொடைதருநர்களுக்கு ஏற்புடைய பொருளாதாரக் கொள்கையே இதற்கான காரணமென்பதையும் தற்போதைய சமாதானச் செயல்முறையில் கொடைதருநர் பாத்திரம் குறித்து உரையாடுவோர் மறந்துவிடுகின்றனர். இன்றுவரை சந்தைப் பொருளாதாரமொன்றை ஊக்கவிப்பதே பாரிய கொடைதருநர்களில் பெரும்பாலானோரின் பிரதான நோக்கமாக இருந்துவந்துள்ளது. கொடைதருநர்களைப் பொறுத்தவரையில் இந்த யுத்தம் அவர்களின் பொருளாதார நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்வதைப்பாதிக்கும் ஒரு தடைக்கல்லாகவே தென்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி உள்நாட்டு யுத்தம் இக்குறிக்கோளைப் பாரதூரமாகப் பாதித்ததையே எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. ஆகவே முரண்பாட்டுத்தீர்வு காணப்படாமல் இப்பொருளாதார நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்லமுடியாதென்பது கொடைதருநர்களுக்குத் தெளிவாகிறது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தச் சூழமைவில்தான் ஐதேமு அரசாங்கம் தற்போதைய சமாதானச் செயல்முறையை ஆரம்பித்தது. பொருளாதார நெருக்கடி காரணமாக, 2001 டிசம்பரில் ஆட்சிக்கு வந்த ஐதேமு பொருளாதாரத்தைக் கையாளவேண்டிய அதேநேரத்தில் எல்ரீரீ அமைப்புடன் பேச்சுவார்த்தைகளையும் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் எற்பட்டது. உள்நாட்டு யுத்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாது பொருளாதார வளர்ச்சி சாத்தியமில்லையென்று தெளிவாகியது.

ஐதேமு யின் சமாதானத்தை முன்னேற்றுதல் மற்றும் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் ஆகிய இரு குறிக்கோள்களைக்கொண்ட உத்தியில் பரந்த வீச்சிலான சர்வதேச ஆதரவைப் பெற்றக்கொள்வதும் முக்கியமான அம்சமாக விளங்கியது. தற்போதைய அரசியலில் தலைமைத்துவத்தின் ஏனைய பிரிவினைவிட ஐதேமு தலைமைத்துவம் இலங்கை ஏற்கனவே உலகமய முதலாளித்துவக் கட்டமைப்புகளுடன் உறுதியாக இணைக்கப்பட்டுள்ள நிலையை அதிக அளவில் புரிந்துகொண்டுள்ளதைப் போலத் தோன்றியது. அத்தோடு எமது பிரச்சினைகளை இந்தக் கட்டமைப்புகளினுள்ளேயே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று அது நன்கு புரிந்துகொண்டது. பொருளாதார விடயத்திலும், உள்நாட்டு யுத்த விடயத்திலும் இதுவே உண்மையாகும்.

துரதிருஷ்ட வசமாக எமது இடதுசாரிய மற்றும் தேசியவாத வலதுசாரிக் கருத்துரையாளர்கள் இந்த யதார்த்தத்தை மறந்துவிட்டதுபோலத் தோன்றுகின்றது. இருபத்தைந்து வருடகாலத் தாராளவாத முதலாளித்துவம் இலங்கையைப் பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் உலகமயப்படுத்தல் செயல்முறைகளுடன் உறுதியாக இணைத்துள்ளது. இந்த உலக சக்திகளால் பயன்படுத்த முனையும் ஐதேமு உத்தி ஒரு பரந்த வீச்சாளர் செயற்பாட்டாளர்களை ஈடுபடுத்தும் முயற்சியாகும்.

கடந்த 15 மாதகாலமாக ஐதேமு அரசாங்கம் பின்வரும் முக்கிய சர்வதேச செயற்பாட்டாளர்களின் ஆதரவைப் பெறமுடிந்துள்ளது.

- **நோர்வே**

ஐதேமு அரசாங்கம் பதவிக்கு வந்தவேளையில் நோர்வே எல்ரீரீ அமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இணக்கப்பாட்டாளர்/ஏற்பாட்டாளர் பாத்திரத்தை வகித்துக்கொண்டிருந்தது. ஆயினும் இதில் அவ்வேளையில் பாரிய வெற்றிகள் எதுவும் கிட்டவில்லை. ஐதேமு பதவிக்கு வந்த நாள் முதல் நோர்வேயின் முக்கிய பாத்திரம் புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைத்தாபித்து, செயற்படுத்துவதுமாகவே இருந்துள்ளது.

- **அமெரிக்கா**

ஐதேமு தலைமை முன்னெப்பொழுதும் இருந்ததைவிட உயர்ந்த மட்டத்தில் அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவைப்பெற்றுள்ளது தெளிவாகும். போருபாய ரீதியிலான காரணங்களுக்காக உலகில் எஞ்சியுள்ள ஒரேயொரு வல்லரசின் ஆதரவு முக்கியமென்பதற்கு மேலதிகமாக அமெரிக்காவின் அரசியல் ஆதரவு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிபோன்ற பலதரப்பு முகவர்நிலையங்களிடமிருந்து உதவியைப்பெற்றுக்கொள்வதிலும் தீர்மானகரமான ஒன்றாக விளங்குகின்றது. அமெரிக்கா இலங்கையின் முக்கிய வர்த்தகப்பங்காளியாகவும் விளங்குகின்றது. சமீபத்திய அறிக்கைகளின் பிரகாரம் இலங்கை அமெரிக்காவுடன் ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும் சாத்தியவளம் உள்ளது.

- **ஜப்பான்**

இலங்கையைப் பொறுத்தளவில் ஜப்பான் நீண்டகாலமாக ஓர் இருதரப்பு கொடைதருநராக விளங்கிவருகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு முகவர் நிலையங்கள் மீது ஜப்பான் கொண்டுள்ள செல்வாக்கைக் கருத்தில் கொள்ளுகையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் விடயத்தில் ஜப்பானின் உதவி வாழ்வாதாரமான முக்கியத்தைக் கொண்டதாகும்.

ஐதேமு சமாதானச் செயல்முறையில் மிகவும் உயர்வான ஒரு மட்டத்தில் ஜப்பானைத் ஈடுபடவைத்துள்ளது. இலங்கையின் சமாதானச் செயல்முறையில் ஜப்பானின் ஈடுபாடு ஜப்பானிய வெளிநாட்டுக்கொள்கையில் ஒரு புதிய திசைமார்க்கத்தின் விளைவுமாகும். இதன் பிரகாரம் ஜப்பான் தெரிவுசெய்த சில ஆசிய நாடுகளில் முரண்பாட்டுத் தீர்வுகளுக்கும் பங்களிப்புச் செய்யவிரும்புகின்றது.

- **ஐரோப்பிய யூனியன்**

ஐரோப்பிய யூனியன் ஏனைய பல முக்கிய கொடைதருநர்களை ஒன்றிணைப்பதோடு, இலங்கையின் உள்ளக மோதல்களில் தானே ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்துமுள்ளது. ஐரோப்பிய யூனியன் பலதேர்தல்களில் கண்காணிப்பாளராகப் பணியாற்றியதுடன் இலங்கையின் அபிவிருத்தியை நெருக்கமாக அவதானித்து, பேச்சுவார்த்தைச் செயல்முறைகளை ஊக்குவித்தும் வந்துள்ளது. டோக்கியோ மாநாட்டுக்கு இதனைத் தவிசாளராகப் பணியாற்றுமாறும் ஐரோப்பிய யூனியன் அழைக்கப்பட்டுள்ளது. சமாதானச் செயல்முறை காரணமாக ஐரோப்பிய யூனியன் அரசியல் புகலிடம் கோருவோரை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்புவது சம்பந்தமாகவும் இலங்கையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளது.

> *"பொருளாதார மீட்சிக்கு அவசியமான மிகவும் தீவிரமாகத் தேவைப்படும் நிதிகளை வழங்கும் அதேவேளையில் கொடைதருநர்கள் சமாதானச் செயல்முறை தொடர்ந்து முன்னேறுவதை உறுதிப்படுத்தும் கண்காணிப்பு வழிமுறையமைப்புகளை உருவாக்கியுள்ளனரா? இச்செயல்முறை எதிர்மாறான திசையில் செல்லுமாயின் அதற்குரிய கொள்கை" விருப்புத்தெரிவுகளை அபிவிருத்தி செய்துள்ளார்களா?*

- **இந்தியா**

இந்தியா இன்னமும் இலங்கையின் சமாதானச் செயல்முறையில் அக்கறை கொண்டுள்ளது. இந்தியாவை ஒரு பொருளாதாரப் பங்குதாரராகவும் நோக்குவது ஐதேமு அரசாங்கத்தின் வித்தியாசமான உத்தியின் வெளிப்படையாகவுள்ளது. இந்தியாவுடன் பொருளாதார இணைப்புகளைக் கட்டியெழுப்புவதே ஐதேமு வின் இந்தியக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. பொஜமு அரசாங்கக் காலத்தில் கையெழுத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இதற்கான அடிப்படையை வழங்கியுள்ளது. ஐதேமு அரசாங்கம் இந்தியாவுடனான பொருளாதார இணைப்புகளை தரரீதியில் ஒரு புதிய மட்டத்துக்கு உயர்த்தியுள்ளது. இதன் பெறுபேறுகள் ஏற்கெனவே வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

* * *

நாம் ஐதேமு யின் இந்த சர்வதேசமயப்படுத்தல் உத்தியை ஆய்வுசெய்தால் பொருளாதாரதேவைகளே முன்னிலை வகிப்பதைத் தெளிவாகக் காணலாம். அமெரிக்கா மற்றும் ஜப்பான் மீதான கவனமும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஆதரவுக்கான தேவை காரணமாக எழுந்ததாகும். இந்த நாடுகளுடனான இருதரப்பு ஆதரவு மற்றும் வர்த்தக உறவுகளுக்கு மேலதிகமாக, அவை பலதரப்பு முகவர் நிலையங்களில் முக்கிய செயற்பாட்டாளர்களாகவும் விளங்குகின்றன. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற மிகவும் முக்கியமான பலதரப்பு முகவர் நிலையங்களிடமிருந்து இலங்கை எதிர்பார்க்கும் மட்டத்திலான உதவிகளைப் பெறுவதாயின், இந்த இரு நாடுகளினதும் ஆதரவு தீர்மானகரமான முக்கியத்துவம் கொண்டதாகும். இவ்விரு முக்கிய தேசங்களும் வழங்கும் அரசியல் ஆதரவு பிரதான கொடை தருநர்களிடமிருந்து போதிய உதவிகிட்டுவதை உறுதிசெய்யும். நிலைமையை மேலும் பூரணப்படுத்தும் வகையில் அயல்நாடான இந்தியாவுடன் பொருளாதார உறவுகள் முன்னணிக்கு வந்துள்ளன. இந்த உறவுகள் வெற்றிகரமாக அபிவிருத்தியடைந்ததால் அது பொருளாதாரத்தில் பரந்த வீச்சிலான செல்வாக்கைச் செலுத்துமென்று எதிர்பார்க்கலாம்.

நாம் 2002 ஆம் ஆண்டின் சாதனைகளை நோக்கினால் சர்வதேச செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் ஐதேமு உத்தி ஏற்கெனவே பல அனுகூலங்களைப் பெற்றுள்ளதைக் காணலாம். புரிந்துணர்வு ஒப்பந்த மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்திரநிலை மற்றும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி பொருளாதார மீட்புக்கான அர்ப்பணிப்புணர்வை ஐதேமு அரசாங்கம் பாரிய கொடை தருநர்களிடமிருந்து பெற்றுக்கொண்டது. மிகவும் முக்கியமான இருதரப்புக் கொடைதருநராகிய ஜப்பான் பல முக்கிய கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு ஏற்கெனவே சம்மதித்துள்ளது. உலக வங்கி ஒரு புதிய தேச உதவி உத்தியொன்றை அறிவித்துள்ளது. இது நான்கு வருடகாலத்துக்கு 800 மில்லியன் டொலர் வரவு-செலவுத்திட்டத்தைக் கொண்டதாகும். சர்வதேச நாணய நிதியம் 560 மில்லியன் டொலர் கடனுக்கு அங்கீகாரம்

வழங்கியுள்ளது. இது வறுமைக்குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதித்திட்டத்தின் முழு அளவுப் பங்கு ஆகும். 2002 ஏப்ரல் மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி மூன்று வருடங்களுக்கு 700 மில்லியன் டொலர் உதவிவழங்கும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது.

பாரிய கொடைதருநர்களிடமிருந்து கிடைத்த இந்த உதவி வாக்குறுதிகளுக்குப் பிரதியுபகாரமாக ஐதேமு சந்தைப்பொருளாதாரத்தின் முன்னேற்றத்துக்கு அவசியமான பொருளாதார சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நிதியியல் முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டம், நாணயச் சட்டத்துக்கான திருத்தம், தனியார் மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை தொடருதல், தனியார்துறைப் பங்கேற்புக்கு மேலும் பல புதிய துறைகளைத் திறந்துவிடுதல், காணி மற்றும் உழைப்பாளர் சந்தைகளை மேலும் தாராளமயப்படுத்தும் தொடர்முயற்சிகள் என்பவை இத்திசையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகும். இவ்வாறாகப் புரிந்துணர்வு ஒப்பந்த மூலம் ஏற்பட்ட ஸ்திரமான சூழல் ஐதேமு அரசாங்கம் 2001இன் ஸ்திரமற்ற சூழலால் தடைப்பட்ட முதலாளித்துவ அபிவிருத்திச் செயல்முறையை மீண்டும் மீட்டெடுப்பதற்குத் துணையாக இருந்துள்ளது. 2002ஆம் ஆண்டின் வளர்ச்சிப் புள்ளிவிபரங்கள் இவற்றைப் பிரதிபலிக்கின்றன. இதுவரை சமாதானச்செயல்முறை மூலம் ஏற்பட்ட முக்கியமான சாதனை இதுவேயாகும்.

இதற்கு எதிர்மாறாக, சமாதான செயல்முறையின் அடுத்த அபிவிருத்திமேடையாகிய நிவாரண மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறையாக்கம் பல பிரச்சினைகளுள் சிக்குண்ட நிலையிலுள்ளது. பேச்சுவார்த்தைச் செயல்முறையின் படிப்படியான அணுகுமுறை காரணமாக வடக்கு, கிழக்கின் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப-குழு (சிரான்) தாபிக்கும் தீர்மானத்துக்கமைய இந்த அமைப்பு 2002 இறுதியிலேயே ஏற்படுத்தப்பட்டது. 2002 நவம்பரில் சிரான் அமைப்பின் முதலாவது கூட்டம் இடம்பெற்றது. 2002 நவம்பரில் ஒஸ்லோவில் இடம்பெற்ற கூட்டத்தில் சிரான் நிதியளிப்புக் குறித்து வேண்டுகோள் விடுத்தது. 70 மில்லியன் டொலர்கள் வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. 2003 ஜனவரியில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இந்த நிதியின் பாதுகாவலராக உலகவங்கி செயற்படவேண்டுமென்று இணக்கம் காணப்பட்டது. கருத்திட்டங்களை இனங்காணும் கால எல்லைகள் வகுத்தமைக்கப்பட்டதோடு, பெப்ரவரி நடுப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையங்களையும் தீர்மானிக்கவேண்டுமென்றும் இணக்கப்பாடு காணப்பட்டது. சிரான் அமைப்பு சில கருத்திட்டங்களை இனங்கண்டுள்ளபோதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உருவாகின. ஆயினும் சிரான் இனங்கண்ட கருத்திட்டங்கள் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமான அனைத்துமடங்கும் திட்டமாக அமையாததே பாரிய பிரச்சினையாகவுள்ளது. இதனால்தான் பாரிய, பலதரப்புக்கொண்ட தருநர்கள் வடக்கு, கிழக்குக்கான தேவை மதிப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டனர். இது வடக்கு கிழக்கின் தேவைகளை இனங்காணும் மேலும் அனைத்துமடங்கும் ஓர் ஆவணமாகும். இது டோக்கியோ மாநாட்டில் ஒரு முக்கிய ஆவணமாக விளங்கியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பெறுபேறு குறித்த எமது பகுப்பாய்வு சரியாயின் சமாதானச் செயல்முறையில் ஈடுபடுவதற்குக் கொழும்பு ஆளும் வர்க்கத்தை முன்தங்கிய பிரதான காரணியாகிய பொருளாதார நெருக்கடி இப்பொழுது முன்னணியில் இல்லை. இதற்கு நேரெதிராக வடக்கு கிழக்குக்கான நிவாரண, புனர்வாழ்வுத்திட்டமொன்று இன்றும் இறுதி வடிவம் பெறாத நிலையிலுள்ளது. நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இவற்றின் தாற்பரியங்கள் எத்தகையவையாக அமையப்போகின்றன? தற்போதைய ஐதேமு தலைமையின் செல்வாக்குமிக்க பிரிவினர் பொருளாதாரத்தைச் சரியான பாதைக்குக் கொண்டுவரும் தேவைகாரணமாக மாத்திரமன்றி, அவர்கள் குறுகிய தேசியவாத மாயப்போக்குகளால் பாதிப்புறாத காரணத்தாலும் சமாதானச்செயல்முறையில் அக்கறையுள்ளவர்கள் போலக் காணப்படுகின்றனர். இவர்களின் கண்ணோட்டங்கள் நவீன, சர்வதேசப்போக்குகளைப் பிரதிபலிப்பவையாகவும், காணப்படுகின்றன. இத்தகைய தலைமைத்துவத்தின் இடத்தை இத்தகைய தரிசனம் ஒன்று இல்லாத வேறொரு குழு பிடித்துக்கொண்டால் என்ன நிகழும்? சமாதானத்துக்கான ஆர்வம் பேணப்படுமா?

## வெளிநாட்டு உதவி அரசியல்

பொருளாதாரத்துக்கும், சமாதானச் செயல்முறைக்குமிடையிலான உறவு குறித்து இந்த அவதானிப்புகள் வெளிநாட்டு உதவியின் அரசியல் தன்மையைக் காட்டுகின்றது. இது பொருளாதார நிபுணர்களின் ஆதிக்கதிலிருக்கும் பல முகவர் நிலையங்களால் உதாசீனப்படுத்தப்படும் ஓர் அம்சமாகும். பொருளாதார மீட்சியை ஆதரிப்பதால் ஏற்படும் அரசியல் விளைவு சலுகைபெற்ற ஆளும் வர்க்கம் பேச்சுவார்த்தைமூலமான ஒரு தீர்வுக்கான நாட்டத்தைக் கைவிடுவதாக அமையக்கூடும். சமாதானச் செயல்முறையின் இத்தீர்மானகரமான கட்டத்தில் கொடைதருநர்கள் சமாதானச் செயல்முறையின் நிண்டகால நிலைபேற்றுத் தன்மை குறித்துக் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. கொடைதருநர்களின் முரண்பாட்டுத்தன்மையே செலவுநிறைந்த யுத்தம் தொடர்வதற்கான தீர்மானகரமான காரணியாக அமைந்ததே இதற்கான காரணமாகும். 1977இல் இலங்கை பொருளாதாரத்தை தாராளமயப்படுத்தியது முதல் இலங்கைக்கான கொடை தருநர் ஆதரவு வாழ்வாதாரமான முக்கியத்துவத்தை கொண்டிருந்து வந்துள்ளது. ஆயினும் 1977இல் பெருமளவிலான கொடைதருநர்களில் முக்கிய கரிசனை விடயம் சந்தைப்பொருளாதாரம் அபிவிருத்தியுறவேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது. 1977 இல் வடக்கு-கிழக்கு மோதலின் பின்னணி அமைந்திருந்தபோதிலும், கொடைதருநர்கள் இந்தப்பிரச்சினைகளில் அவ்வளவாக

அக்கறை கொண்டிருக்கவில்லை. தொண்ணூறுகளின் ஆரம்பம் வரையில் மனித உரிமை மீறல்கள், அரசியல் வன்செயல் மற்றும் இனத்துவக்கலவரங்கள் கொடைதருநர்களின் பொருளாதாரம் சம்பந்தமான அவதானத்தைப் பாதிக்கவில்லை. சலுகைபெற்ற ஆளும் வர்க்கம் செலவுமிக்க யுத்தத்தைத் தொடர்ந்த ஒரு வாழ்வாதாரமான காரணம் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டதாகும். இத்தாராளமயமாக்கலில் கொழுப்பிலுள்ள சலுகைபெற்ற ஆளும்வர்க்கத்தினுள் செல்வத்தைத் திரட்டிக்கொள்வதற்கும் பல வழிகளைத் திறந்துவிட்டது. இப்புதிய வாய்ப்புகளும், குறுகிய தேசியவாத உணர்வுகளும் சேர்ந்து வியாபாரத்தொழில் சமூகத்தில் ஆதரவுக்கும் வழிசமைத்தன. இலாபமீட்டாத தொழில்கள் மூடிவிடுவது, போன்ற பொருளாதார சீர்திருத்தங்கள் அரசாங்க நிதிநிலைமைகளைச் சீர்திருத்தின. இதற்கு மேலதிகமாக பொருளாதாரத்தின் சுமைகளைக் குறைத்தமை என்பவை அரசாங்கம் செலவுநிறைந்த யுத்தத்தைக்கொண்டு நடத்துவதைச் சாத்தியமாக்கின. கொடைதருநர்களைப் பொறுத்தவரையில், தாராளமயமாக்கல் உதவி வழங்கும் நாடுகளுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளைத் திறந்துவிட்டது. ஆகவே அரசியல் சலுகை பெற்றோர், வியாபாரத்தொழிலில் சலுகை பெற்றோர், கொடை தருநர்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் வியாபார நலன் பிரதிநிதிகள் அனைவருமே மகிழ்ச்சியடைந்தனர். தாராளமயவாதத்தின் சிற்பி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆறு மாதங்களில் யுத்தத்திற்கு தீர்வு காணமுடியும் என்ற விடயம் மாத்திரமே ஒரு பிரச்சினையாகவிருந்தது.

ஆயினும், பல காரணிகளின் நிமித்தம் இந்த நிலைமை நீடிக்க முடியவில்லை. உள்ளக நிலைமையைப் பார்க்கும்போது வடக்கில் ஓர் உள்நாட்டு யுத்தமும், தெற்கில் ஓர் அரசு விரோத எழுச்சியும் சேர்ந்து நாட்டை ஸ்தம்பிதநிலை கொழும்பிலுள்ள முகவர் நிலையங்களில் கூட அரசு விரோதக் கிளர்ச்சியாளர்களின் வன்செயல்கள் மற்றும் அதற்கு எதிரான அரசின் வன்செயல்களின் மோசமான காட்சிகளிலிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை. ஸ்திரநிலையின்மை காரணமாகப் பல கருத்திட்டங்களைச் செயற்படுத்த முடியவில்லை. படிப்படியாக ஒரு சிறுபான்மையினராகிய மனித உரிமைக் குழுக்களின் இயக்கங்களும், போராட்டங்களும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கின. சர்வதேச ரீதியில் கொடையாளர் முகவர் நிலையங்களிடையே உள்ளக முரண்பாடுகள் நடுநாயகமான பிரச்சினையாகக் கருதப்படத்தொடங்கியது. முதலாளித்துவத்துக்குப் பாதுகாப்பான ஒரு புதிய உலக அமைப்புக்கும் ‘வரலாற்றின் முடிவுக்கும்’ பதிலாக உலகத்தில் உள்ளக முரண்பாடுகளும், ஸ்திரநிலையின்மை, மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வாயிற்படியில் அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோரின் தொல்லை என்பவை உருவாகத் தொடங்கின. உள்ளக முரண்பாடுகளால் உருவெடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அபிவிருத்தி உதவி எவ்வாறு பயன்படலாம் என்பது குறித்த எண்ணிறந்த ஆய்வுகள் இடம்பெற்றன.

இக்காரணிகள் இலங்கையில் பணியாற்றும் கொடைதருநர் முகவர்நிலையங்களின் கொள்கை மாற்றத்துக்கு வழிவகுத்தன. ‘90களின் ஆரம்பத்திலிருந்து கொடைதருநர் விவாதங்களினுள் நடுநாயகமான இடத்தைப் பிடித்துக்கொண்டது. நாடுகளினுள் நிலவும் முரண்பாடுகளேயாகும். தாம் நீண்டகாலமாக உதாசீனம் செய்துவந்த ஒரு யதார்த்தத்துக்குக் கொடை தருநர்கள் பிரதிவிளைவைக் காட்டத்தொடங்கினர். 2001ஆம் ஆண்டளவில் யுத்தம் கொடைதருநர் நிகழ்ச்சிநிரலையே குடைசாய்க்கத் தொடங்கிவிட்ட காரணத்தால் அதை மேலும் உதாசீனம் செய்வது இயலாத காரியமாயிற்று.

2002இல், இப்பொழுது அதிகரித்த முரண்பாட்டுக் கூருணர்வைப் பெற்றுக்கொண்ட கொடைதருநர்கள் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு உதவி வழங்கினர். இதன்காரணமாக அவர்கள் இலங்கையின் சலுகைபெற்ற ஆளும் வர்க்கம் பேச்சுவார்த்தைச் செயல்முறையில் பிரவேசிக்க ஊக்கியாகவிருந்த பாரிய காரணியை அகற்றியுள்ளனர். ஆயினும் நீண்டகால சமாதானச் செயல்முறையின் நிலைபேறான தன்மையைப் பேணுவதற்கும் சீர்திருத்தச் செயல்முறை பிறப்பிக்கக்கூடிய ஏனைய முரண்பாடுகளைக் கையாளுவதற்கும் அவசியமான கொள்கை வழிமுறையமைப்புகள் இதனுள் ஒன்றிணைப்புச் செய்யப்பட்டுள்ளனவா என்பதே முக்கிய கேள்வியாகின்றது. பொருளாதார மீட்சிக்கு அவசியமான மிகவும் தீவிரமாகத் தேவைப்படும் நிதிகளை வழங்கும் அதேவேளையில் கொடைதருநர்கள் சமாதானச் செயல்முறை தொடர்ந்து முன்னேறுவதை உறுதிப்படுத்தும் கண்காணிப்பு வழிமுறையமைப்புகளை உருவாக்கியுள்ளனரா? இச்செயல்முறை எதிர்மாறான திசையில் செல்லுமாயின் அதற்குரிய கொள்கை விருப்புத்தெரிவுகளை அபிவிருத்தி செய்துள்ளார்களா? அல்லது 1977 ஐப்போன்று சமாதானச் செயல்முறை தவிர்ந்த பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்யும் நிலைப்பாட்டைக்கொண்ட சூழ்நிலைக்கே மீண்டும் வந்துள்ளளோமா?

இவ்விடயத்தில் பிரத்தியேக கரிசனைக்குரியோராக விளங்குவோர் கொடைதருநர்களாவர். இந்த முகவர் நிலையங்களின் பிரதான அக்கறைக்குரிய விடயம் பொருளாதார வளர்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. முரண்பாடுகளைப் பொறுத்தவரையில் பொருளாதார அபிவிருத்தி அவற்றுக்கும் தீர்வுகாணுமென்பதே இந்த முகவர் நிலையங்களின் அடிப்படை நம்பிக்கையாக இருந்து வந்தது. அரசியலற்ற பொருளாதார வளர்ச்சி குறித்த இந்த அரசியல் கலப்பற்ற கண்ணோட்டத்தில் வளர்ச்சிச் செயல்முறையின் பிரிக்கமுடியாத பகுதியாகிய முரண்பாடுகளைக் கையாளும் அடிப்படைக் கைக்கருவிகள் எதுவுமே கிடையாது. சில வேளைகளில் இந்த அடிப்படை நம்பிக்கை இன்னமும் இந்த முகவர் நிலையங்களில் ஆதிக்கம் செலுத்துவது போலவும், முரண்பாடுகள் குறித்து இடம்பெற்ற சகல விவாதங்களும் இந்த உலகக் கண்ணோட்டத்தை மாற்றியமைக்கவில்லையெனவும் தோன்றுகின்றது.

# சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான பிரச்சினை குறித்து.....

## ஒரு நேர்காணல்



சமாதானம், அபிவிருத்தி மற்றும் அவற்றுக்கிடையிலான இணைப்புறவுகள் குறித்த பரந்த வீச்சிலான பிரச்சினைகள் சம்பந்தமாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளரும், முரண்பாடு மற்றும் சமாதானப் பகுப்பாய்வு அலகின் தலைவருமான *கேதீஸ் லோகநாதனுடன்* நடத்திய உரையாடல்....

**கே : டோக்கியோ கொடையாளர் மாநாடு இடம்பெற்ற சூழமைவு குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும் சுருக்கமாக விளக்கமளிக்க முடியுமா?**

2002 நவம்பர் 25ந் திகதி இலங்கையில் சமாதானச் செயல்முறைக்கு உதவும் நோக்கில் கொடையாளர்/ சர்வதேச சமூகத்தினால் ஒஸ்லோவில் ஒழுங்கு செய்யப்பட்ட கொடையாளர் மாநாட்டைத் தொடர்ந்து, 2003 ஜூனில் டோக்கியோவில் ஒரு முழு அளவிலான கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தயாரிப்புகள் செய்யும் வகையில் வாஷிங்டன் டி.சி.யில் ஒரு மாநாடு இடம்பெற்றது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினால் தடைசெய்யப்பட்ட வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் அமைப்புகளின் நிரலில் எல்ரீரீஈ அமைப்பும் இடம்பெற்றிருப்பதால் அந்த இயக்கம் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை. எல்ரீரீஈ அமைப்புக்கு டோக்கியோ மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் அதில் கலந்துகொள்ளாமைக்கு இதுவும் ஒரு காரணமென்று தெரிவித்திருந்தனர். எல்ரீரீஈ அமைப்பின் தீர்மானத்தைப் பொருட்படுத்தாது கொடையாளர் சமூகமும், இலங்கை அரசாங்கமும் திட்டமிட்டவாறு டோக்கியோ மாநாட்டை நடத்தி முடித்தனர். நோர்வே மற்றும் ஜப்பான் விசேட பிரதிநிதிகள் எல்ரீரீஈ அமைப்பை மாநாட்டில் பங்குபற்றவைக்கும் கடைசி நிமிட முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும், எல்ரீரீஈ அமைப்பு முடிவைமாற்ற மறுத்துவிட்டது.

2002 டிசம்பர் மாதத்தில் அரசாங்கம் “இலங்கையை மீளப்பெறல்” ஆவணத்தை வெளியிட்டது. இது அடிப்படையில் அரசாங்கத்தின் இலட்சிய தரிசனத்தையும், முன்னுரிமைகளையும் வெளிப்படுத்தும் ஒன்றாகும். உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐ.நா.முறைமை தமது “வடக்கு, கிழக்கில் முரண்பாட்டினால் பாதிப்புற்ற பிரதேசங்களில் தேவைகள் மதிப்பீடு'' ஆவணத்தை 2003 ஏப்ரல் ஆரம்பத்தில் வெளியிட்டனர். இந்த இரு ஆவணங்களும் ஒன்றாக்கப்பட்டு, ஜூன் டோக்கியோ கொடையாளர் மாநாட்டில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட “விருப்ப நிரலின்” அடிப்படையை ஆக்கியது.



உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும் டோக்கியோ மாநாட்டுக்கு முன்னரே, "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தில் தெளிவாகவே பூரண நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனவென்பதை இங்கு வலியுறுத்திக் கூறுதல் வேண்டும். 2003 ஏப்ரல் மாதத்தில் வாஷிங்டனில் உலகவங்கி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் அவர்கள் "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டதோடு, அடுத்த நான்கு வருடகாலத்தில் அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாகவும் அறிவித்தது. இந்த நிதிகள் இலங்கைக்கான புதிய தேச உதவி உத்தித் திட்டத்தின்கீழ் (CAS) கையாளப்பட்டு "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தின் அபிவிருத்திக் குறிக்கோள்களை எட்டுவதற்கு உதவிவழங்கப்படுமென்று இந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. இரண்டு வாரங்களுக்குப் பின்னர் உலகவங்கி 567 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கும் முடிவை அறிவித்தது. இது இலங்கைக்கான உரிய பங்குகளில் 100 சதவீதமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் வறுமைக்குறைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழான (PRGF) கடன் ஏற்பாடுகள் அரசாங்கத்தின் "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தின் அடிப்படையிலான பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஆதரவளிப்பதன்மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து வறுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதாகுமென்றும் அது தெரிவித்தது.

> *'எல்ரீரீஈ உதவிநிதிகளைத் தானே எடுத்துக்கொள்ளும் என்னும் பீதிவிடயத்தில், நிவாரண மற்றும் அபிவிருத்தி உதவிகள் வடக்கு-கிழக்கில் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது குறித்து கொடையாளர் சமூகம் விழிப்புடனிருக்குமென்று நான் கருதுகின்றேன்.'*

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் டோக்கியோ கொடையாளர் மாநாடு முக்கியமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட அரங்காக அமையவில்லை. உண்மையில், முக்கியமான முடிவுகள் டோக்கியோ கொடையாளர் மாநாட்டுக்கு முன்னராகவே கொடையாளர் சமூகத்தினால் எடுக்கப்பட்டுவிட்டன என்று கூறுவதில் தவறில்லை. எல்ரீரீஈ அமைப்பை மாநாட்டில் பங்குபற்றவைத்து, அபிவிருத்தி உதவியைப் பேச்சுவார்த்தைகளுடனும், மனித உரிமைகளிலான முன்னேற்றத்துடனும், தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட இடைநிலைகளுடனும் இணைத்து பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு அரசாங்கத்தின் மீதும், எல்ரீரீஈ அமைப்பின் மீதும் வலியுறுத்துவதே இம்மாநாட்டின் நோக்கமாக அமைந்தது.

**கே : இலங்கைக்கான நிவாரண முயற்சிகள் 1995-2002 காலப்பகுதியில் பொஸ்னியாவில் 6 பில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டு, மக்களுக்கு உருப்படியாக எந்தவிதமான அனுகூலமும் கிட்டாமற்போனது போன்று முடிவடையும் ஆபத்து எந்த அளவுக்கு உள்ளது?**

இந்த உதவியைப் பொறுத்தவரையில் அதைப்பெற்று அதை உள்வாங்கக் கூடிய பொருளாதாரத்தின் இயலுமை சம்பந்தமான ஒரு விடயமாகும். பொஸ்னியாவில் உண்மையில் என்ன நடந்தது என்பது சம்பந்தமாக நான் எந்தவிதமான நிபுணத்துவ அறிவையும் பெற்றவனல்ல. ஆயினும் இந்தக்கேள்வி இலங்கையின் சூழ்நிலையோடு இயைபுள்ளதாகையால், இது குறித்த சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இலங்கை பிரத்தியேகமாக 1978 பொருளாதார தாராளமயத்தோடு பல்தரப்பு (உலகவங்கி, சாவ்தேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி) உதவிகளைப் பெற்றுவந்த ஒரு நாடாகும். தென்கிழக்காசியாவிலேயே பிரெட்டன் வூட்ஸ் இரட்டையர்களின் திறந்த பொருளாதாரக் கொள்கையை முதன்முதலாக வெளிப்படையாக அங்கீகரித்த நாடு இலங்கையாகும்.

ஆயினும் இலங்கையில் வெளிநாட்டுதவியின் உண்மையான பயன்பாட்டு மட்டமும், மிகவும் கீழ்நிலையிலேயே இருந்துவந்துள்ளது. வெளியக மூலவளத்திணைக்களம் சேகரித்த புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1981-1990 காலப்பகுதிக்கான வெளிநாட்டு உதவிப்பயன்பாடு சுமார் 25வீதம் ஆகும். 1990-95 காலப்பகுதியில் இது 21வீதமாக வீழ்ச்சியடைந்தது. தற்போதைய உதவிப்பயன்பாடு 16-18வீதம் வீழ்ச்சியில் அமைந்துள்ளது. வெளிநாட்டுதவியின் இக்குறைகளை பயன்பாட்டுக்குத் தெளிவாகவே போர் ஒரு தீர்மானகரமான காரணமாக விளங்கியிருந்தபோதிலும், அதுதான் ஒரேயொரு காரணமென்று கூறிவிட முடியாது. "சமாதானமும் அபிவிருத்தியும் டோக்கியோவுக்கான பாதை" என்னும் தலைப்பில் சமீபத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்த கருத்தரங்கொன்றில் சகபாடியொருவர் கூறியதுபோன்று, மிகச்சிறந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் அரசின்

அபிவிருத்திச் செயல்முறையில் பங்குபற்றுமாறு மக்களுக்கு அழைப்புவிடுப்பதற்குப் பதிலாக, அரசு மக்களின் அபிவிருத்திச் செயல்முறையில் இணைந்துகொண்டது. இங்குதான் பங்கேற்பு அபிவிருத்திக்கும், விநியோகத் திசைமார்க்கம் கொண்ட மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் அபிவிருத்திக்குமான வேறுபாடு உள்ளது.

அபிவிருத்தி நிதியின் குறைவான பயன்பாட்டு வீதத்துக்கான இன்னுமொரு காரணம் இலங்கை நிர்வாகத்தின் செயலின்மையாகும். இச்சூழமைவிலேயே இலங்கைப் பிரதமர் டோக்கியோ கொடையாளர் மாநாட்டில் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் உதவிகளை மேலும் சிறந்த வீதத்தில் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் புதிதுபுனைதல் வழிமுறையமைப்புகள் ஏற்படுத்தப்படுமென்றும், வழங்கப்படும் உதவி பயனாளிகளைச் சென்றடைவது உறுதி செய்யப்படுமென்றும் தெரிவித்தார். இது யுத்தத்தால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்கில் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி உதவிகளை எல்ரீரீஈ தலைமையில் கையாளக்கூடிய வகையில் வடக்கு, கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதையும் உள்ளடக்கும்.

**கே: பெருமளவிலான நிதியுதவிகள் அனேகமான சந்தர்ப்பங்களில் துஃபிரயோகம் மற்றும் ஊழல்கள் மூலம் விரமாகின்றன. இது நிகழாமல் தடுப்பதற்கான போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? மேலும், எல்ரீரீஈ கட்டுப்பாட்டின் கீழான இடைக்கால நிர்வாகத்துக்கு வழங்கப்படும் நிதிகள் எல்ரீரீஈ நிதிக்களஞ்சியத்துக்கே போய்ச்சேருமென்று தெற்கில் நிலவும் பீதி குறித்த உங்களின் கருத்துரை என்ன?**

குறித்துரைத்த நோக்கங்களுக்காக அல்லது இலக்குக் குழுக்களுக்காக ஒதுக்கப்படும் அபிவிருத்தி அல்லது நிவாரண உதவிகள் பல வழிகளில், வேறு நோக்கங்களுக்காக உபயோகப்படலாம். இத்தகைய முதலாவது நிதி உபயோகம் கொடையாளர்கள் மற்றும் பெற்றுக்கொள்பவர்களின் அதிகாரிகளைப் பராமரிப்பதில் வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு உயர்வான சம்பளங்கள், ஊதியங்கள், உதவிப்படிகள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. கொடையாளர்கள் உள்ளூர் ஆலோசகர்ளுக்கு வழங்கும் ஊழியங்களுக்கும், அரசு பணிக்கமர்த்தும் நிபுணர்களால் மற்றும் ஆலோசகர்களுக்கு வழங்கும் ஊதியங்களுக்குமிடையில் பாரிய வேறுபாடு நிலவுகின்றது. ஆயினும் இவை "முறைமையோடு" உள்ளமைவான ஒருவிடயம் என்பதோடு, இவை "துஷ்பிரயோகம்" அல்லது ஊழல் என்னும் விடயப்பரப்பினுள் வருவதில்லை. எவ்வளவுதான் மோசமாக இருந்தபோதிலும் இந்த முறைமை தொழிற்படுவது இவ்வாறேயாகும். இதற்குச் சில திருத்த நடவடிக்கைகள் அவசியம்.

பல்வேறு பொதுத்துறைகளின் தலையீடுகளில் நிதிகள் ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் மூலம் வெளியேறுவது மிகவும் பாரதூரமான விடயமென்பதை சர்வதேச ஒளிவு மறைவின்மை அமைப்பு (Transparency International) சுட்டிக்காட்டியுள்ளது. தற்போது இலங்கையில் ஊழல் சகல மட்டங்களிலும் தலைவிரித்தாடுகின்றது. அது அரசாங்கத் திணைக்களங்களில் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. ஊழல் பெரிய தொழில்முயற்சிகள், மத்திய மற்றும் மாகாண அதிகார பீடங்கள் அனைத்திலும் ஊறிப்பரவியுள்ளது. இது சிவில் சமூக மற்றும் அரசியல் மட்டத்தில் கையாளப்படவேண்டிய ஒரு விடயப்பரப்பாகும். இதைச் சுயநலமின்மை மற்றும் மனசாட்சிக்கு விண்ணப்பம் செய்வதோடு விட்டுவிட முடியாது. பயனுறுதிமிக்க கண்காணிப்பு மற்றும் சமநிலைப்படுத்தும் காரணிகளை வகுத்தமைக்கவேண்டும். இது விடயத்தில், மேலிடங்களில் ஊழலைக் கையாளுவதில் இலஞ்ச ஆணைக்குழுவின் பயனுறுதியற்ற தன்மையும் கவலையளிக்கும் விடயமாகும்.

எல்ரீரீஈ உதவிநிதிகளைத் தானே எடுத்துக்கொள்ளும் என்னும் பீதிவிடயத்தில், நிவாரண மற்றும் அபிவிருத்தி உதவிகள் வடக்கு-கிழக்கில் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது குறித்து கொடையாளர் சமூகம் விழிப்புடனிருக்குமென்று நான் கருதுகின்றேன். உலக வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படுவதும், உலக வங்கியினால் இனங்காணப்படும் சர்வதேச கணக்காய்வு நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்படுவதுமான வடக்கு, கிழக்கு புனரைமைப்பு நிதியம் (NERF) ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்ற பிரேரணை காரணமாகவே இத்தகைய பீதி வலுப்பெற்றது. கணக்காளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் பாராளுமன்றத்தின் மேற்பார்வை இல்லாமற்போவதே இதற்கான காரணமாகும். ஆகவே இப்பொழுது வடக்கு, கிழக்குக்கு வழங்கப்படும் நிதிகள் எல்ரீரீஈ அமைப்பையன்றி உண்மையில் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு உலகவங்கியைச் சேர்ந்ததாகும். எல்ரீரீஈ வடக்கு, கிழக்கு மக்களைபிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைப்புகளில் ஒன்று மாத்திரமேயாகும். எல்ரீரீஈ அமைப்பு ஒரு பிராந்தியமல்ல, ஒரு மக்களுமல்ல.

**கே: உயர்வான வளர்ச்சிமட்டங்களை ஈட்டிய அனேகமான ஆசிய நாடுகள் ஒப்பீட்டளவிலான ஸ்திரமான அரசியல் சூழலைக்கொண்டுள்ளன. (சிங்கப்பூர், மலேசியா). இலங்கையில் தற்போதுள்ள ஜனநாயக நிறுவனங்களை**

**வைத்துநோக்கும்போது இதை இலங்கையிலும் ஈட்டமுடியுமென்று எண்ணுகிறீர்களா?**

“இலங்கையை மீளப்பெறல்” ஆவணம் நிலைபேறான 10 வீத வருடாந்த வளர்ச்சியை ஈட்டிக்கொள்வதே நோக்கமென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. ஆயினும் அது மேலும் ஏனைய நாடுகளின் சாதனைகள் குறித்துப்பேசுவதோடு, சீனா தனது குறைந்த ஆரம்ப வருமானம் மற்றும் பாரிய சந்தைப்பொருளாதார மாற்றத்துடன் 10 வீதவளர்ச்சி வீதத்தையும், மற்றும் போட்ஸ்வானா தனது வைரங்கள் மற்றும் ஊழலற்ற ஆட்சிமுறை காரணமாக 10 வீதவளர்ச்சி வீதத்தையும் நீண்டகாலமாகப் பேணிவந்திருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

அப்படியானால், “இலங்கையை மீளப்பெறல்” ஆவணம் எந்த அடிப்படையில் 10வீதம் வளர்ச்சியை ஈட்ட முடியுமென்று முடிவுசெய்துள்ளது என்பது முக்கியமான கேள்வியாகும். மத்தியவங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜயவர்த்தன 2003-2006 காலப்பகுதிக்கு 6-5 வீத வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றார். அதேவேளையில் நீண்டகால அடிப்படையில் 8-10 வீதம் நிலைபோறான வளர்ச்சிக்கு இலக்குவைக்கலாமென்றும் தெரிவிக்கின்றார்.

10வீதம் வளர்ச்சி குறித்த ஒரு திசை ஈடுபாடும், “இதைச்சாதிக்க முடியும்” என்னும் உறுதிப்பாடும் விந்தையானமுறையில் உற்பத்தியியல்வாத, சேவையடிப்படையிலான துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடும். இதனால் பெறுமதிசேர்க்கப்படுதல் மற்றும் பொருளாதாரத்தில் பின்னோக்கிய மற்றும் முன்னோக்கிய இணைப்புறவுகள் இல்லாமற்போகக்கூடும் மேற்கூறிய பொருளாதார வளர்ச்சிப்பாங்குகள் உயர்வான வளர்ச்சி வீதங்களில் பிரதிபலித்தபோதிலும், நிலைபேறான. சமநிலையான அபிவிருத்திக்கான அடிப்படை அமையாமலே போகக்கூடும். உற்பத்தியில் அதிகரிப்பு இல்லாமலே வளர்ச்சிவீதங்களை அதிகரிக்கலாமென்பதைத் தத்துவரீதியிலும், சுய-பரீட்சாத்த ரீதியிலும் செய்துகாட்டலாம். அதேவேளையில் உற்பத்தி “இலங்கையை மீளப்பெறல்” ஆவணம் எதிர்பார்க்கும் 10 வீதத்தைவிடக் குறைவான வளர்ச்சி மட்டத்தோடு இணங்கியமைவதாக இருக்கலாம்.

> *“தற்போது இலங்கையில் ஊழல் சகல மட்டங்களிலும் தலைவிரித்தாடுகின்றது. அது அரசாங்கத் திணைக்களங்களில் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. ஊழல் பெரிய தொழில்முயற்சிகள், மத்திய மற்றும் மாகாண அதிகார பீடங்கள் அனைத்திலும் ஊறிப்பரவியுள்ளது.”*


மேலும், பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் அரசியல் ஸ்திரநிலையோடு இணைக்கும் போக்கு காணப்படுகின்றது. உண்மையில் அரசியல் ஸ்திரப்பாடு ஸ்திரமான பொருளாதார வளர்ச்சிக்கு வாழ்வாதாரமான முக்கியத்துவம் கொண்டதென்றபோதிலும், ஆட்சிக்குழுக்கள் அரசியல் ஸ்திரநிலையை அரசியல் கட்டுப்பாடு, மற்றும் அடக்குமுறையோடு சேர்த்துக் குழப்பும்போக்கும் காணப்படுகின்றது. நிலைபேறான உள்நாட்டுப் பெருந்தொகை உற்பத்தித்துறை அமைவதற்கு முன்னர் பொருளாதாரத் தாராளமயமாக்கல் அடிப்படையிலான பொருளாதார சீர்திருத்தங்கள் இடம்பெறும்போது சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் வங்குரோத்து நிலையை அடையும்போது இது இடம்பெறுகின்றது. மேலும், தொழிலாளர்கள் குறித்த சீர்திருத்தங்கள் என்றபேரில் தொழிலாளர் உரிமைகள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. இது தொழிற்சங்கங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர் சங்கங்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் நிலைக்கு இட்டுச்செல்லுகின்றன. இதனால் அரசாங்கங்கள் அதிகரித்த வன்செயல் மற்றும் எதிர்ப்பை அடக்குவதற்கு சட்டத்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பத்திக்கப்படுகின்றன. ஆகவே “அரசியல் ஸ்திர நிலையை” உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திப் பாதை ஜனநாயகமற்ற வழிமுறைகளின் பயன்பாட்டைத் தவிர்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

**கே: கிராமிய வருமான மூலங்களைப் பல்லினப்படுத்துவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா? மேலும், யுத்தம் கிராமிய பொருளாதாரத்துக்கு ஒரு வாழ்வாதாரமான வருமான மூலமாக மாறியுள்ளது. கிராமிய மக்களின் வருமான மூலங்களைப் பல்வகைப்படுத்தும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?**

கிராமத்திலிருந்து நகரத்துக்கான புலம்பெயரல் அனேகமாகத் தடுக்கமுடியாததும், பொருளாதார

வளர்ச்சியின் விருப்பத்துக்குரிய ஆக்கக்கூறும் என்னும் வாதத்தின் அடிப்படையில் வறுமைக் குறைப்பைப் பற்றிப்பேசுவது நகர அபிவிருத்திக்கான பக்கச்சார்பை வரவேற்பதற்கு ஒரு காரணமாகப் பயன்பட்டு வருகின்றது. "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தின் PRSP ஆக்கக்கூறு பின்வருமாறு தெரிவிக்கின்றது.
"உண்மையில் கிராமிய வறுமைக் குறைப்பு திட்டமிட்ட நகர அபிவிருத்தியை ஆதரிக்கும் கொள்கைகளை அவசியப்படுத்தக்கூடும்."

ஆயினும் கிராமத்திலிருந்து நகரத்துக்கான புலம்பெயரலை வெறுமனே ஊக்கப்படுத்துவது அல்லது இத்தகைய புலம்பெயரல் பொருளாதார நிலைமாற்றத்தின் தடுக்கமுடியாத விளைவுகளென்று அனுமானிப்பது பொருளாதாரத் திட்டமிடலில் நகர்ப்புறப் பக்கச்சார்புக்கான நிலைமைகளுக்கும், அதன் விளைவாகக் கிராமிய வறுமை அதிகரிப்புக்கும், நகர்ப்புறச்சேரிகள் அதிகரிப்புக்குமே இட்டுச்செல்லும் இவை நவ-தாராளவாத பொருளாதார தத்துவார்த்தத்தை முன்னெடுப்போர் கூறும் கட்டமைப்பு மாற்றத்தின் இரு முகங்களாகவுள்ளன.



யுத்தத்தினால் ஏற்பட்ட வறுமை குறித்துப்பேசும்போது உத்தியோகபூர்வமற்ற ஆய்வுகள் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள வன்னி மக்களில் 75வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழுவதாக மதிப்பிட்டுள்ளன. ஆயினும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் நடந்தவையும் வறுமைக்குறைப்பை உறுதி ஆவணத்தில் குறிப்பிடப்படுபவையுமான ஆய்வுகள் வடக்கு-கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நிலவும் வறுமை வடக்கு-கிழக்குக்கு வெளியேயுள்ள சில மாவட்டங்களில் நிலவும் வறுமையைவிடக் குறைந்த மட்டத்திலுள்ளதாகத் தெரிவிக்கின்றன. ஆயினும் இது பெருமளவுக்கு அரசாங்க ஒதுக்கீடுகள் மற்றும் வெளிநாடுகளிலிருக்கும் உறவினர் அனுப்பும் பணம் காரணமானதேயன்றி ஜீவனோபாயத் தொழில்கள் மற்றும் ஆக்கபூர்வமான வேலைவாய்ப்பு என்பவற்றின் விளைவு அல்ல :


"வறுமை ஆய்வுகள்" சம்பந்தமாகத் தெளிவுபடுத்தப்படவேண்டிய இன்னுமொரு விடயப்பரப்பு உண்டு "இலங்கையில் வறுமை" குறித்த சுய-பரீட்சார்த்த ஆய்வுகள் நகர்ப்புரமயமாக்கல் அதிகரித்த மாகாணங்களில் வறுமைமட்டம் குறைவாக இருப்பதையும், காலப்போக்கில் நகர்மயமாகிய அல்லது ஓரளவுக்கு நகர்மயமாகிய பிரதேசங்கள் கிராமப்பிரதேசங்களைவிடச் செல்வசெழிப்பு மிக்கவையாக விளங்குவதையும் காட்டியுள்ளன. ஆயினும் கிராமத்திலிருந்து நகரத்துக்கான புலம்பெயரால் வெறுமனே ஊக்கப்படுத்துவது அல்லது இத்தகைய புலம்பெயரல் பொருளாதார நிலைமாற்றத்தின் தவிர்க்கமுடியாத விளைவுகளென்று அனுமானிப்பது பொருளாதாரத்திட்டமிடலில் நகர்ப்புறப் பக்கசார்ப்புக்கான நிலைமைகளுக்கும், அதன் விளைவாக நவ-தாராளவாத பொருளாதாரத் தத்துவார்த்தத்தை முன்னெடுக்கும் கட்டமைப்பு மாற்றத்தின் இருபக்கங்களாக விளங்கும் கிராமிய வறுமை அதிகரிப்புக்கும், நகர்ப்புறச்சேரிகள் அதிகரிப்புக்குமே இட்டுச்செல்லும். மேலும், மத்திய கிழக்கில் உறவினரிடமிருந்து வரும் பணம், வடக்கு-கிழக்கில் படைவீரர்களாகச் சேவை செய்வோரின் வேதனங்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்களின் கூலிகள் என்பவை இல்லாவிடின் கிராமப்புற வறுமை இன்னமும் மோசமான நிலையிலிருக்கும் என்பதையும் மனதில்கொள்ளுதல் வேண்டும். மேலே கூறப்பட்ட காரணிகள் எவையுமே கிராமியக் கைத்தொழில் மயமாக்கத்துக்கோ அல்லது திட்டமிட்ட நகர்ப்புறமாக்கத்துக்கோ இட்டுச்செல்வதில்லை.

**கே : வாக்குறுதியளிக்கப்பட்ட உதவி எந்த அளவுக்கு முழுக்க முழுக்க சமாதானச் செயல்முறையை அன்றி, மனித உரிமை முன்னேற்றத்துடனும் இணைவு பெற்றுள்ளது?**

51 நாடுகளும் 22 சர்வதேச அமைப்புகளும் கைச்சாத்திட்ட டோக்கியோ பிரகடனம் கொடையாளர் உதவி சமாதானச் செயல்முறையுடனும், பரஸ்பரம் ஏற்புடைய இறுதி அரசியல் தீர்வுக்கான தெளிவான படிகளுடனும் இணைப்புற்றது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தப் படிகள் "சகல மக்களினதும், மனித உரிமைகள் பயனுறுதியுள்ள வகையில் முன்னேற்றப்படுவதையும், பாதுகாக்கப்படுவதையும்" உள்ளடக்குகின்றன. என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு தீர்க்கமானதேவையாகும். சமாதான நிகழ்ச்சி நிரலில் மனித உரிமைகள் பிரிக்கமுடியாத ஒன்றாகவும், விட்டுக்கொடுப்புகள் செய்யமுடியாத ஒன்றாகவும் இடம்பெறுதல் வேண்டும். பன்மைத்துவம் மற்றும் ஜனநாயகத்துக்கும் இது பொருந்துவதாகும். கொடையாளர் சமூகம் நியாயமான முறையிலும், தொடர்ச்சியாகவும் இத்தேவைப்பாடுகளை வலியுறுத்துவதே முக்கியமானதாகும்.

# சமாதானப் பங்குலாபம், அபிவிருத்தி மற்றும் பகிர்ந்துகொள்ளல் பிரச்சினை

-பேராசிரியர் என்.சண்முகரத்தினம்-



பிரதான உணர்ச்சிகரமான பகுப்பாய்வு எழுத்தாக்கங்களில் 'சமாதானப் பங்குலாபம்' என்பது மிகவும் குறுகிய வழிகளில் பொருளாதார வளர்ச்சிச் செயல்நிறைவேற்றத்தில், இராணுவச்செலவினங்களில் வெட்டுகள் ஏற்படுத்தும் தாக்கமென்று உரைசெய்யப்படுகின்றது. இராணுவச் செலவினத்தில் குறைப்புகள் காரணமாக எஞ்சும் மேலதிக வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்தே பகுப்பாய்வாளர்கள் பொதுவாகக் கரிசனை காட்டுகின்றனர். மீதப்படுத்தப்பட்ட மூலவளங்களின் மாற்றுப் பயன்பாடுகளைத் தெரிவுசெய்வது குறித்து அவர்களிடையே பேதங்கள் காணப்படலாம். அதாவது மேலதிக மதிப்பை மாற்றியமைத்தல். சிலர் குறைக்கப்பட்ட நிதிப்பற்றாக்குறை மற்றும் குறைந்த வரிகளூடாக இந்த மிஞ்சிய மதிப்பைத் தனியான துறைக்கு வழங்கவேண்டுமென்று வாதிடுகின்றனர். 'சமாதானப் பங்கிலாபத்தை' இவ்வாறு பயன்படுத்துவது 'பேரியல்புப் பொருளாதாரக் காட்டிகளை' சீர்செய்யும் அதேவேளையில் தனியார் முதலீட்டையும் ஊக்குவிக்குமென்று வாதிடுவதன் மூலம் இவர்கள் இதற்கு நியாயவிளக்கம் தரக்கூடும். ஏனையோர், சேமிக்கப்படும் பணத்தில் ஒரு பகுதியாவது முன்னாள் படை வீரர்களைச் சமூகத்தில் மீளிணைப்புச் செய்வதிலும், மனித அபிவிருத்தியிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் முதலீடு செய்யப்படவேண்டுமென்று வாதிடுவோருடன் உடன்படக்கூடும்.

சமாதானப் பங்கிலாபம் என்னும் பதம் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும், இந்த அர்த்தத்திலான

சமாதானப் பங்கிலாபம் இலங்கையில் இன்னமும் யதார்த்தமாகவில்லை.

அரசாங்கத்தினதும், எல்ரீரீஈ அமைப்பினதும் இராணுவச் செலவினங்கள் இன்னமும் உயர்வாகவே உள்ளன. எமது சமாதானச் செயல்முறை இன்னமும் படைக்குறைப்பு மற்றும் படைக்கலைப்பு என்னும் கட்டத்தை வந்தடையவில்லை. யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த கருத்துமோதல்களும், இரு ஆயுதப் படைகளுக்குமிடையில் இடையிடையே ஏற்படும் மோதல்களும் இவற்றை நினைவூட்டுபவையாகவே உள்ளன. இரு தரப்பினிடையிலும் இராணுவ விடயங்களே முதல் முன்னுரிமை பெற்றுள்ளதையே இவை மீண்டும் காட்டுகின்றன. இறுதி அரசியல் தீர்வொன்று எட்டப்படும்வரை, இத்தகைய தீர்வு நடைமுறைப்படுத்தப்பட்டு இனி யுத்தத்திற்குச் செல்வதில்லை' என்னும் நிலை ஏற்படும் வரையில், முன்னாள் போராளிகளை (அரசாங்கம் மற்றும் எல்ரீரீஈ) சமூகத்தில் மீளவிளைத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைக்கிடப்படும் வரையில் இராணுவச் செலவினம் குறைக்கப்படும் சாத்தியமில்லை. படைக்கலைப்புச் செய்வதும், யுத்தப்பொருளாதாரத்தை இல்லாமற்செய்வதும் பலருக்கு வேலையின்மை மற்றும் வருமானமின்மையைத் தோற்றுவிக்குமென்பதால் இந்த நடவடிக்கைகள் குறித்த ஆகுசெலவுகளும் உண்டு. இராணுவச் செலவினத்தை மீதப்படுத்துவது என்ற அர்த்தத்திலான சமாதானப் பங்குலாபம் மற்றும் வளர்ச்சியில் அதன் தாக்கம் என்பவை இலங்கையில் யதார்த்தமாவதற்கு வெகுநீண்டகாலம் எடுக்கும். அவை இடம்பெறும்போது அவற்றின் பரிமாணம் குறித்து இப்பொழுதே எதுவும் கூறமுடியாது.

பனிப்போர் யுகத்தின் பின்னர் அமெரிக்காவும் அதன் மேற்கத்தைய நட்புறவு நாடுகளும் இராணுவச் செலவினத்தை வெகுவாகக் குறைத்து, சேமிப்புகளை இராணுவமல்லாத துறைகளிலும், சமூக அபிவிருத்தியிலும் முதலீடு செய்யுமென்ற எதிர்பார்ப்பு உருவாகியபோதே சமாதானப் பங்குலாபம் என்னும் எண்ணக்கரு பரந்த அளவில் பிரபலம் பெற்றதென்பதை இங்கு நினைவுகூருதல் பொருத்தமானதாகும். பனிப்போர் யுகத்துக்குப் பிந்திய சமாதானப் பங்குலாபம் வறிய, அபிவிருத்தியுறும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படவேண்டுமென்றும் சில குழுக்களும், அமைப்புகளும் கோரிக்கை விடுத்தன. உண்மையில் இத்தகைய உணர்வுகள் 1995 மாச்சில் கோப்பன் ஹேகனில் இடம்பெற்ற உலகநாடுகள் உச்சி மாநாட்டில் தீவிரமாக வெளியிடப்பட்டன. ஆயினும் கிட்டிய சமாதானப் பங்குலாபப் பனிப்போர் முடிவுற்ற மகிழ்ச்சிகரமான நாட்களின் உயர்வான எதிர்பார்ப்புகளுக்கு எவ்விதத்திலும் ஏற்றதாக அமையவில்லை. இராணுவக் கைத்தொழில் முயற்சி என்றும்போல இன்றும் செயற்படுகின்றது.

## சமாதானப் பங்குலாபத்தின் ஒரு பரந்த எண்ணக்கருவாக்கம்

மேலே கூறப்பட்டது போன்ற சமாதானப் பங்குலாபத்தின் குறுகிய பொருளாதார எண்ணக்கருவாக்கங்கள் இன்றைய இலங்கையில் அதிக செயற்பாட்டுப் பெறுமதியைக் கொண்டதாகத் தோன்றவில்லை. யதார்த்தவாதி எவருமே குறைக்கப்பட்ட இராணுவச் செலவினம், தற்போது இந்த நாட்டில் அதன் ஆக்கபூர்வமான பொருளாதாரத் தாக்கம் என்னும் மாயைக்குப் பின்னால் செல்லமாட்டார்கள். இருபது வருடகாலமாக யுத்தத்தில் மிகவும் தீவிரமாகவும், ஈவிரக்கமின்றியும் ஈடுபட்ட இரு தரப்பினரும் யுத்தத்துக்கு முடிவு காண்பதற்கான அரசியல் தீர்வொன்றைத் தேடும் முயற்சியில் இன்னமும் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இராணுவச் செலவினங்களில் விரைவான வெட்டுகள் இடம்பெறுமென்று எதிர்பார்ப்பது தர்க்க ரீதியான ஒன்றாகாது. ஆயினும் தற்போது பரிணமித்து வரும் சூழலைப் பயன்படுத்தி ஒரு பரந்த அர்த்தத்திலான சமாதானப் பங்குலாபத்தை உருவாக்குவது சாத்தியமாகும். பொதுமக்கள் உரையாடலில் "சமாதானப் பங்குலாபம்" என்பது ஒரு பரந்த, இறுக்கமற்ற அர்த்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இது இராணுவச்செலவினங்களில் கணிசமான வெட்டுகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொடரும் சமாதானச் செயல்முறையின் விளைவான பொருளாதார, சமூக, அரசியல், மற்றும் உளவியல் அனுகூலங்கள் என்பவற்றை உள்ளடக்குவதாகும்.

உதாரணமாக, அடக்குமுறைக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமையில் மனிதப் பாதுகாப்பு மற்றும் நடமாட்ட சுதந்திரம் மற்றும் நிரந்தர போர்நிறுத்தத்தின் நடைமுறையாக்கம் என்பவை ஒரு பரந்த அர்த்தத்திலான சமாதானப் பங்கிலாபத்துக்குப் பங்களிப்பு வழங்கலாம். இந்த அனுகூலங்களும், யுத்தத்தினால் உருவாகிய நிச்சயமின்மை குறித்த மூலங்கள் படிப்படியாக அகற்றப்படுவதும் குடும்பங்கள் யுத்தத்தினால் சீர்குலைவுற்ற அல்லது முற்றாக அழிக்கப்பட்ட தமது ஜீவனோபாயங்களை மீண்டும் கட்டியெழுப்புவதில் பெருமளவுக்கு உதவிகரமாக அமையும். அவை இராணுவச் செலவினங்கள் கணிசமான அளவுக்குக் குறைக்கப்படாத நிலையிலும், பொதுவான பொருளாதார மீட்சியை ஊக்குவிக்கக்கூடியவையாகும். மேலும், இராணுவச் செலவினத்தில் பாரிய வெட்டு எதுவுமின்றி ஆயுதப்படைக்காலம் இராணுவமல்லாத, பொருளாதார மீட்சியை ஏற்படுத்தக்கூடிய அல்லது முன்னேற்றக்கூடிய பொதுவான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டால் சமாதானப் பங்குலாபத்திற்கு பங்களிப்பு வழங்கலாம்.

## சமாதானம், அபிவிருத்தி மற்றும் பகிர்ந்துகொள்ளுதலில் முரண்பாடுகள்

சமாதானப் பங்குலாபம் குறித்த பரந்த எண்ணக்கரு இலங்கையில் இவ்விடயம் குறித்த பகிரங்கக்கலந்துரையாடலை உள்ளடக்குவதாகத்

தோன்றக்கூடும். ஆயினும், இந்த நிலைப்பாட்டை மேலும் தெளிவாக எடுத்துரைத்து இதை சமாதானம் மற்றும் அபிவிருத்தி குறித்த பாரிய விவாதத்துடன் தொடர்புபடுத்தவேண்டிய அவசியம் உள்ளது. சமாதானம் அபிவிருத்திக்கு உதவக்கூடும், ஆயினும் அபிவிருத்தி சமாதானத்துக்கு உதவவேண்டுமென்ற அவசியமில்லையென்று வரலாற்றின் அடிப்படையான ஒரு பாடமாகும். முதலாளித்துவ அபிவிருத்தி சமூகரீதியிலும், ஆட்புல ரீதியிலும் சமமற்றதாக இருப்பது அதன் உள்ளார்ந்த, உலகளாவிய போக்கு ஆகும். பகிர்ந்து கொள்ளுதலில்முரண்பாடுகளை ஏற்படுத்தி, அதன் விளைவாக "வெற்றிபெறுவோரையும், தோல்வியுறுவோரையும் உருவாக்குவதும் அதன் போக்கு ஆகும். விறியோக முரண்பாடுகளும், வாய்ப்புகள் கிட்டாமையும் தீவிரமாகும்போது, அவை கொள்கை வகுப்போரால் உதாசீனமாக அல்லது தவறானதாகக் கையாளப்படும் போதும் சமூகத்தில் சமாதானத்துக்கு அச்சுறுத்தல் தோன்றுகின்றது. நவீன சமூகத்தில் வர்க்கம் என்பது சமத்துவமின்மையை வரையறைப்படுத்தும் ஓர் அம்சமாக விளங்கியபோதிலும், அது பகிர்ந்துகொள்ளுதலில் முரண்பாடுகளுக்கான ஒரேயொரு அடிப்படையல்ல. பகிர்ந்துகொள்ளுதலில் முரண்பாடுகளில் வர்க்கநிலையோடு பால்நிலை, சாதி, இனத்துவம், மற்றும் மதம் என்பவையும் இடைத்தாக்கவிளைவுகளை ஏற்படுத்தும் முக்கிய மாறிகளாகும். ஆயினும், விறியோகம் மற்றும் பாகுபாடின்மை போன்ற உடன்பாட்டுக்கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் சமூக ஒப்பந்தங்களை உணர்வுபூர்வமாகத் தெரிவுசெய்த சிலதேசங்கள் பாரிய வன்செயல் நிறைந்த உள்ளக முரண்பாடுகளைத் தவிர்ப்பதில் வெற்றிகண்டுள்ளனவென்பதைக் காட்டுகின்றது. ஆகவே, யுத்தத்துக்குப் பிந்திய, ஒரு சூழலில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதையும், அபிவிருத்தியையும் ஒன்றுடனொன்று தொடர்புற்ற செயல்முறைகளாகவே நோக்குதல்வேண்டும். ஒப்புரவான சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஈட்டிக்கொள்வதாயின், அரசியல் அறிவு நிலையில் நின்று இந்த உறவைக்கையாளுதல் வேண்டும்.

இலங்கையில், இது விடயத்தில் நம்பிக்கையளிப்பதும், சவால் விடுப்பதுமான ஒரு சூழமைவை நாம் காண்கின்றோம். சமாதானச் செயல்முறை நம்பிக்கையூட்டும் ஒன்றாகவுள்ளது. ஆயினும் அதை அரசியல் தீர்வென்றவகையில் வெற்றிக்கு இட்டுச்செல்வது பாரிய சாவாலாகும். இலங்கையின் இனப்பிரச்சினை, பெருமளவுக்கு மூலவளங்கள், வாய்ப்புகள் மற்றும் அரசியலதிகாரம் என்பவற்றின் பகிர்ந்துகொள்ளுதலில் முரண்பாடுகள் காரணமாகவே உருவாகியது என்பதில் சந்தேகமில்லை. இவற்றைப் பகுப்பாய்வாளர்கள் கிடைநிலை சமத்துவமின்மைகள் என்று அழைக்கின்றனர். இந்த முரண்பாடுகள் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் அரசியல் ரீதியாக இனத்துவப் பிரிவுகளின் அடிப்படையில் படிப்படியாக இனவாதமாக்கட்டன. இவை பின்னர் மாற்றமுற்று, அரசினதும், சமூகத்தினதும் கட்டமைப்புகளாக மீள்வரைவிலக்கணம் பெற்றன.

> 'வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் அழிவுற்ற சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் குறித்த பாரதூரமான சவால்களை நோக்குகையில் இத்தகைய கரிசனைக் கவலைகள் மிகவும் ஆழமாகின்றன. யுத்தம் இப்பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார மற்றும் மக்கட்பரம்பல் பாங்குகளை மாற்றியதைத்துள்ளது.'

கடந்த கால்நூற்றாண்டு காலமாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் சமாதானம் குறித்த இலங்கையின் சாதனை திருப்திகரமானதாக அமையவில்லை. யுத்தத்தின் அழிவுகரமான தாக்கங்கள் அனைவரும் அறிந்தவையே. போதிய வேலைவாய்ப்புகளைப் பிறப்பித்தல் மற்றும் மனித அபிவிருத்தியைத் தர ரீதியாக முன்னேற்றுதல் என்பவற்றில் நவ-தாராளவாத பொருளாதாரக் கொள்கையின் தோல்விகுறித்தும், அதேவேளையில் தொழிலாளர்களின் உரிமைகளைச் சகல அரசாங்கங்களும் அடக்கியொடுக்கியதும் அனைவருக்கும் தெரியும். ஆயினும் அரசாங்கமும், நவ-தாராளவாதக் கொள்கையின் பாதுகாவலர்களும் யுத்தமே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமென்று கூறியுள்ளனர். தேசியப் பொருளாதாரத்தின் மீதும், அதன் வளர்ச்சிச் சாத்தியவளங்கள் மீதும் யுத்தத்தின் நாசகரமான தாக்கம் குறித்து எவ்வித சந்தேகமுமில்லை. அது முதலீட்டாளர்களை விரட்டியடித்து (சமூக ரீதியில் விரும்பப்படாதவை உள்ளிட்ட) ஆக்கபூர்வமற்ற, துரித இலாபச் செயற்பாடுகளை ஊக்குவித்தது. அதேவேளையில் பொது மூலவளங்கள் ஒதுக்கீட்டை திரிபுறச்செய்தது. அது மூலவளத்தை அகற்றுதல், பலதுறைகளில் சந்தைத்தோல்விகள், பாரிய பொரளாதாரச் சுருக்கங்கள் மற்றும் வடக்கு-கிழக்கில் அனைத்து மக்களுக்கும் வாய்ப்பின்மை என்பவற்றை உருவாக்கியது. ஆயினும் ஒரு சமூகக்கண்ணோட்டத்தில் பொருளாதாரத்தில் இடம்பெற்ற சகல சிக்கல்களையும் யுத்தம் மாத்திரம் விளக்கிவிடமுடியாது. யுத்தம் இல்லையெனில் நாட்டின் பொருளாதாரம் உயர்வான வீதங்களில்

வளர்ச்சியுற்றிருக்குமென்று அனுமானிப்பது நியாயமானதென்று தோன்றக்கூடும். ஆயினும் அதிலிருந்து முன்சென்று, உயர்வான வளர்ச்சி தானாகவே ஒப்புரவான விநியோகத்தையும் ஏற்படுத்தி, அனைத்துமடங்கும் மனித அபிவிருத்திக்கு இட்டுச்சென்றிருக்குமென்று ஒருவர் அனுமானிக்கமுடியாது. பிரமாணங்களைக் குறைத்தல் மற்றும் தொழில்வாய்ப்பு, கூலிகள், தரமான சுகாதாரக் கவனப்பராமரிப்பு ஆகுசெலவு மற்றும் கல்வி என்பவற்றில் தனியார்மயமாக்கல் காரணமாக இலங்கையில் ஏற்படும் சமூக உதாசீனத்தின் பாதகமான விளைவுகளைச் சாதாரணமாக யுத்தத்துடன் இணைப்பது அர்த்தமற்ற ஒரு விடயமாகும். சுதந்திர வர்த்தக வலயங்களில் இடம்பெறும் நியாயமற்ற சுரண்டல், மற்றும் உரிமைகளின்மைகளுக்கும் யுத்தத்துக்குமிடையில் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. இவையும் ஏனைய சமத்துவமற்ற மொத்த தேசிய உற்பத்தியின் பகிர்வு மற்றும் மொனராகலை போன்ற பிரதேசங்களில் வறுமைநிலை மற்றும் வாய்ப்புகளின்மை என்பவை, அடுத்தடுத்துவரும் அரசாங்கங்கள் மிகவும் ஆர்வத்தோடு பின்பற்றிய நவ-தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவுகளாகும்.

விந்தை நிகழ்வாக யுத்தம் தென்னிலங்கையில் கிராமிய வறுமை மற்றும் வேலையின்மையைக் குறைத்துள்ளது. அயிரக்கணக்கான கிராமிய இளைஞர்கள் அரச ஆயுதப்படைகளில் வேலைவாய்ப்புப் பெற்றனர். யுத்தம் நீண்டகாலம் தொடர்ந்தபோது யுத்தப்பொருளாதாரம் விரிவடைந்தது. பெரும் எண்ணிக்கையிலான நபர்கள் இதனால் நன்மையடைந்தனர். தாராளவாதமற்ற இராணுவமயப்படுத்தல் தாராளவாத பொருளாதாரத்தில் வேலைபெறத் தகுதியற்றவர்ளென்று ஒதுக்கப்பட்டிருந்த பலருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியது. ஆயினும், யுத்தம் புரிதல் மூலம் வேலைவாய்ப்புகளைப் பிறப்பித்தல் விரும்பக்கூடிய ஒன்றல்லவென்பதை வலியுறுத்திக் கூறவேண்டிய அவசியமில்லை. மறுபுறத்தில், யத்தப்பொருளாதாரத்தைக் கைவிடுதல் பலர் வேலைவாய்ப்புகளை இழப்பதற்கு இட்டுச்செல்லும். தாராளவாதப் பொருளாதாரத்தினால் இவர்களுள் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படாதென்பது கடந்தகால அனுபவமாகும். இவர்களுள் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளை இழப்பதோடு, கடந்தகாலங்களில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் செய்ததுபோன்று பாதாள உலகக்கோஷ்டிகளோடு இணைந்துகொள்ளக்கூடும். இது விரும்பத்தகாத சமூக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மேலும், போர்நிறுத்தம் ஒரு வருடகாலத்துக்குமேல் நிலவும் நிலையில் மக்களுள் பாரிய பெரும்பான்மையானோர் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, வேலையின்மை மற்றும் சமூகப்பாதுகாப்பின்மை என்பவற்றால் அதிருப்தியுற்றிருப்பதை ஆய்வுகளும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வெளிப்படுத்தியுள்ளன.



வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் அழிவுற்ற சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் குறித்த பாரதூரமான சவால்களை நோக்குகையில் இத்தகைய கரிசனைக் கவலைகள் மிகவும் ஆழமாகின்றன. யுத்தம் இப்பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார மற்றும் மக்கட்பரம்பல் பாங்குகளை மாற்றியதைத்துள்ளது. பிராந்தியங்களுக்கிடையிலான திரட்டு மட்டத்தில் ஏனைய பகுதிகளுக்குமிடையில் ஒரு பாரிய அபிவிருத்தி இடைவெளி உள்ளது. ஆகக்குறைந்த காலப்பகுதியில் இந்த இடைவெளியை நிரப்புதல் வேண்டுமென்பதோடு, இதன் மூலம் இப்பிராந்தியத்தைப் பாரிய பொருளாதாரம் மற்றும் அரசியல் சமூகத்தோடு மீள் ஒன்றிணைத்தல் முக்கியமானதாகும். ஆயினும் தெற்கில் இடம்றுெவதுபோன்ற சமமற்ற அபிவிருத்தி குறித்த வாய்ப்பு ஏற்பாட்டுப்பாங்குகள், வாய்ப்பின்மைகள் மற்றும் உதாசீனப்படுத்தி அகற்றுதல் என்பவை இடம்பெறாது இதைச் சாதிப்பது எவ்வாறு என்பதே அடிப்படையான கேள்வியாகும். தெற்கில் உதாசீனம் மூலம் அகற்றுதல் போன்ற நிகழ்வுகளை சமூகத்தில் மாற்றியமைக்கவிருப்பது எவ்வாறு என்பதை அரசாங்கம் இன்னமும் தெரிவிக்கவில்லை. எல்ரீரீஈ அமைப்பும் அபிவிருத்தி குறித்த தனது சொந்த இலட்சிய தரிசனத்தைத் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. உண்மையில் அபிவிருத்தியடையும் நாடுகள் தேசியப் பொருளாதாரக் கொள்கைகளைத் தெரிவுசெய்கையில் உலகளாவிய ஏகாதிபத்திய அதிகாரத்துவ வாதத்துக்கு அடிபணிய நேரிடுகின்றது. ஆயினும் அறிவுபெற்ற அரசியல் வர்க்கமொன்று சட்டநிலைத்தகவு, ஸ்திரநிலை மற்றும் சமூக நியாயம் குறித்த வினாக்களை உதாசீனம் செய்ய முடியாது. சமாதானச் செயல்முறையில் சமமான பங்காளியாக விளங்கும் எல்ரீரீஈ அமைப்பு வடக்கு-கிழக்கில் ஓர் யதார்த்த அரசை அமைத்துள்ளது. அதுவே எதிர்காலப் பிராந்திய அரசாங்கத்தில் ஆதிக்கப்பங்கை வகிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அது நவ-தாராளவாத கருத்திட்டங்கள் குறித்த இலங்கையின் அனுபவங்கள் குறித்த தனது கருத்தை இன்னமும் தெரிவிக்கவில்லை. தற்போதைய உலக மற்றும் பிராந்தியச் சூழமைவில் வடக்கு-கிழக்கின் எதிர்கால அபிவிருத்தியை எல்ரீரீஈ அமைப்பு எவ்வாறு நோக்குகின்றது என்பதை நாம் அறிந்து கொள்வதற்கான காலம் வந்துள்ளதென்று நான் எண்ணுகின்றேன்.

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, இலங்கையில் புனர்நிர்மாணம், மற்றும் அபிவிருத்தி குறித்து டோக்கியோ மாநாட்டில் ஆற்றிய உரை.....




மாண்புமிகு இணைத்தவிசாளர்களே, மாண்புமிகு அமைச்சர்களே, அதிமேதகு வெளிநாட்டுத் தூதுவர்களே, பேராளர்களே,

இன்று இலங்கைச் சிவில் சமூகத்தின் சார்பில் ஒரு சமர்ப்பணத்தைச் செய்வது உண்மையில் எனக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். இதற்காக ஜப்பானிய அரசாங்கத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆரம்பத்தில் இலங்கையின் சிவில் சமூகம் முழுவதினதும் செழுமையையும், கருத்துக்களின் பரந்த பல்லினப்பாங்கையும் நான் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறமுடியாதென்பதை நான் தெளிவாகவே தெரிவிக்கவிரும்புகிறேன். எனது சமர்ப்பணம் 2003 ஏப்ரலில் 26ம் திகதி 27ம் திகதிகளில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பெர்கொவ் ஆதார நிறுவனத்துடன் இணைந்து எமது சமாதான வழிமுறைத்திட்ட முன்முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற்ற சிவில் சமூகக்கலந்தாலோசனையொன்றின் அடிப்படையில் அமைந்ததாகும். இக்கலந்தாலோசனை அமர்வு "சமாதானமும், அபிவிருத்தியும், டோக்கியோவுக்கான பாதை" என்னும் தலைப்பில் இடம்பெற்றது. இதில் எழுபதுக்கு மேற்பட்ட சிவில் சமூகப்பிரதிநிதிகள், மாண்புமிகு தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொரகொட, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அதிமேதகு.செயிச்சிரோ ஓட்சுக்கா என்போர் கலந்துகொண்டனர். வடக்கு, கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகள் குறித்த செயலகத்தின் பணிப்பாளர் திரு.செல்வின் இரேனியஸ் உரையொன்று நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டிருந்தபோதிலும், அவரால் வரமுடியவில்லை.

கலந்தாலோசனையின்போது இலங்கையை மீளப்பெறல் ஆவணத்துக்கும், சர்வதேச பல்தரப்பு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட வடக்கு-கிழக்கின் தேவைகள் மதிப்பீட்டுக்கும் கவனம் செலுத்தப்பட்டது. இக்கலந்தாலோசனையின் தலைப்பு காட்டுவதுபோன்று, சமாதானத்துக்கும், அபிவிருத்திக்குமிடையிலான உறவே அனைத்தையும் தழுவும் கருப்பொருளாக விளங்கியது. பங்கேற்றோர் முழுநிறையமர்விலும், செய்றபாட்டுக்குழுக்களிலும் பெரும் எண்ணிக்கையிலான பிரச்சினைகள் குறித்துக்கருத்து வெளியிட்டனர்.

## பிரதான பிரச்சினைகளும், ஊடறுக்கும் கருப்பொருட்களும் பின்வருமாறு :

1. கொள்கைச் சட்டகங்களையும், சமாதானம் மற்றும் அபிவிருத்தி சம்ப்நதமான கொள்கைகளையும் வடிவமைத்து, நடைமுறைப்படுத்துகையில் கலந்துரையாடல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் நிலை என்பவற்றின் முக்கியததுவம். பங்கேற்றோர் இது விடயத்தில் சிவில் சமூகப்பங்கேற்பு, மற்றும் பங்களிப்பு பொதுமக்கள் ஆதரவு மற்றும் சமாதானச் செயல்முறை குறித்த நியாயம் என்பவற்றுக்கு வாழ்வாதாரமான முக்கியம் வாய்ந்ததென்று வலியுறுத்தினர்.

   இதன் பிரகாரம், சிவில் சமூகம் இந்தமுக்கியமான மாநாட்டின் நிகழ்ச்சிநிரலில் இது அங்கீகரிக்கப்பட்டிருப்பதை வரவேற்கின்றது.

   ஆயினும், கலந்தாலோசனை அமர்வில் பங்குபற்றியோர் இலங்கையை மீளப்பெறல் மற்றும் பல்தரப்பு தேவைகள் மதிப்பீட்டு ஆவணம் என்பவற்றின் தயாரிப்பில் போதிய கலந்தாலோசனையோ, அனைவரையும் உள்ளடக்கும் தன்மையோ காணப்படவில்லையென்று கருதினர். அவர்களின் கருத்துரைகள் கலந்தாலோசனை செய்யப்பட்ட நலன்பிரதிநிதிகளின் வீச்சை மாத்திரமன்றி, அபிவிருத்தித்தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாகக் கிடைக்கக்கூடிய ஆவணங்கள் மற்றும் துறைத்தேர்ச்சி என்பவற்றையும் உள்ளடக்குவதாகவிருந்தது. பங்கேற்றோர் நிறுவனரீதியான அனுபவம், மற்றும் அபிவிருத்தி குறித்த, தற்போதைய பணிகள் என்பவை குறித்த அங்கீகாரத்தை வலியுறுத்தினர். SAPNA அமைப்பைச்சேர்ந்த திரு.சுசில் சிரிவர்த்தன அவர்களின் பின்வரும் கருத்துரைகளில் இவை உள்ளடக்கம் பெற்றிருந்தன :

   "மிக்சிறப்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில், அரசின் அபிவிருத்திச் செயல்முறைகளில் இணைந்துகொள்ளுமாறு மக்களை அழைப்பதற்குப் பதிலாக, அரசு மக்களின் அபிவிருத்தி செயல்முறையில் இணைந்துகொண்டது. இவ்விடத்தில்தான் பங்கேற்பும் அபிவிருத்தியும், விநியோகத்தன்மைகொண்ட மேலிருந்து கீழான அபிவிருத்தியும் வேறுபட்டன."

2. இன்னுமொரு முக்கியமான விடயம் இலங்கையை மீளப்பெறல் மற்றும் தேவைகள் மதிப்பீட்டு ஆவணங்கள் உணர்வு பூர்வமான அரசியல் அனுமானங்கள் எதையும் செய்யாத போதிலும், அவற்றின் மூலம் முன்வைக்கப்படும் விடயங்களுக்கு அரசியல் விளைவுகள் உண்டு என்பதாகும். இவை கருத்திட்டங்களின் வடிவமைப்பு மாற்றும் நடைமுறையாக்கத்துக்கு அவசியமான நிர்வாக மற்றும் நிறுவன வழிமுறையமைப்புகளோடு தொடர்புற்றுள்ளதோடு, இலங்கையின் எதிர்கால அரசின் கட்டமைப்போடும் தொடர்புள்ளதாகும். தற்போதுள்ள அதிகாரக் கட்டமைப்புகளின் இருபுடைத்தன்மைகளுக்கும் கவனம் ஈர்க்கப்பட்டது. தோல்வியுற்ற அல்லது தோல்வியடைந்துகொண்டிருக்கும் அரசு குறித்தும், முன்மாதிரி அரசு ஒன்று குறித்தும் பேசப்பட்டுள்ளது. அத்தோடு, நிதியியல் அதிகாரப்பகிர்வு குறித்து எதுவுமே பேசப்படவில்லையென்பதும், பேரியல்பு பொருளாதாரத் திட்டமிடல், முகாமைத்துவத்துக்கும், பிராந்தியப்பொருளாதாரத் திட்டமிடல், முகாமைத்துவத்துக்குமிடையிலான தொடர்பு குறித்து எதுவும் கூறப்படவில்லையென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. இது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதான மற்றும் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான அலகின் பணிப்பாளர் திரு.கேதிஷ்லோகநாதன் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. பங்கேற்றோர் மோதலுக்குப் பிந்திய இலங்கை குறித்த இலட்சிய தரிசனம் இந்த ஆவணத்தைத் தயாரிக்கவில்லையென்றும், அர்த்தப்பொதிவுக்கும், சூழமைவுக்கும் இது அவசியமாகவிருந்ததென்றும் வலியுறுத்தினர். இது விடயத்தில் இந்த ஆவணங்கள் "பொருளாதார வலியுறுத்தல் கொண்டவையாகவும்", அரசியலுக்கும், பொருளாதாரத்துக்குமிடையிலான இசைவுறவைக் கவனத்திற்கொள்ளத் தவறும் தொழில்நுட்பத்தன்மை கொண்டவையாகவும் அமைந்துள்ளனவென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

   இந்த ஆவணங்கள் பொதுவான வறுமைக்கும், யுத்தம் ஏற்படுத்திய வறுமைக்குமிடையில் வித்தியாசம் காணத் தவறிவிட்டனவென்பதும் பொதுவான கருத்தாகவிருந்தது. பங்குபற்றியோர் அபிவிருத்தி குறித்த எல்ரீரீஈ அமைப்பின் திட்டங்களும், கருத்துணர்வுகளும் பகிரங்கப்படுத்தப்படுவதை உதவிக்கரமாக அமையுமென்று சுட்டிக்காட்டினர்.

3. மனித உரிமைகள் மற்றும் மோதலுக்கான அரசியல், அரசியலமைப்புத் தீர்வொன்றை நோக்கி முன்னேறுவதன் ஆழமான முக்கியத்துவம் குறித்தும்

பங்கேற்றோர் கருத்துவெளியிட்டனர். இது அபிவிருத்தி உதவியுடன் இணைக்கப்படவேண்டுமென்றும், இல்லையெனில் இது பொதுமக்கள் ஆதரவையும், சமாதானச் செயல்முறையின் சட்டநிலைத்தகவையும் பாதகமாகப் பாதிக்குமென்றும் பலமான கருத்துக்களைப் பங்குபற்றியோர் தெரிவித்தனர். பலர் அரசியல் மற்றும் அரசியலமைப்புத்தீர்வொன்றின் பரந்த வரையறைகளுள் இடம்பெறாத நிலையான அபிவிருத்திக்கு ஏற்புடையதல்லவென்று தெரிவித்தனர். இந்த நிலைப்பாடு மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகள் சம்பந்தமாக அழுத்தங்களைப் பிரயோகித்தல் என்பவற்றில் சர்வதேச பல்தரப்பு நிறுவனங்களைவிட, வெளிநாடுகளின் இருதரப்பு நிதி நிறுவனங்கள் அதிக கூருணர்வுமிக்கவையாக விளங்குகின்றனவென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மனித உரிமைகள் அடிப்படை நியமங்கள் மற்றும் சமாதானச் செயல்முறை குறித்த கலந்துரையாடல்களில் பங்குபற்றியோர் "அடிப்படை நியமங்கள்" இலங்கை அரசாங்கத்தையும் எல்ரீரீ அமைப்பையும் சமமான அளவில் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் "அடிப்படை நியமங்களை" ஏற்படுத்துதல் செயல்முறையின் தரத்தையும், நிலைத்தகவையும் மேம்படுத்துமென்றும் கருத்து வெளியிட்டனர் அவர்கள் கூட்டு மற்றும் தனிநபர் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும், "அடிப்படை நியமங்கள்" சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையென்றும் இனங்கண்டனர்.

பல்லினப்பாங்கு, சமத்துவம், உள்நாட்டில் இடம்பெயர்தோர் உரிமைகள், கல்வி மற்றும் சுகாதாரம், தண்ணீர் மற்றும் சுகநலம் போன்ற அடிப்படை சமூகசேவைகளுக்கான உரிமை, மனித உரிமை மீறல்களுக்கெதிராக வழக்குத்தொடருதல், நீதித்துறைச் செயல்முறையைத் துரிதப்படுத்துதல், கூட்டங்கூடும் உரிமை, கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமை, (அரசுப் பாதுகாப்பு மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் போன்ற விடயங்களுடன்) மனிதர்களுக்குப் பாதுகாப்பு, பேச்சு சுதந்திரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், கண்ணிவெடி அகற்றுதல், அடிப்படையான சிவில், அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள், ஒளிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்பு.

மனித உரிமைகள் சம்பந்தமாகப் பயனுறுதியுள்ள, ஜனசமூக, தேசிய, சர்வதேச மட்டங்களிலான பல்-அடுக்குக் கண்காணிப்பு வழிமுறையமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து வலியுறுத்தப்பட்டது. பங்கேற்றோர் பின்னர் சமாதானச் செயல்முறையில் ஆரம்பத்திலிருந்தே இக்கரிசனைகளும், பலமான மனித உரிமைப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படுவதன் தீர்க்கமான முக்கியத்தை வலியுறுத்தினர்.

4. செயல்முறை அளவுக்கதிகமாக நிதிநிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுமென்ற கவலையும் வெளிப்படுத்தப்பட்டது. உள்ளூர் துறைத்தேர்ச்சி மற்றும் நிறுவன அனுபவங்கள் பயன்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு, கருத்திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறையாக்கத்தைக் கண்காணிப்பதற்கு உள்ளூர் நிபுணர்கள் அமைப்பொன்றும் உருவாக்கப்படுவது அவசியமென்று பங்குபற்றியோர் வாதிட்டனர். உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான பணியகத்தின் இயலுமை அதிகரிக்கப்படுதல் வேண்டும். பால்நிலைப் பிரச்சினைகளுக்கும், அடிமட்ட ஜனசமூகங்களுக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். குறித்துரைப்பாக, தேவைகள் மதிப்பீடு சம்பந்தமாக, ஆகு செலவு முன்மதிப்பீடுகளுக்கு அடிப்படையான அனுமானங்களை அறிந்துகொள்ளும் வகையில் வரவு-செலவுத்திட்டத்தின் மீளாய்வு ஒன்று இடம்பெறவேண்டுமென்று சிலர் கருத்துவெளியிட்டனர். தேவைகள் மதிப்பீடு செயற்பாட்டு, நிர்வாக மற்றும் நிகழ்ச்சித்திட்ட ஆகுசெலவுகள் குறித்த விபரவிளக்கத்தை உள்ளடக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். பல நாடுகளில் மோதலுக்குப் பிந்திய கட்டத்தில் மோதலுக்குப் பிந்திய புனர்நிர்மாணத்துக்கான பெருமளவிலான நிதிகள் சர்வதேச அபிவிருத்திக்குப் பிந்திய அபிவிருத்திக் கைத்தொழிலைச் சென்றடைவதாகவும், இந்நிதிகளில் மிகச்சிறிய அளவே உரிய பயனாளிகளைச் சென்றடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது விடயத்தில் ஒளிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்பு அவசியமென்றும், இலங்கைச் சிவில் சமூகம் இதை எதிர்பார்க்கின்றதென்றும் அவர்கள் தெரிவித்தனர். இலங்கையின் பாரிய கடன் நிலை குறித்த கவலையும், வெளியிடப்பட்டது. உள்ளூர் இயலுமைகளைக் கட்டியெழுப்புதல் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த விடயமென்பதும் வலியுறுத்தப்பட்டது.

5. இங்கு எழுப்பப்பட்ட ஏனைய பிரச்சினைகள் வடக்கு-கிழக்கில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள் குறித்துப் பயனுறுதியுள்ள வகையில் நாட்டின் ஏனைய பகுதி மக்களுக்கு அறியத்தருதல், சிவில் சமூகம் குறித்து எல்ரீரீ அமைப்பின் தெளிவற்ற நிலைப்பாடு மற்றும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் வளர்ச்சியின் பிரதான சக்தியாகத் தனியார்துறை மீது தங்கிநிற்றல் என்பவையாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் திரு.சுனில் பஸ்தியன் தனது ஆரம்ப உரையில் இலங்கையை மீளப்பெறல் ஆவணம் 10வீதம்

பொருளாதார வளர்ச்சியை அடிப்படை எதிர்பார்ப்பாகக் கொண்டுள்ளதென்று தெரிவித்தார். பொருளாதார வளர்ச்சி குறித்த ஒரு குறுகிய கவனம் மாத்திரம் போதாதென்றும், பொருளாதார வளாச்சி மாத்திரம் எவ்வளவுதான் வரைவிலக்கணப்படுத்தப்பட்டாலும், வறுமையைப் போக்கிவிடாதென்றும், மூலவளங்களை ஒப்புரவாக விநியோகிப்பதை உறுதிசெய்யும் வகையிலான குறித்துரைப்பான தலையீடுகள் இடம்பெறவேண்டுமென்றும் தெரிவித்தார்.

நிறைவாக இச்சிவில் சமூகக் கலந்துரையாடலின் செய்தி செயல்முறையில் அதிகரித்த கலந்தாலோசனை மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் என்பவை இடம்பெறவேண்டுமென்பதாகும். சிவில் சமூகம் ஒரு பார்வையாளர் அல்ல. அது ஒரு நலன் பிரதிநிதியாகும். நாம் யுத்தமுமில்லை, சமாதானமுமில்லை என்ற நிலையிலிருந்து முன்னேறி நிரந்தர சமாதானத்துக்குச் செல்லவேண்டுமெனில் ஜனநாயகத்துடன் கூடிய சமாதானம் மற்றும் அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்புத் தீர்வைநோக்கிய முன்னேற்றத்தின் நடுநாயகத்தன்மை என்பவை மீது கவனஞ்செலுத்தப்படுதல் வேண்டும்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து டோக்கியோ மாநாட்டில் ஆற்றிய உரையானது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால், கடந்த ஏப்ரல் 26, 27ம் திகதிகளில் **சமாதானமும், அபிவிருத்தியும்** என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டதாகும்.







பயிற்சிப்பட்டறையின் போது எடுக்கப்பட்ட படங்களே இவை...



# இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி குறித்த டோக்கியோ பிரகடனம்

## மாநாட்டின் சுருக்க விபரம்

1. இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி குறித்து மாநாடு ஜுன் 9 மற்றும் 10ந் திகதிகளில் டோக்கியோவில் நடைபெற்றது. இதில் 51 நாடுகளின் அமைச்சாக்ளும், 22 சர்தேச அமைப்புக்களினதும் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.



ஜப்பானியப் பிரதமர் திரு.ஜுனிச்சீரோ கொய்சூமி அவர்களும், இலங்கைப் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களும் ஆரம்பவுரைகளை நிகழ்த்தினர். ஆரம்ப அமர்வுக்கு ஜப்பானிய அரசாங்கப் பிரதிநிதி திரு.யசூஷி அக்காஷி தலைமை தாங்கினார்.

2. ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன்(தலைமைக்குழுவும், ஆணைக்குழுவும்) இணைத் தவிசாளர்களாகப் பணியாற்றின. இணைத்தவிசாளர்களின் பிரதிநிதிகள், ஜப்பானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திருமதி.யொரிக்கோ காவாகுச்சி, நோர்வே ளிநாட்டலுவல்கள் அமைச்சின் ராஜாங்கச்செயலாளர் திரு.ஒலாவ் கிஜோர்வென், அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் திரு.ரிச்சர்ட் எல்.ஆர்மிடேஜ், ஐரோப்பிய யூனியன் தலைமைக்குழுப் பிரதிநிதி திரு.லோனிய தியோபனோபுலஸ், ஐரோப்பிய ஆணைக்குழுப் பிரதிநிதி திரு.போர்ன்ஹார்ட் செப்டர், என்போர் ஆரம்ப அமர்வில் உரை நிகழ்த்தினர் ஆசிய அபிவிருத்தி வங்கியின்(ADB) தலைவர் திரு.தாடாவோ சீனோவும் இந்த அமர்வில் உரையாற்றினார். உலகவங்கித் தலைவர் திரு.ஜேம்ஸ் வொல்பெற்சன் அவர்களின் ஒரு வீடியோ செய்தியும் இடம்பெற்றது.

3. செயற்பாட்டு அமர்வில் இலங்கை மத்திய வங்கி அளுநர் திரு.ஏ.எஸ்.ஜெயவர்த்தன இலங்கையின் பொரளாதார அபிவிருத்தி மற்றும் சாத்தியவளங்கள் குறித்து உயைாற்றினார். சர்வதேச நாணய நிதியமும், உலகவங்கியும் இலங்கையின் பேரியல்புப் பொருளாதாரச் செயல்நிறைவேற்றம், புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் குறித்து அறிக்கையிட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஐக்கிய நாடுகள் முறைமையும்

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐநா முறைமை இலங்கை அரசு மற்றும் எல்ரீரீஈ ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட வடக்கு, கிழக்குக்கான "தேவைகள் மதிப்பீட்டை" மீளாய்வு செய்தன. இச்செயல்முறையின்போது சிவில் சமூக அமைப்புகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டது.

4. முழு நிறையமர்வின்போது பங்குபற்றும் நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு பொருளாதார உதவிகள் வழங்குவது குறித்து இனங்காணப்பட்ட நோக்கங்கள் சம்பந்தமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. தேசத்தின் அபிவிருத்திக் குறிக்கோள்கள் சம்பந்தமாக சிவில் சமூக அமைப்புகளினதும், தனியார் தொழில் முயற்சிகளினதும் பங்களிப்புக் குறித்த சமர்ப்பணங்களும் இடம்பெற்றன.

## இலங்கை சமாதானச் செயல்முறையின் வரலாறு

5. இலங்கையின் கடந்த இரு தசாப்தகால ஆயுதமோதல் காரணமாக 65,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 800,000 பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுள் அதிகமானோர் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அகதிகளாவர். 2000 ஆம் ஆண்டில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், எல்ரீரீஈ தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பக்கச்சார்பற்ற அனுசரணையாளராகச் செயலாற்றுமாறு நோர்வே தேசத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து, தற்போதைய சமாதானச் செயல்முறை ஆரம்பமாகியது. நோர்வேயின் சிறப்பான அனுசரணை நடவடிக்கையின் காரணமாக இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் 2002 பெப்ரவரி 23இல் ஒரு பரஸ்பர யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டன. 2002 செப்டெம்பர் மாதத்திலிருந்து இரு தரப்பினரிடையிலும் ஆறு பேச்சுவார்த்தை அமர்வுகள் இடம்பெற்றுள்ளதோடு, கணிசமான முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. 2002 நவம்பர் 25ந் திகதி ஒஸ்லோவில் சாதித்த பங்கேற்கும் நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் சமாதானச் செயல்முறைக்கு ஆதரவாக உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு வாக்குறுதியளித்துள்ளன. 2003 ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளரின் தலைமையில் வாஷிங்டன் டீசியில் டோக்கியோவுக்கு முன்னரான கருத்தரங்கு இடம்பெற்றது. இது டோக்கியோ மாநாடு சம்பந்தமான அரசியல் உத்வேகத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே இடம்பெற்றது.

## மாநாட்டின் குறிக்கோள்கள்

6. இந்த மாநாட்டின் குறிக்கோள்கள் சர்வதேச சமூகத்துக்கு இலங்கையில் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாகத் தமது வலுவான, ஐக்கியப்பட்ட அர்ப்பணிப்புணர்வை வெளிக்காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதும், அதன் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினர் சமாதானச் செயல்முறையில் மேலும் முன்னேறும் வகையில் தமது முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு ஊக்குவிப்பு வழங்குவதுமாகும். மாநாட்டுக்கு சமாதானச் செயல்முறையில் சம்பந்தமுற்ற ஒரு தரப்பினர் மட்டுமே வந்திருந்தபோதிலும், சர்வதேச சமூகம் சம்பந்தப்பட்ட தரப்பினர் வடக்கு, கிழக்கின் பயனுறுதியுள்ள புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கு அவசியமான நிர்வாகக் கட்டமைப்பு நிதி ஆதரவளிக்கும் அர்ப்பணிப்புணர்வை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக இதைப்பயன்படுத்துகின்றனர். இப்பிரதேசங்களைப் பயனுறுதியுள்ள வகையில் மீளவும் கட்டியெழுப்புதவற்கு இலங்கை அரசாங்கத்துக்கும், எல்ரீரீஈ அமைப்புக்குமிடையில் பங்குடைமையொன்று அவசியமாகும். இச்சட்டகத்தில் ஏனைய ஜனசமூகங்களின் நலன்களையும் பாதுகாக்கும் ஏற்பாடுகள் இடம்பெறுதல்வேண்டும்.

7. இம் மாநாடு தேசம் எதிர்நோக்கும் பொருளாதாரச் சவால்களையும் கவனத்தில் கொள்கிறது. மாநாடு இது தொடர்பில் அரசாங்கத்தின் "இலங்கையை மீளப்பெறல்" முன்முயற்சிக்கு ஆதரவு வழங்குகின்றது. இது இலங்கையைச் சமநிலையாகவும் ஒப்புரவாகவும் அபிவிருத்தி செய்யும், அனைத்துமடங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும்.

8. பங்குபற்றுவோர் எல்ரீரீஈ அமைப்பு டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாமை குறித்துக் கவலை வெளியிட்டனர். இந்த மாநாடு இலங்கை அரசு சமாதானச் செயல்முறையைத் தொடருவதற்கான தனது திடசங்கற்பத்தை மீளவுறுதிசெய்து, இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

## சமாதானச் செயல்முறையை முன்னேற்றுவதில் மாநாட்டின் முக்கியத்துவம்

9. பங்குபற்றியோர் இலங்கையில் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வு உலகில் ஆயுதமோதல்களைச் சமாதான வழிகளில் தீர்க்கும் முயற்சிகள் விடயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக விளங்குமென்று தெரிவித்தனர். மாநாடு ஓர் ஐக்கிய இலங்கையுள் சமஷ்டிக்கட்டமைப்பின்

அடிப்படையில் நிரந்தரமான, பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தை அடைந்ததற்கு இரு தரப்பினரும் கொண்டுள்ள அர்ப்பணிப்புணர்வைப் பாராட்டியது. மேலும், மாநாடு சமாதானத்தின் கண்ணுக்குப் புலப்படக்கூடிய இலாபப்பங்குகள் இலங்கையின் சகல மக்களையும் சென்றடையவேண்டியது முக்கியமானதென்றும் வலியுறுத்தியது.

## சமநிலைப்படுத்தப்பட்ட மனிதாபிமான மற்றும் பொருளாதார உதவிகள்

10. மாநாடு அவசர மனிதாபிமான உதவி, வடக்கு - கிழக்கில் பாதிப்புற்ற பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான இடைத்தவணை மற்றும் நீண்டதவணை உதவிகள், மற்றும் முழுத்தோற்றத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான உதவி என்பவற்றின் முக்கியத்துவத்தைக் கவனத்துக்கெடுத்துக் கொண்டது. மாநாடு உதவி வழங்குவதில் மிகவும் நுண்மையான இனத்துவ மற்றும் பூகோளவியல் சமநிலையைப் பூரணமாகக் கவனத்தில் கொள்ளவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. மாநாடு போரினால் அழிவுற்ற பிரதேசங்களில் தேவைகளை இனங்காணும் வடக்கு-கிழக்கின் தேவைகள் மதிப்பீட்டு ஆவணத்தை வரவேற்கின்றது. கொடையாளர் சமூகம் "இலங்கையை மீளப்பெறல்" வடக்கு-கிழக்கின் "தேவைகள் மதிப்பீடு", வடக்கு-கிழக்குக்கு அண்மையிலுள்ள மோதல் பாதிப்புள்ள மாவட்டங்களின் "தேவைகள் மதிப்பீடு" மற்றும் "தேவைகள் மதிப்பீட்டையும்" "இலங்கையை மீளப்பெறலையும்" இணைக்கும் இணைப்பு ஆவணம் போன்ற மாநாட்டுக்கு வழங்கப்பட்ட மூலவள ஆவணங்களினடிப்படையில் இலங்கைக்கு உதவிவழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தது.

## கொடைதருநர்கள் தெரிவித்த ஆதரவு

11. பங்குபற்றிய கொடைதரும் தேசங்களும், சர்வதேச அமைப்புகளும் முழுநாட்டுக்கும் 2003-2006 காலப்பகுதிக்கெனத் திரட்டு முன்மதிப்பீடாக 4.5 பில்லியன் US $ க்கு அதிகமான தொகையை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. இதற்கு மேலதிகமாக, சில நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. ஏனையோர் தமது அர்ப்பணிப்புப் பொறுப்புகளை நிலைதகு சமாதானச் செயல்முறையென்றும் அனுமானத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

12. பல நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் வடக்கு, கிழக்குக்கான தமது கணிசமான உதவிகள் குறித்துக் குறித்துரைப்பாகத் தெரிவித்துள்ளன. அவர்களுள் பல இத்தகைய உதவிகள் வழங்கப்படுவது சமாதானச் செயல்முறையில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் தாம் மேலதிக உதவிகளையும் வழங்கத்தயாரென்று ஏனையோர் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு உதவி சென்றடையும் வழிமுறைகள்

13. சர்வதேச சமூகம் மனிதாபிமான நிவாரண உதவி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு என்பவற்றுக்குத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புணர்வைக் காணப்பிப்பதோடு, வடக்கு, கிழக்கின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி புதிது புனைதலான நிர்வகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதில் சம்பந்தமுள்ள தரப்பினர் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென்றும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளனர். இந்நோக்கத்துக்காக இரு தரப்பினருடனும் ஒத்துழைக்கும் தனது அர்ப்பணிப்புணர்வையும் சர்வதேச சமூகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இக்கட்டமைப்பு தன்னளவில் இலங்கையில் மீளிணக்கத்துக்கு வழிசமைக்கும். மாநாடு வடக்குக் கிழக்கில் ஏற்கனவே இருதரப்பு மற்றும் பல்தரப்பு வழிமுறைகளூடாக உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சில மனிதாபிமான உதவிக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்துத் திருப்தி தெரிவித்துள்ளது. உலகவங்கியால் நிர்வகிக்கப்படவுள்ள "வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதி(NERF)" தாபிக்கப்பட்டதையும் மாநாடு வரவேற்கின்றது. இது வடக்கு, கிழக்கு உதவிக்கான முக்கிய வழிமுறையாகும். கொடையாளர் சமூகத்திடமிருந்து பல்வேறு வடிவங்களிலான உதவிகளைப் பெறுவதில் இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் நெகிழ்ச்சிகரமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் மாநாடு வலியுறுத்தியது. உதவிக்கோடு இடம்பெறும் கருத்திட்டங்களில் வளாகப்பொறுப்பு, ஒளிவுமறைவின்மை, வேகம் மற்றும் வினைத்திறன் என்பதை உறுதிசெய்யும் வகையில் நல்லாட்சிமுறையை மேம்படுத்துவதற்கான இயலுமைகளைக் கட்டியெழுப்பும் விடயத்திலும் உதவி புரிவதற்குக் கொடையாளர் சமூகம் விருப்பம் தெரிவித்துள்ளது.

## வலுவான, வளர்ச்சி நோக்கம் கொண்ட பேரியல்பு - பொருளாதாரக் கொள்கையின் முக்கியத்துவம்

14. மாநாடு இலங்கை அரசாங்கம் தனது "இலங்கையை மீளப்பெறல்" ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வலுவான வறுமைக்

குறைப்பு மற்றும் நிலைதகு அபிவிருத்தி குறித்த பொருளாதாரக் கொள்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. நிலைதகு அபிவிருத்தி பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தனியார் துறைக்கான ஊக்குவிப்பு என்பவற்றிலும் தங்கியுள்ளது.

## சமாதானச் செயல்முறையின் முன்னேற்றம்

15. கடந்த காலச் சமாதானப் பேச்சுவார்த்தை அமர்வுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை மாநாடு வரவேற்றுள்ளது. ஒஸ்லோ பிரகடனக் கோட்பாடுகளின் அடிப்படையில் சமாதானச் செயல்முறையை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் தம்மாலியன்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தைக் கொடையாளர்கள் நினைவூட்டினர். கொடையாளர்கள் வடக்கு, கிழக்கில் போரினால் பாதிப்புற்ற மக்களின் அவசரத் தேவைகளுக்கு உதவுவதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். வடக்கு-கிழக்கில் முன்னுரிமைப்படுத்தல் மற்றும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் என்பவை இலங்கை அரசாங்கம் மற்றும் எல்ரீரீஈ பங்குடைமை அடிப்படையில், சகல ஜனசமூகங்களின் நலன்கள் குறித்த போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இடம்பெறும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் புனர்நிர்ணமாணம், மற்றும் அபிவிருத்திக்கென வழங்கப்படும் நிதியுதவிகள் குறித்துரைப்பாக இந்த நோக்கத்துக்காகவே செலவிடப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென்று மாநாடு எதிர்பார்க்கின்றது.

16. நிரந்தரமானதும், சமத்துவமானதுமான அரசியல் தீர்வொன்றை நோக்கி சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவாக முன்னேறவேண்டுமென்று மாநாடு வலியுறுத்தியது. இத்தகைய தீர்வு மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பு என்ற அடிப்படையில் ஏற்படுதல் வேண்டும். இது விடயத்தில் இரு தரப்பினரும் ஹக்கோன் நகரில் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஆறாவது அமர்வில் கலந்துரையாடப்பட்டவாறு மனித உரிமைகள் பிரகடனமொன்று குறித்து விரைவில் உடன்பாடு காணப்படுமென்று மாநாடு எதிர்பார்க்கின்றது.

17. மாநாடு பேச்சுவார்த்தை மூலமான சமாதானச் செயல்முறை குறித்த எல்ரீரீஈ அமைப்பின் அர்ப்பணிப்புணர்வை வரவேற்பதோடு, அவர்கள் இயன்றளவு விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்ப வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றது. வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களின் மக்கள் உடனடியாகவே சமாதானத்தின் பங்குலாபங்களை அனுபவிக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும் சமாதானச் செயல்முறையை முன்னேற்றுவதற்கான இலங்கை அரசாங்கத்தினதும், எல்ரீரீஈ அமைப்பினதும் வெளிப்படையான அர்ப்பணிப்புணர்வு வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் அழிவுற்ற பிரதேசங்களில் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச உதவி வழங்கலுக்கு அவசியமாகும்.

## கொடைதருநர் ஆதரவுக்கும், சமாதானச் செயல்முறையில் முன்னேற்றத்துக்குமிடையிலான தொடர்பிணைப்பு

18. கொடையாளர் சமூகத்தின் உதவி இருதரப்பினரும் ஒஸ்லோவில் உடன்பாடுகண்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் சமாதானச் செயல்முறையில் கணிசமான, சமாந்தர முன்னேற்றத்தோடு நெருக்கமாக இணைப்புற்ற விடயமாகவிருத்தல்வேண்டும். நிலைமாற்றச் செயல்முறையின் புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி அம்சங்களைக் கையாளுவதற்கு இயன்றளவு விரைவில் ஒரு தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் கலந்துரையாடல்களில் இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் ஈடுபடவேண்மென்று மாநாடு விரும்புகின்றது. இச்செயல்முறைக்கு இருதரப்பினரும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் இறுதி அரசியல் தீர்வு குறித்த தெளிவான அம்சங்களை உள்ளடக்கிய வழிமுறையமைப்பத் திட்டமொன்று விரைவாக அபிவிருத்தி செய்யப்படுதல்வேண்டும். இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் பின்வரும் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் பிரத்தியேகமாக உள்ளிட்ட வகையில் சமாதானச் செயல்முறையிலான முன்னேற்றத்தை நெருக்கமாக மீளாய்வு செய்யவும், கண்காணிக்கவும் எண்ணுகின்றது.

அ. இரு தரப்பினரும் போர்நிறுத்த உடன்படிக்கையோடு பூரணமாக இணங்கியொழுகுவது.

ஆ, வடக்கு-கிழக்கில் அபிவிருத்திச் செயற்பாடு குறித்த, பயனுறுதியுள்ள வழங்கல் வழிமுறையமைப்புகள்.

இ. தாய்லாந்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நான்காவது அமர்வின் பிரகடனத்தில் உடன்பாடு கண்டவாறு முஸ்லீம் தூதுக்குழு ஒன்றின் பங்கேற்பு.

ஈ. ஒஸ்லோ பிரகடனத்தின் கோட்பாடுகளினடிப்படையில் ஓர் இறுதித்தீர்வை நோக்கிய சமாந்தர முன்னேற்றம்.

உ. ஆயதமோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகளுக்கத் தீர்வுகள்.

ஊ. சகல மக்களினதும் மனித உரிமைகளைப் பயனுறுதியுள்ள வகையில் முன்னேற்றுவதும், பாதுகாப்பதும்.

எ. சமாதானத்தைக் கட்டியெழுப்பதல், முரண்பாட்டு நிலைமாற்றம் மற்றும் புனர்நிர்மாணச் செயல்முறைகளில் பயனுறுதியுள்ள வகையில் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உள்ளடக்குதலும் சகல அரசியல் அரங்குகளிலும், தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களிலும் ஒப்புரவாக பெண்கள் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தலும்.

ஏ. வயதில் குறைந்தவர்களைப் படைகளில் சேர்ப்பதை நிறுத்துவது குறித்த யுனிசெப் ஆதரவுச் செயல்திட்டத்துக்கமைவாகவும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட, வயதில் குறைந்தோரை விடுவிப்பதற்கும் புனர்வாழ்வளிப்பதற்கும், மீண்டும் அவர்களைச் சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்குமான பயனுறுதியுள்ள நடவடிக்கைகளை எடுத்தல்.

ஐ. உடல்ரீதியாக அல்லது உளரீதியாக அங்கவீனமுற்ற வடக்கு, கிழக்கின் முன்னாள் போராளிகள் மற்றும் சிவிலியன்களின் புனர்வாழ்வு.


ஒ. ஓர் அரசியல் தீர்வை எட்டும் சூழமைவில் ஒரு பொருத்தமான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்புடன் கட்டம் கட்டமான, சமநிலைப்படுத்தப்பட்ட சரிபார்க்கக்கூடிய தீவிரக்குறைப்பு, இராணுவங்களைக் கலைத்தல் மற்றும் வழமைநிலையாக்கல் செயல்முறை குறித்து ஓர் உடன்பாட்டுக்கு வருதல்.

## சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனியார் தொழில் முயற்சிகளிலிருந்து உள்ளீடுகள்

19. மாநாடு கொழுப்பில் 2003 ஏப்ரலில் 26-27 திகதிகளிலும், டோக்கியோவில் 2003 ஜுன் 08ந் திகதியும் இடம்பெற்ற கூட்டங்களின் சிவில் சமூக உள்ளீடுகளை வரவேற்கின்றது. மாநாடு சம்பந்தமுற்ற தரப்பினர் மேற்கொண்டிருக்கும் சவால்மிக்க பணிகளில் வெற்றியீட்டுவதற்குச் சிவில் சமூக அமைப்புகளின் தீவிரமான, தொடர்ச்சியான ஈடுபாடு அவசியமென்று கருதுகின்றது. தனியார் தொழில் முயற்சிகள் வகிக்கும் துடிப்பான பாத்திரத்தினால் மாநாடு ஊக்கம் பெறுகின்றது. மாநாடு கல்விமான்கள், தொழிற்சங்கங்கள், உயர்தொழில் வல்லுநர் குழுக்கள், மத அமைப்புகள் மற்றும் ஏனையோரின் பங்களிப்பையும் அங்கீகரிக்கின்றது.

## கண்காணிப்பும், மீள்பார்வையும்

20. கொடையாளர் ஆதரவு மற்றும் சமாதானச் செயல்முறையில் முன்னேற்றம் என்பவற்றுக்கிடையிலான உறவிணைப்பைக் கருத்தில் கொண்டு, சர்வதேச சமூகம் சமாதானச் செயல்முறையிலான முன்னேற்றம் குறித்துக் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு செய்யவுள்ளது. சர்வதேச சமூகம் தமது சொந்த உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காலத்துக்குக்காலம் இடம்பெறும் இம்மீளாய்வுகளின்



பெறுபேறுகளை மிகவும் அவதானமாகக் கவனத்திற் கொள்ளவுள்ளது. ஜப்பான் அனுசரணையாளராகப் பணியாற்றும் நோர்வே தேசத்துக்கு முழு மதிப்பளித்து, அமெரிக்காவுடனும், ஐரோப்பிய யூனியனுடனும் ஒத்துழைத்து இயன்றளவு விரைவில் இந்நோக்கத்துக்கான வழிமுறையமைப்புகளை ஏற்படுத்தும் வகையில் அவசியமான ஆலோசனைகளை நடத்தும்.

**பின்தொடர் நடவடிக்கை**

21. மாநாடு, அதற்கான உபசரணை நாடு என்ற வகையில் ஜப்பான் மாநாட்டின் பெறுபேறுகளை எல்ரீரீஈ அமைப்புக்கு அறிவிக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கின்றது.

# 2003 ஜீன் 9~10 திகதிகளில் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள்

- அவுஸ்ரேலியப் பொதுநலவாயம்
- அவுஸ்ரேலியக் குடியரசு
- பங்களாதேஷ் மக்கள் குடியரசு
- பெல்ஜிய ராஜ்ஜியம்
- பிரேசில் சமஷ்டிக் குடியரசு
- புரூணை தாருஸ்ஸலாம்
- கம்போடிய ராஜ்ஜியம்
- கனடா
- மக்கள் சீனக்குடியரசு
- ஹெலனிக் கிரீஸ்
- வத்திக்கான் மாநகர் அரசு
- ஐஸ்லாந்து குடியரசு
- இந்தியா
- இந்தோனியா குடியரசு
- ஈரான் இஸ்லாமியக் குடியரசு
- அயர்லாந்து
- இஸ்ரேல் அரசு
- இத்தாலிக் குடியரசு
- ஜப்பான்
- கொரியக் குடியரசு
- குவைத் அரசு
- லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு
- கிராண்ட் டச்சீ ஓவ் லக்ஸெம்போர்த்
- மலேசியா
- நேபாள ராஜ்ஜியம்
- நெதர்லாந்து ராஜ்ஜியம்
- நியூசிலாந்து
- நோர்வே ராஜ்ஜியம்
- ஓமான்
- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு
- பிலிப்பைன்ஸ் குடியரசு
- போர்த்துக்கல் குடியரசு
- ரஷ்ய சமஷ்டி
- சவூதி அரேபிய ராஜ்ஜியம்
- சிங்கப்பூர் குடியரசு
- தென்னாபிக்கக் குடியரசு
- ஸ்பெயின்
- இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு
- சுவீடன் ராஜ்ஜியம்
- சுவிஸ் கூட்டுச்சமஷ்டி
- தாய்லாந்து ராஜ்ஜியம்
- உக்ரெயின்
- ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
- பெரிய பிரித்தானியா மற்றும் வட-அயர்லாந்து ஐக்கிய ராஜ்ஜியம்
- அமெரிக்க ஐக்கிய ராஜ்ஜியம்
- வியட்நாம் சோஷலிஸக் குடியரசு
- ஐரோப்பிய ஆணைக்குழு
- ஆசிய அபிவிருத்தி வங்கி
- ஆசிய உற்பத்தித்தகவு அமைப்பு
- ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு
- செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு
- செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சர்வதேசக் குழு
- விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்
- சர்வதேச தொழில் அமைப்பு
- சர்வதேச நாணய நிதியம்
- புலம்பெயரல் சம்பந்தமான சர்வதேச அமைப்பு
- பலதரப்பு முதலீட்டு உத்தரவாத முகவர்நிலையம்
- ஐக்கிய நாடுகள் செயலகம்
- ஐக்கிய நாடுகள் மனிதக் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம்
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- ஐக்கிய நாடுகள் ஜனத்தொகை நிதியம்
- அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயம்
- ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்
- ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு
- போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பிலான ஐ.நா அலுவலகம்
- ஐ.நா உலக உணவுத் திட்டம்
- உலக சுகாதார ஸ்தாபனம்
- உலக வங்கி

# உதவியை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்!

- ரொனி டி மெல் -
பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் நிதியமைச்சர்



டோக்கியோ கடனுதவி மாநாட்டில் கிடைக்கும் கடனையோ, உதவியையோ நாம் நன்கு பயன்படுத்திக் கொண்டால், இலங்கையரென்ற வகையில் நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய முடியும்.

அப்படி நடந்தால் அது எம் அனைவரினதும் அதிர்ஷ்டமாகும். அப்படி நடக்காமல் வெளிநாட்டு உதவியைப்பெற்றுக்கொள்வதோ, அதற்காக உதவிவழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதோ ஒன்றும் புதியவிடயமல்ல. 1970 க்குப் பின்னர் பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் வெளிநாட்டு உதவியைப்பெற்றுள்ளன. கலாநிதி.என்.எம்.பெரேரா, யூ.பீ.வன்னிநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, நான், டீ.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க, இவர்கள் அனைவருமே வெளிநாட்டு உதவிபெற்றவர்கள்தான். இவர்கள் உதவி மாநாடுகளில் பங்குபற்றியவர்கள்தான். ஆகவே இது ஒன்றும் புதிய விடயமல்ல.

மறு புறத்தில் வெளிநாட்டுதவியைப் பெறுவது ஒன்றும் தவறில்லை. எமது நாட்டைப் போன்று ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தும் கடன்வாங்கியுள்ளன. இன்று அபிவிருத்தியுள்ளவையென்று பெயர்பெற்ற நாடுகளெல்லாம் அதற்குமுன்னர் வெளிநாட்டுதவியைப் பெற்றுக்கொண்டன. ஆகையால் வெளிநாட்டுதவி பெறுவதில் தவறு எதுவுமில்லை. ஆயினும் இவ்வாறு பெற்றுக்கொள்ளும் உதவி சரியான திட்டப்படி உபயோகிக்கப்படுகின்றதா என்பதே கேள்வியாகும். அதைச் சரியான திட்டப்படி பயன்படுத்தினால் மாத்திரமே அதனால் உரிய பயனைப்பெற்றுக்கொள்ள முடியும். அப்படியாக முறையான திட்டத்தின்படி இப்பணத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் இந்த நாட்டை விரைவில் அபிவிருத்திசெய்வது சாத்தியமாகும்.

டோக்கியோ மாநாட்டின் பின்னர் இந்தக்கடன் எந்த நிபந்தனைகளினடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது, வட்டிவீதம் என்னவென்று இன்னும் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அரசாங்கம் இந்த உதவிமாநாடு குறித்துப் பூரணமான தகவல்களைப் பாராளுமன்றத்துக்கு இன்னமும் வெளிப்படுத்தவில்லை. ஆகவே இக்கடன் என்ன நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளதென்று என்னால் கூறமுடியாது. அக்காலத்தில் நாம் கடனுதவி மாநாடுகள் குறித்து ஊடகங்களில் பெரிதாகப் பிரசாரமெதுவும் செய்யவில்லை. நாம் மிகவும் அமைதியாக இந்த மாநாடுகளில் கலந்துகொண்டு விட்டு மீண்டும் நாட்டுக்குத் திரும்பிவந்து மக்களுக்கு விடயங்களை வெளிப்படுத்தினோம். ஆயினும் இந்த அரசாங்கம் இந்த உதவிமாநாடு குறித்து மக்களுக்கு உண்மையான விடயங்களை வெளிப்படுத்தியதில்லை. இந்த உதவி என்ன நிபந்தனைகளின்பேரில் கிட்டியுள்ளதென்று யாருக்குத் தெரியும்? டோக்கியோ உதவி மாநாட்டில் பெரிய கடன்தொகைகளை வழங்கியிருப்பது உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று அமைப்புகளுமாகும். இந்த மூன்று நிறுவனங்களும் மிகவும் கடுமையான நிபந்தனையின்பேரிலேயே பணம் வழங்கும் அமைப்புகளென்று நான் நன்கறிந்த விடயமாகும். ஆகையால் அரசாங்கம் தாங்கள் எந்த நிபந்தனைகளின் பேரில் கடன்பெற்றுள்ளனர் என்பதை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். ஒருவேளை இந்த நிபந்தனைகள் எமக்கு மிகவும் பாதகமானவையாகவும் இருக்கக்கூடும். இந்த நிபந்தனைகள் சம்பந்தமாக எனக்கு மிகவும் நல்ல விளக்கம் உள்ளது. அக்காலத்திலும் இந்த நிபந்தனை விதிப்பதற்கு

இந்தநிறுவனங்கள் பெரும் முயற்சி எடுத்தன. நான் பெருங்கஷ்டங்களுக்கு மத்தியிலேயே எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. பாரிஸ் நகரில் இடம்பெற்ற ஓர் உதவி குறித்த மாநாட்டுக்கு வந்திருந்த நாடுகள் விதித்த நிபந்தனைகளுக்கு இணங்க முடியாததென்று கூறி நாம் வெளியேறினோம். கூட்டத்தை ஒத்திவைக்குமாறு தெரிவித்தே நான் வெளியேறினேன். அடுத்த நாள் அந்த நாடுகள் எம்மீது விதிக்கவிருந்த நிபந்தனைகளைத் தளர்த்திய பின்னரே நான் உதவி மாநாட்டுக்குச் சென்றேன். அத்தகைய போராட்டங்களின் பின்னரே அக்காலத்தில் நாம் உதவிபெற்றுக்கொண்டோம். உதவிவழங்கும் நாடுகள் முன்வைக்கும் நிபந்தனைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதானால் அதனால் பாதிக்கப்படுவோர் இந்த நாட்டு மக்களேயாவர். அப்படியானால் மக்கள் கஷ்டங்களுக்கும், தொல்லைகளுக்கும் முகங்கொடுக்க நேரிடும். இதனால் தான் டோக்கியோ மாநாட்டில் உதவிபெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அரசாங்கம் இன்னமும் இந்த நிபந்தனைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காதபடியால், அது குறித்து மேலும் தெளிவாகக் கூறமுடியாதுள்ளது. ஆயினும் இந்த நிபந்தனைகள் இலகுவானதல்லவென்பது மாத்திரம் தெளிவானதாகும்.

எமக்கு உதவி மாநாடுகளின் மூலம் கிடைத்த வெளிநாட்டு உதவிகள் பெருமளவுக்கு நல்லமுறையில், பயன்படுத்தப்பட்டன. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் இந்த உதவிகள் அத்தனைதூரம் நல்லமுறையில் பயன்படுத்தப்படவில்லையென்பதையும் கூறவேண்டும். எமது நாட்டை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு எமது மூலவளங்கள் மாத்திரம்போதாது. எமது வளங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு எமது நாட்டை அபிவிருத்திசெய்ய முயன்றிருந்தால் நாம் இன்னமும் பழையநிலையிலேயே இருந்திருப்போம். ஆகவே கடந்த காலங்களில் இந்தநாட்டில் வளர்ச்சி ஏற்பட்டது வெளிநாட்டுதவிகள் மூலமாகவேயாகும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில், ஊழல்கள், ஏமாற்று, மற்றும் திறனற்ற நிர்வாகம் காரணமாக வெளிநாட்டுதவிகள் விரயம் செய்யப்பட்டுள்ளன. லுனுகமவெஹர நீர்ப்பாசனத்திட்டம் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். அரசியல் அழுத்தங்கள் மற்றும் தவறான அரசியல் தலையீடுகள் காரணமாக குளத்தின் அணைக்கட்டு தவறான பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இதனால் திட்டத்தின் பலனை எம்மால் உரியமுறையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நில்வளகங்கை உத்தேசத்திட்டமும் அவ்வாறே தோல்வியில் முடிவடைந்தது. தோல்வியில் முடிவடைந்த இத்தகைய கருத்திட்டங்களுக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைப்போலவே, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் பொறுப்பை ஏற்கவேண்டும். இதனால் கிடைக்கும் வெளிநாட்டுதவி சரியான முகாமைத்துவத்தின் கீழ் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நான் நிதியமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் சகல விடயங்களும் ஓரிடத்தில் கையாளப்பட்டன. எனக்குக் கீழ் ஐந்து அமைச்சுகள் இருந்தன. அதனால் இன்றிருப்பதை விட அன்று நன்குதிட்டமிட்ட முறையில், துரிதமாகச் செயற்பட முடிந்தது. தற்போதுள்ள அதிகாரித்துவவாதம், விந்தையான கேள்வி மனுக்கோரல் விதிமுறைகள், மற்றும் தாமதங்களை ஏற்படுத்தும் தொழில்நுட்ப அறிக்கைகள் காரணமாக பல்வேறு தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் வெளிநாட்டுதவிகளை உடனடியாகப் பயன்படுத்தி வேலைகளை ஆரம்பிக்கமுடியாது. உதாரணத்துக்கு கொழும்பு-மாத்தளை அதிவேகப் பாதையை எடுத்துக்கொள்ளலாம். அதற்குரிய நிதி முழுவதும் கிடைத்துள்ளது. ஆயினும் பன்னிரண்டு வருடகாலமாக கதைத்ததுதான் மிச்சம். இன்றுவரை எந்தவிதமான வேலையும் இடம்பெறவில்லை.

டோக்கியோ மாநாட்டில் கிடைத்த உதவியைப் பயன்படுத்தும் விடயத்தில் எல்ரீரீஈ அமைப்பு இடைக்கால நிர்வாகத்துக்கான கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. இந்த நாட்டிலுள்ள இரு பிரதான கட்சிகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. இடைக்கால நிர்வாகம் குறித்து இந்த நாட்டு மக்களுக்கு காரமணில்லாத பீதியொன்று உள்ளது. இது குறித்துப் பல்வேறு அபிப்பிராயங்கள் இருப்பதுபோலத் தோன்றுகின்றது. அல்லது ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலமாக எல்ரீரீஈ அமைப்புக்கு இடைக்கால நிர்வாகமொன்றை வழங்கினார். அன்று சந்திரிகா குமாரதுங்கவும், அவரின் கணவர் விஜயகுமாரதுங்கவும் எதர்கட்சியிலிருந்து அதை ஆதரித்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி தமது அரசியலமைப்பின் மூலம் இடைக்கால நிர்வாகமொன்றை வழங்க உடன்பட்டதோடு, இடைக்கால அமைச்சரவை ஒன்றுக்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கினர். ஐதேகவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது குறித்துப் பூரணமான வாக்குறுதியொன்றை அளித்துள்ளது. ஆகவே நாட்டை இரண்டாகப் பிரிக்காமல் இடைக்கால நிர்வாகமொன்றை வழங்குவதில் எந்தத்தவறும் இல்லை. நாட்டுக்குத் தீங்கில்லாத வகையில் இந்த இடைக்கால நிர்வாகத்தை வழங்கவது குறித்து நாம் இருதரப்பினரும் கலந்துரையாடுதல் வேண்டும். இடைக்கால நிர்வாகத்தினால் நாடு இரண்டாகப் பிளவுபடமாட்டாது.

நன்றி : சாம விமர்சி



# இடைக்கால ஏற்பாடுகள் : ஒரு பொதுவான பார்வை

-கேதீஸ் லோகநாதன் - அசங்க வெலிகல-

## அ. 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தமும், இடைக்கால நிர்வாகமும்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முரண்பாட்டுத்தீர்வு வழிமுறையமைப்பாக இலங்கையில் இடைக்கால ஏற்பாடுகள் குறித்த முதல்முயற்சி 1987 ஜூலை 29ந் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் இடம்பெற்றது. இந்த ஒப்பந்தம் பின்வரும் விடயங்களை உறுதிசெய்யமுயன்றது.

1. இலங்கையின் ஐக்கியம், இறைமை மற்றும் ஆட்புல ஒருமையைபாதுகாத்தல் (வாசகம் 1-1)
2. ஒரு பல்லினத்துவ, பலமொழிகள் கொண்ட, பன்மைத்துவ, சமூகத்தில் (வாசகம் 1-2) ஒவ்வொரு இனத்துவக் குழுவினதும் தனித்தன்மை கொண்ட கலாசார மற்றும் மொழி அடையாளங்களைப் பேணிப்பாதுகாத்தல் (வாசகம் 1-3). இங்கு சகல பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், சௌஜன்யமாகவும் வாழ்ந்து செழிப்புறுவதோடு, தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.(வாசகம் 1-5), மற்றும்,
3. வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் "தமிழ்பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவந்த பிரதேசங்களாக" அங்கீகரித்தல்.

"தீர்வுகளுக்கு உத்தரவாதம் வழங்கி, இப்பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைப்பதற்கு இந்திய அரசாங்கம் பெயர் குறிப்பிடப்பட்டது. (வாசகம் 2-14)

மேல்வரும் விடயங்களை முன்னேற்றும் வகையில் 1987 டிசம்பரில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான தேர்தலிலிருந்து, 1988 டிசம்பர் 25ந் திகதி அல்லது அதற்கு முன்னராக பொதுமக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்று இடம்பெறும் வரையிலான "இடைக்காலகட்டம்" ஒன்று இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. (வாசகம் 2.2). இந்த வாக்கெடுப்பு கிழக்குமாகாண மக்கள் தாம் தொடர்ந்தும் வட மாகாணத்துடன் இணைந்திருப்பதா அல்லது தனியான ஒரு நிர்வாக அலகாக மாறுவதா என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒன்றாகும்.(வாசகம் 2.3).

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் "இடைக்கால நிர்வாகம்" குறித்த எண்ணக்கருவோ, வழிமுறையமைப்புகளோ தெளிவாகக் கையாளப்பட்டிருக்காதபோதிலும், இந்திய அரசாங்கம் இந்திய இலங்கை-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னராக சகல தமிழ் அரசியல்-இராணுவ அமைப்புகளுக்கும் இது குறித்து அறிவித்திருந்தது. ஆயுத பலாத்காரம் மூலமாக எல்ரீரீஈ அமைப்பு ஏனைய தமிழ் அரசியல்-இராணுவ

அமைப்புகளை ஒடுக்கி ஆதிக்கிநிலைக்கு வந்திருந்த காரணத்தால் அவர்கள் உத்தேச இடைக்கால நிர்வாகத்தில் தமக்கு ஒரு "விசேட கவனிப்பு" அவசியமென்று கோரி அதைப்பெற்றுக்கொண்டது. உத்தேச இடைக்கால நிர்வாகத்தின் குறித்துரைத்த அதிகாரங்களும், கருமங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை.

அந்தவேளையில் இடைக்கால நிர்வாகத்தில் இடம்பெறுவோரைத் தீர்மானிப்பதே முன்னுரிமையாகவிருந்தது. இதன்பிரகாரம், பன்னிரண்டு பேர் கொண்ட இடைக்கால நிர்வாகத்தில் எல்ரீரீஈ அமைப்புக்கு, ஏழு இடங்கள் வழங்கப்பட்டன. தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு இரு ஆசனங்களும், இலங்கை அரசாங்கத்தின் நியமனப் பிரதிநிதிகளுக்கு மூன்று இடங்களும் ஒதுக்கப்பட்டன. மூன்று அரசாங்க நியமனப் பிரதிநிதிகளில் ஒருவர் சிங்களவராகவும், ஒருவர் தமிழராகவும், ஒருவர் முஸ்லீமாகவும் இருப்பரென்றும் தெரிவிக்கப்பட்டது. துரதிஷ்ட வசமாகத் தலைமை நிர்வாகியைத் தெரிவு செய்வதில் எல்ரீரீஈ அமைப்புக்கும், கொழும்புக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டதால் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் ஆரம்பப்பணி தொடரமுடியாதநிலை ஏற்பட்டது. இராணுவ முனைப்புகள் விரைவிலேயே அரசியல் சூழலை மீறிச்செயற்பட்டதால் எல்ரீரீஈ அமைப்புக்கும், இந்திய சமாதானப்படைக்குமிடையில் பகைமைகள் வெடித்தன. இடைக்கால நிர்வாகத்தை குழப்பியடித்தது.

### ஆ.1994-95 பொஐமு-எல்ரீரீஈ பேச்சுவார்த்தைகளும், இடைக்கால ஏற்பாடுகளும் : எல்ரீரீஈ பங்குபற்றலுடன் அல்லது இல்லாமல்?

1994-95 பொஐமு-எல்ரீரீஈ பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் கருத்துவேறுபாடுகளுக்குரிய பிரச்சினையாக விளங்கியது "தமிழ்மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு" அரசாங்கம் எடுத்த பல்வேறு ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளாகும். இவற்றை எல்ரீரீஈ அமைப்பு தம்மைத் தமிழ்மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி, அன்னியப்படுத்தும் கபட வழிமுறைகளாகவே நோக்கியது. கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயம் அரசாங்கம் புனர்நிர்மாணப்பொதியை ஒரு தலைப்பட்சமாக நடைமுறைப்படுத்த எடுத்த முன்முயற்சியாகும்.

1995 பெப்ரவரி 13ந் திகதி அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வுக்கான ஜனாதிபதி பணிக்குழுவொன்றை நியமிப்பதாக அறிவித்தது. அது தனது நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குதல், யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் பிரதான வீதிகளைத் திருத்தியமைத்தல், யாழ்ப்பாணப் பொதுநூலகப் புனரமைப்பு மற்றும் யாழப்பாணப் பொது வைத்தியசாலைத் திருத்தவேலைகள் என்பவை அடங்கியிருந்தன. புனரமைப்புப்பொதி யாழ்ப்பாணத்தையே மையமாகக்கொண்டிருந்தது.

ஜனவரி 16ந் திகதி இந்த ஒரு தலைப்பட்சமான தீர்மானத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எல்ரீரீஈ அமைப்புக்குக் கடிதமூலம் அறிவித்தார். இக்கடிதத்தில் அரசாங்கம் மேற்குறிப்பிட்ட விடயப்பரப்புகளில் பணியை ஆரம்பிக்குமென்றும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை வரவேற்று, "அவர்களின் பணிகளை இலகுபடுத்துவதற்கு" ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்" எல்ரீரீஈ தலைவர் வே.பிரபாகரனுக்கு "அறிவித்திருந்தார்." பணிக்குழுவில் எல்ரீரீஈ அமைப்பு நேரடியாகப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லை.

எல்ரீரீஈ அமைப்பு இது குறித்து அலட்டிக்கொள்ளவில்லை. எல்ரீரீஈ தலைவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு 1995 பெப்ரவரி 25ந் திகதி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்தார். :

> "........ யுத்தத்தினால் அழிவுற்ற பிரதேசங்களில் பாரிய புனரமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை இலகுவாக்கும் வகையில் அரசாங்கம் இத்தீர்க்கமான பிரச்சினைகளை எல்ரீரீஈ அமைப்புடன் கலந்துரையாடித் தீர்வு காணவேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம். இச்சூழமைவில், சகல புனரமைப்புக் கருத்திட்டங்களையும் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தும் வகையில் போதிய அதிகாரங்களைக் கொண்ட உரிய அதிகாரசபையென்று நிறுவப்படவேண்டுமென்றும், இதில் அரசாங்கப் பிரதிநிதிகளும், எல்ரீரீஈ பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டுமென்றும் எமது தூதுக்குழு கடந்த சுற்றுப்பேச்சுவார்த்தைகளின்போது தெரிவித்திருந்ததைச் சுட்டிக்காட்ட விரும்பகிறோம். இந்த ஆலோசனையை அரசாங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர்."

ஜனாதிபதி பணிக்குழுவில் பங்குபற்றுமாறு பின்னர் எல்ரீரீஈ அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும், அது பின்னர் ஏற்பட்ட சிந்தனையின் விளைவேயாகும். ஆயினும் அதன் முன்னர் சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது. நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் தோற்றப்பாடு சந்தேகங்களை ஏற்படுத்தும் ஒன்றாக மாறிவிட்டது. எப்படியாயினும், எல்ரீரீஈ அமைப்பின் விருப்பு தமிழ்மக்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அதிகாரசபையில் பங்கேற்கவேண்டும் என்பதேயாகும். தமிழ்மக்களின் நலன்களைப் புலிகளின் நலன்களிலிருந்து பிரித்துப் பார்ப்பதும், தமிழ்மக்களைச் சிறிது சிறிதாகப் புலிகளின் செல்வாக்கிலிருந்து அகற்றுவதுமே குமாரதுங்க அரசாங்கத்தின் பரந்த உத்திகளில் பிரதான விடயமாக அமைந்திருந்தது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். மறுபுறத்தில் எல்ரீரீஈ அமைப்பினர் தாமே தமிழ் மக்களின் சட்டநிலைத்தகவுள்ள ஒரே பிரதிநிதிகளென்றும், தாமே

தமிழர் நலன்கள் குறித்துப்பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதிலும் உறுதியாகவிருந்தனர். இது தொடரும் சமாதானச் செயல்முறையில் நேரடியாக தாக்கத்தைக்கொண்டுள்ள ஒரு விடயமென்பதை நாம் காணலாம்.

மொத்தத்தில், 1994-95 இல் பொஜமு-எல்ரீரீஈ பேச்சுவார்த்தைகள் தீர்வுக்குமுந்திய இடைக்கால ஏற்பாடுகள் எதுவும் வளர முன்னேற்றம் காணாவிட்டாலும், அரசாங்கம் புனர்வாழ்வுக்கான ஜனாதிபதி பணிக்குழுவொன்றை நியமிக்க ஆலோசனை கூறியதும், புனர்நிர்மாணத்தை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கம் மற்றும் தமது பிரதிநிதிகளைக் கொண்ட முறையான அதிகாரசபை" அமையவேண்டுமென்ற எல்ரீரீஈ பிரேரணையும் ஏதோவொரு வகையிலான இடைக்கால நிர்வாகத்தை நெருங்கி வந்திருந்தன.

## இ.பொஜமுவின் 1997 அக்டோபர் அரசியலமைப்பு சீர்திருத்தப் பிரேரணைகள், இது குறித்த பொஜமு-ஐதேக கருத்தொருமிப்பு மற்றும் 2000 ஆகஸ்ட் இடைக்கால நிர்வாகம் குறித்த அரசியலமைப்பு வரைபு:

### பொஜமுவின் 1997 அக்டோபர் அரசியலமைப்பு சீர்திருத்தப் பிரேரணைகள்

1997 அக்டோபர். பிரேரணைகள் எந்தவிதமான இடைக்கால ஏற்பாடுகள் குறித்தும் கவனஞ்செலுத்தவில்லை. ஆயினும் ஐதேக வுடன் கலந்துரையாடிய பின்னர், கிழே விபரிக்கப்பட்டவாறு சில நடவடிக்கைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

### 1997 அக்டோபர் பிரேரணைகளுக்கான திருத்தங்கள் குறித்த பொஜமு-ஐதேக கருத்தொருமிப்பு

பொஜமு வுக்கும், ஐதேக வுக்குமிடையிலான கலந்துரையாடல்களின் விளைவாக மக்கள் கருததுக்கணிப்பு வாக்கெடுப்பொன்று இடம்பெறும் வரையில் வடக்கு-கிழக்கை நிர்வாகம் செய்வதற்கான இடைக்கால சபையொன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. குறித்துரைத்த காலத்தினுள் (5 வருடங்கள்) கிழக்கு மாகாணத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு இடம்பெறாவிடில், அத்தகைய வாக்கெடுப்பு சாத்தியமாகும்வரையில் வடக்கும், கிழக்கும் இரு தனித்தனி இடைக்கால சபைகளினால் நிர்வகிக்கப்படும் பயனுறுதியைப் பொறுத்தவரையில், இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13வது திருத்தத்தின் பிரகாரம் தற்போது நிலவும் சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒருங்கிணைப்புக்கு எதிராக வாக்களிக்கும் வரையில் வடக்கு, கிழக்கு தொடர்ந்தும் இணைப்புற்றிருக்குமென்றும், ஐந்து வருட முடிவில் இத்தகைய வாக்கெடுப்பு இடம்பெறாவிடில் வடக்கு, கிழக்கு இரண்டு தனியான நிர்வாக அலுகுகளாகப் பிரிய வேண்டுமென்றும் பொஜமு-ஐதேக உடன்பாடு ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதி சம்பந்தமான ஏற்பாட்டை பத்துவருடங்களாக நீடிக்கும் ஆலோசனையும் இதில் இடம்பெற்றிருந்தது.

### 2000 ஆகஸ்ட் அரசியலமைப்பு வரைபு

2000 ஆகஸ்டில் இடம்பெற்ற அரசியலமைப்பு வரைபு 1997 அக்டோபர் பிரேரணைகளில் இடம்பெற்றிருந்த பல வாக்கெடுப்புகளுக்குப் பதிலாக[3], கிழக்கு மாகாணத்தில் (அதாவது திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில்) தனியொரு வாக்கெடுப்பை ஒன்பது வருடங்களுக்குப் பின்னர், ஒன்பது வருடம் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் "இந்த மாவட்டங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களுடன் சேர்த்து வடக்கு-கிழக்கு பிராந்தியமென்று அழைக்கப்படும் ஒரு பிராந்தியத்தை ஆக்கவேண்டுமா, இல்லையா என்பதை வாக்காளர்கள் தீர்மானிக்க உதவும் வகையில்" வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1997 அக்டோபர் பிரேரணைகளில் இடம்பெற்றிருந்த தென்கிழக்கு பிராந்திய சபை தற்போது இருக்கவில்லை. அரசியலமைப்பு வரைபு பத்து வருடகால இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. இதில் ஐந்து வருடகாலம் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இடைக்கால சபையும் (உறுப்புரை 243), எஞ்சிய ஐந்து வருடகாலம் மக்களைத் தெரிவு செய்யப்படும் இடைக்காலப் பிராந்திய சபையும் (உறுப்புரை 253) செயற்படும்.

இரு வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களுக்கு ஒரு ஆளுநர், ஒரு முதலமைச்சர் மற்றும் ஒரு அமைச்சர்கள் சபை என்பவை இருக்கும். இது இரு பிராந்தியங்களுக்கான (வடக்கு மற்றும் கிழக்கு ஒரு பிராந்திய நிர்வாகசபையாக இருக்கும். வரைபுக்கான முதலாவது அட்டவணையின் பகுதியின் பிரகாரம் இது இடம்பெறும். முதலாவது அட்டவணையில் பகுதி பி-யின் பிரகாரம் இது இணைந்த வடக்கு-கிழக்கு பிராந்தியத்தின் ஒரு தனிப்பிராந்திய நிர்வாகம் அல்ல.

## ஈ. 1999 ஆம் ஆண்டில் 01ம் இலக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மதியுரைச் சபைப்பிரமாணங்கள்

1999 நவம்பரில் ஜனாதிபதி பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் 5(1) பிரிவின் கீழ் அவசரகால பிரமாணங்களை ஆக்குவதற்கான தனது தத்துவத்தின் கீழ் செயற்பட்டு, திருத்தப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தின் 5 ஏ பிரிவின் செயற்பாட்டின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டுள்ளதால் பின்வரும் வர்த்தமானி அறிவித்தலை விடுத்தார் :

"பொது ஒழுங்கைப் பேணுவதற்கும், சமூகத்தின் வாழ்வுக்கு அவசியமான வழங்கல்களையும், சேவைகளையும் நிலைநிறுத்தவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருத்தமான அதிகாரசபைகள் நிறைவேற்று மற்றும் நிர்வாகக்குழுமங்களை உரிய முறையில் புரிவதற்கு உதவும் வகையில் மதியுரை சபையொன்றை ஏற்படுத்துவது அவசியமாகியுள்ளது."

இதன் பிரகாரம், பிரமாணங்கள் செயற்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பதினொன்று முதல் பதினேழு அங்கத்தவர் கொண்ட மதியுரைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதில் இரண்டு மாகாணங்களினதும் நிர்வாக மாவட்டங்கள் அனைத்துக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. ஒரு வருடம் அல்லது அதற்கும் குறைவான காலத்துக்கே மதியரைக்குழு அங்கத்தவர்கள் பதவிக்காலத்தை நீடிக்கலாம். ஜனாதிபதி ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்துக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை ஒதுக்குவார். இவர்களின் கடமை மாவட்டத்தின் தேவைகளை மதியுரைக்குழு, ஆளுநர், மற்றும் ஏனைய பொருத்தமான அதிகாரசபைகளின் கவனத்துக்கு கொண்டு வந்து, அது குறித்த நிறைவேற்று மற்றும் நிர்வாகக் கருமங்களைக் கூட்டிணைப்புச் செய்வதாகும்.

பிரமாணம் 5 இல் "ஆளுநர் தனது அதிகாரங்களைப் பிரயோகித்து, கருமங்களைப் புரிவதில் மதியுரைக்குழுவோடு கலந்தாலோசித்தல் அரசியலமைப்பின் பிரகாரம் அல்லது ஏனைய எழுத்து மூலச்சட்டங்களின் பிரகாரம் சட்ட ரீதியானதாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்துவது மற்றும், சட்டம், ஒழுங்கைப்பேணுவது போன்ற விடயங்களில் மதியுரைக்குழு ஆளுநருக்கு ஆலோசனை வழங்கலாம். அது அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமான பிரேரணைகளைச் சமர்ப்பித்து, முன்னுரிமைப்படுத்தலாம். அவற்றுக்கு மூலவளங்களை ஒதுக்குவதிலும் மதியுரை வழங்கலாம். மதியுரைக்குழு வடக்கு, கிழக்கு மாகாணங்களினுள் இறைவரியைத் திரட்டுவதற்காக வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளையும் வழங்கலாம். (பிரமாணம் 6)


மதியுரைக்குழு பின்வரும் தொகுதி விடயங்களில் ஆளுநருக்கு உதவுவதற்காக ஐந்து அங்கத்தவர்கள்கொண்ட சபையொன்றை நிறுவுமாறு பிரமாணம் 9 இன் கீழ் ஜனாதிபதிக்கு விதத்துரைப்புச் செய்யலாம்.

1. சட்டமும் ஒழுங்கும், பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி
2. நிதி, கைத்தொழில், அகநிலையமைவு அபிவிருத்தி போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்
3. கல்வி, கலாசாரமம், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு
4. சூழல், விவசாயமும் காணியும், மீன்பிடி மற்றும் கூட்டுறவுத்துறை, மற்றும்
5. சுகாதாரம், வீடமைப்பு, மகளீர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் கிராம அபிவிருத்தி

ஒரு தொகுதி விடயங்களுக்கு மேலும் ஏதாவது விடயத்தைச் சேர்க்கும் அதிகாரம் மதியுரைக்குழுவுக்கு உண்டு.

கணிசமான பிரயோக நோக்கெல்லையைக் கொண்ட இந்த ஏற்பாடு கூடுதலாக வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீட்டெடுக்கும் இடைக்கால அரசு அதிகாரத்துவவாதப் பிரதிவிளைவு ஆகும். இதில் அந்த நேரத்தில் பொஜமு வின் நட்பு அமைப்பாகவும், பாராளுமன்றத்தின் அதிக ஆசனங்களைக் கொண்ட தமிழ் கட்சியாகவும் விளங்கிய ஈபிடிபி கட்சிக்கும் இடமளிக்கப்படவிருந்தது.

ஜனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் ஏற்பாட்டைச் சூட்சுமமாகப் பயன்படுத்தி, 13வது திருத்தத்தின் கீழ்வரும் ஆளுநரின் அதிகாரங்களை அதிகரித்து, இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதன் செல்தகவு சம்பந்தமான கேள்விகளையும் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். இச்சட்ட ஏற்பாடு 2001 ஜூலை வரை நீடித்தது. இதன்பின்னர் அவசரகாலநிலை காலாவதியாகியது. ஆயினும், மதியுரைக் குழுவுக்கோ, முகாமைத்துவ சபைக்கோ நியமனங்கள் செய்யப்படவேயில்லை.





# இடைக்கால நிர்வாகத்தினுள் மனித உரிமைகள் பேணப்படுதல் வேண்டும்

*கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளருமான ரொஹான் எதிரிசிங்கவுடன் சில நிமிடங்கள்.....*

**இடைக்கால நிர்வாகம் குறித்த சிந்தனை மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளது. இடைக்கால நிர்வாகமென்றால் என்ன?**

பல்வேறு காரணங்களின் நிமித்தம் முன்பிருந்த அரசியலமைப்புச் சட்டகத்தின் அல்லது ஆலோசனையின் பேரில் புதிய ஆட்சிமுறைமையைத் தாபிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கக்கூடும். இடைக்கால நிர்வாகமொன்றுக்கான சிந்தனை எழுவதற்கு இது ஒரு காரணமாக அமையலாம். இறுதித்தீர்வொன்றை எட்டும்வரையில் ஏதாவது ஆட்சிமுறைமையொன்று இருத்தல் வேண்டும். விசேஷமாக வடக்கு, கிழக்கைப் பற்றிச் சிந்திக்கும்போது சமாதானச் செயல்முறை முன்னேறிச் செல்கையில் அதனுள் தோன்றும் பல்வேறு கருத்துக்கள், ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறையமைப்பொன்று அவசியமாகும். மறுபுறத்தில் நிதிகள் பயன்பாடு, சட்டத்தையும் ஒருங்கையும் பேணுதல், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் போன்ற

விடயங்களைச் செயற்படுத்துவதற்கு இப்பிரதேசங்களில் விதிமுறையான முறைமையொன்று இல்லையெனில், சமாதான நிகழ்ச்சித்திட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கு அது குந்தகமாக அமையலாம். இதனால் இடைக்கால நிர்வாகம் பற்றிய சிந்தனைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டது. ஆயினும், அது ஏதாவதொரு காலப்பகுதிக்குரியதாக இருத்தல் வேண்டும். இறுதித்தீர்வினுள் இருக்கவேண்டிய எதிர்பார்ப்புகள் இதனுள் அடங்கவேண்டுமென்ற அவசியம் இல்லை.

**இடைக்கால நிர்வாகத்துக்கும், இறுதித்தீர்வுக்குமிடையில் தொடர்பு இருத்தல் வேண்டும். இறுதித்தீர்வின் அடிப்படை அம்சங்கள் குறித்து உடன்பாடு இல்லாத நிலையில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது எவ்வாறு?**

பலா் இடைக்கால நிர்வாகத்தின் முக்கியத்துவத்தைச் சரியானவாறு விளங்கிக்கொள்ளவில்லை. இடைக்கால நிாவாகத்தின் மூலம் இறுதி அரசியல் தீர்வை வடிவமைத்துக்கொள்ளலாம். மறுபுறத்தில் இறுதி அரசியல் தீர்வோடு தொடர்புற்ற முக்கிய விடயங்கள் இங்கும் தொடர்புற்றதாக இருத்தல் வேண்டும். தென்னாபிரிக்காவின் அரசியல் சாசனத்தை உருவாக்கும்போது இத்தகைய நிலைமைகள் எழுந்தன.

எல்ரீரீஈ அமைப்பு இச்சமாதானச் செயல்முறையின் ஆரம்பத்தில் கூட்டுப்பணிக்குழுக்கள் மூலமாகவும், பின்னா் சிரான் அமைப்பின் மூலமாகவும், தொழிற்பட விருப்பம் தெரிவித்தபோதிலும், பின்னா் இடைக்கால நிர்வாகம் அவசியமென்று தெரிவித்தது. கடந்த பொங்குதமிழ் நிகழ்வின்போது எல்ரீரீஈ ஆதரவாளர்கள் இடைக்கால நிர்வாக முறைமையொன்று தமக்கு அவசியமென்றும், அதைச் சர்வதேச சமூகமும் அங்கீகரிக்க வேண்டுமென்றும் தெரிவித்தனா்.

**இவர்கள் தனிராஜ்ஜியம் ஒன்றுக்கான வாதங்களையும், அங்கீகாரத்தையும் தேடுகின்றனரா?**

நிலைமைகள் அபிவிருத்தி கண்டுள்ள விதம் உண்மையில் முக்கியமானதாகும். பேச்சுவார்த்தைகளின் ஆரம்பநிலையில் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசிய இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் இடைக்கால நிர்வாகம் குறித்த உடன்பாடொன்றுக்கு வந்திருக்கலாம். ஆயினும், அரசியலமைப்பு சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டன. அத்தகைய ஓா் அமைப்பை எவ்வாற ஏற்படுத்துவது என்ற கேள்வி எழுந்தது. எப்படியாயினும், இரு தரப்பினரும் தமது சொந்தத் தேவைகளின் நிமித்தம் இடைக்கால நிர்வாக யோசனையை ஒத்திவைத்தனா். அதன் பின்னரே கூட்டுப் பணிக்குழுக்கள் மற்றும் சிரான் அமைப்புக் குறித்த யோசனைகள் முன்னணிக்கு வந்தன. உண்மையில் சிரான் குறித்த பிரேரணையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றிருக்கலாம். அது கூட்டு நடவடிக்கையின் தன்மையைக் கொண்டிருந்தபோதிலும், அதில் சமஷ்டி எண்ணக்கருவின் அடிப்படை அம்சங்கள் அடங்கியிருந்தன. அதன் தோல்வியிலிருந்து அரசாங்கம் பாரிய வகைப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதோடு எல்ரீரீஈ அமைப்பும் இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். எல்ரீரீஈ அமைப்புக்கு வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்திலும் கட்டுப்பாடு அவசியப்பட்டது. அவசரத்தேவைகளை அரசாங்கம் புரிந்துகொள்ளாமையும், செயற்படுத்துவதற்கு இயலாமற்போனமையும், சகல நடவடிக்கைகளையும் தமது கைகளில் எடுத்துக்கொள்ளவேண்டிய எல்ரீரீஈ அமைப்பின் தேவையும் இவையனைத்தையும் தோல்வியில் முடிவுறச் செய்தன. ஒரு வழியில் பார்த்தால் நாம் மீண்டும் பழைய நிலைக்கே வந்துள்ளோம். உண்மையில் சமீபத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வின்போது தமிழ் மக்களின் தீவிர நிலைப்பாடு மீண்டும் தோன்றியுள்ளமை குறித்துச் சிந்திக்க வேண்டும். ‘இடைக்கால அரசு’, ‘சா்வதேச அங்கீகாரம்’, திம்புக்கோட்பாடு ‘ஒஸ்லோ உடன்பாடு’, என்பவை உள்ளக சுய-நிர்ணயம், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறைமை போன்ற சொற்களை இப்பொழுது கீழுக்குத் தள்ளியுள்ளன. இந்த நிலைமை பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் கஷ்டநிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. சகல மக்கட்பிரிவினருக்கும் நீதிகிட்டக்கூடிய முறையிலேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுதல் வேண்டும்.

**சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கும், ஜனநாயகத்துக்கும் மதிப்பு போன்ற கருத்துக்கள் டோக்கியொ பிரகடனத்தில் இடம்பெற்றன. ஆயினும், இந்த மூன்று விடயங்களையும் தற்போது எல்ரீரீஈ அமைப்பு கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. ஜனநாயகமற்ற இடைக்கால நிர்வாகத்தின்மூலம் தமிழ் மக்களுக்கு முன்னரைவிட அதிகரித்ததொல்லைகளும், ஏனைய மக்களுக்குப் பிரச்சினைகளும் ஏற்படக்கூடுமென்று எண்ணுகின்றீர்களா?**

இது முக்கியமான, ஆயினும் பதிலளிக்கக்கஷ்டமான ஒரு கேள்வியாகும். இறுதி அரசியல் தீர்வில் சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் இடம்பெறுதல் வேண்டும். ஆயினும், எல்ரீரீஈ அமைப்பு இராணுவக் குணாம்சத்திலிருந்த, அரசியல் தன்மைகொண்ட அமைப்பாக மாற்றமடையும்போது இந்த எண்ணக்கருக்கள் அப்படியே பின்பற்றப்படாது விடப்படவும் கூடும். ஆயினும் எல்ரீரீஈ அமைப்புக்கெதிராக எழும் இக்குற்றச்சாட்டுக்களில் உண்மைநிலையும் உள்ளது. ஆனால் அரசாங்கமும் இந்த முக்கியமாக மூன்று எண்ணக்கருக்களையும்

சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதில்லை. ஆயினும் முரண்பாட்டுத் தீர்வுச் சட்டகத்தினுள் இக்கருத்துகளை உள்ளடக்குவதற்கு இன்னமும் இடமுள்ளது. இதில் சிவில் சமூக அமைப்புகளுக்கு முக்கிய பொறுப்புகள் உள்ளன. சட்டத்தின் ஆட்சிமூலம் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கு முன்னுரிமையளித்துச் செயற்படுவது சமாதானச் செயல்முறை முன்செல்லும்போதும், இறுதித்தீர்வுக்குப் பின்னரும் தொடர்ச்சியாக இடம்பெறவேண்டியதாகும். இராணுவக் குணாம்சங்களைக் கொண்ட அமைப்பொன்று இடைக்கால நிர்வாகத்தில் பிரவேசிப்பதென்றால், அதன் மூலம் அரசியல் மற்றும் அரச நிர்வாகத்துக்குச் செல்வதாயின் அவர்கள் அடிப்படை எண்ணக்கருக்களை சட்டத்தின் ஆட்சி, மனித உரிமையை மற்றும் ஜனநாயகம் என்பவற்றை அங்கீகரிக்க வேண்டும்.


**அரசு முன்வைக்கும் இடைக்கால நிர்வாகத்தை எல்ரீரீஈ அமைப்பு ஏற்றுக்கொண்டால், அதை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு? முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களின் நிலை என்னவாகும்?**

இடைக்கால நிர்வாகம் அரசியலமைப்பு சாசனத்துக்கு முரணாகச் செல்லவேண்டிய அவசியமில்லையென்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இந்த அரசியலமைப்பில் பல குறைபாடுகள் உள்ளன. இந்த அரசியலமைப்பை மாற்றி,புதிய அரசியலமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம். ஆயினும் இந்தச் செயல்முறையில், இச்சந்தர்ப்பத்தில் அரசியலமைப்புக்கு மாறாகச் செயற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். விசேஷமாக எண்ணக்கருக்கள் குறித்து உடன்பாடு இல்லையென்பதை நாம் அறிவோம். எல்ரீரீஈ அமைப்பு முன்வைக்கும் நிர்வாகம் தொடர்பிலான கோரிக்கைகளை ஒரு அரசியலமைப்பிலேயே உள்ளடக்கமுடியும். அதற்கான அரசாங்கத்தினதும், எல்ரீரீஈ அமைப்பினதும் பூரண ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். ஆயினும் இடைக்கால நிர்வாகத்தில் இறுதி நிர்வாகம் குறித்த விடயங்கள் அடங்கியிருக்கவேண்டிய அவசியமில்லை. இறுதி நிர்வாகம் சம்பந்தமான முயற்சிகள் அவ்வாறே தொடர்ந்து இடம்பெறுதல் வேண்டும். இறுதி நிர்வாகம் சம்பந்தமாக ஆழமாக கலந்துரையாடல்கள் இடம்பெறுதல் வேண்டும். இடைக்கால நிர்வாகத்தில் அன்றாட நடவடிக்கைகளை முன்கொண்டுசெல்லுதல், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் போன்ற விடயங்களே கூடுதலாக இடம்பெறுதல் வேண்டும்.

தற்போதுள்ள 13வது அரசியலமைப்புக்கான திருத்தத்தின் கீழும் இடைக்கால நிர்வாகத்துக்கான பின்புலமொன்றை அமைத்துக்கொள்ளாமல் பாரளுமன்றச் சட்டங்களினூடாகவும் வடக்கு, கிழக்குச் சுதந்திரமான நிதிநிர்வாகத்தை வழங்க முடியுமா என்பதையும் ஆராயவேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் முஸ்லீம் மக்களின் பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும். இடைக்கால நிர்வாகத்தினுள் கிழக்கு முஸ்லீம்மக்களின் மனித உரிமைகள், கெளரவம், மற்றும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு என்பவை அவசியமாகும். சமீபத்திய எல்ரீரீஈ அமைப்பின் மூலம் இடம்பெற்ற கொலைகள் இடைக்கால நிர்வாக எண்ணக்கருக்களுக்கு எந்தவகையிலும் உதவமாட்டா.

நேர்காணல் : கமல் நிஸ்ஸங்க
நன்றி : சாம விமர்சி



# எல்ரீரீஈ அமைப்பு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவது நிச்சயம்



எல்ரீரீஈ அமைப்பு டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்தபோதிலும் எமக்கு எதிர்பார்திராத முறையில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆயினும் எமக்குக் கிடைத்த இந்த உதவியை எல்ரீரீஈ அமைப்புக்குக் கிடைத்த தோல்வியென்று விளக்கமளிப்பது நல்லதல்ல. டோக்கியோ உதவி மாநாட்டில் கிடைத்த நிதி ஒதுக்கீடு எவருக்கும் வெற்றியோ தோல்வியோ அல்ல. என்னைப் பொறுத்தவரையில் இத்தகைய உதவியை நாம் பெற்றுக்கொள்வதற்குக் காரணமாயமைந்தவை மூன்று விடயங்களாகும். கடந்தகாலம் முழுவதும் சமாதானத்தை நாம் பேணுவதற்கு இயலுமை கொண்டிருந்தது. முதலாவது, சக்திமிக்க காரணமாகும். இரண்டாவது காரணம் பொருளாதார மறுசீரமைப்பை முன்னேற்றியதாகும். மூன்றாவது காரணமாக அமைவது, சரியான இலட்சிய தரிசனம் மற்றும் நிகழ்ச்சிநிரல்களோடு எமக்கு அரசாங்கம் உதவி நிதியைப் பயன்படுத்துமென்று சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையாகும்.

கடந்த ஒன்றரை வருடகாலமாக நாம் மிகவும் அர்ப்பணிப்புணர்வுடன் சமாதானச் செயல்முறையில் ஈடுபட்டு வருகின்றோம். எமது சமாதானப் பயணம் முன்னோக்கிச் செல்லுகின்றது. எல்ரீரீஈ அமைப்பும் அவ்வாறே எம்முடன் சமாதான முயற்சிகளில்

-மிலிந்த மொரகொட-

ஒன்றிணைந்திருந்தது. ஆயினும் எல்ரீரீஈ அமைப்பு ஒரு கட்டத்தில் சமாதானச் செயல்முறையிலிருந்து விலகிக்கொண்டது. அவர்கள் அது சம்பந்தமான காரணங்களையும், விளக்கங்களையும் முன்வைத்தனர். ஆயினும், எல்ரீரீஈ அமைப்பு தற்காலிகமாக சமாதானச் செயல்முறையிலிருந்து விலகியமை காரணமாக எமக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென்று சர்வதேச சமூகம் எண்ணியது. அவர்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பொறுத்தே எமக்கு இவ்வளவு தொகையிலான உதவிகள் கிடைத்தன. உண்மையில் இது விசுவாசத்தை வலுப்படுத்துவது தவிர, வெற்றிதோல்வியென்ற வகையில் பிளவுகளை வலுப்படுத்தும் விடயமல்ல.

எல்ரீரீஈ அமைப்பு டோக்கியோ மாநாட்டுக்கு வரவில்லையென்ற காரணத்துக்காக அவர்களை ஒதுக்கவேண்டிய அவசியமில்லை. அரசாங்கத்திடம் எல்ரீரீஈ அமைப்பை ஒதுக்கும் எண்ணமோ முயற்சியோ கிடையாது. அது மிகவும் தெளிவான ஒரு விடயமாகும். ஜப்பானில் கிடைத்த உதவிகளை நாம் வடக்கு, கிழக்கில் பயன்படுத்தும்போது எல்ரீரீஈ அமைப்பின் உதவியைப் பெற்றுக்கொள்வோம். இந்த நிகழ்ச்சித்திட்டம் குறித்த விபரங்களை நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமரும் விளக்கியருந்தார். இந்த உதவிகளைப் பயன்படுத்தும்வேளையில் அதற்காகப் புதிய முறையியல்களையும், வழிமுறையமைப்புகளையும் உருவாக்கி, அறிமுகம் செய்யவுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெளிவுபடுத்தினார். இதன் பிரகாரம் இந்த வெளிநாட்டுதவியைப் பயன்படுத்துவது உள்ளிட்ட பூரண நிகழ்ச்சித்திட்டத்தை அரசியல் தலைவர்களோடு கலந்துரையாடவும் பிரதமர் எண்ணியுள்ளார். ஆகவே எவரையும் ஒதுக்கிவைக்கும் எண்ணம் எமக்கில்லை.

ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டைத் தொடர்ந்து நாட்டினுள் ஒரு தனிநபர் இருக்க வேண்டிய கடன் சம்பந்தமான பேச்சுகள் எழுந்துள்ளன. 2000ஆம் ஆண்டில் எமது அரசாங்கம் நாட்டைப் பொறுப்பேற்றுக்கொண்ட வேளையில் இருந்த தனிநபருக்கு இருக்கவேண்டிய கடனின் அளவு இந்த உதவி மாநாட்டின் பின்னர் பாரிய அளவில் அதகிரித்துள்ளதாகச் சிலர் குறைகூறுகின்றனர். கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த சிலர் இக்கருத்தைப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக முன்வைத்தனர். ஆயினும் அது அரசியல் தர்க்கமாகும். இன்று அரசாங்கத்தின் வருமானத்தைவிட கடனின் அளவு அதிகமாகும். நாம் ஏற்கெனவே இலகு கடன் முறைமை அடிப்படையில் 47,000 கோடி ரூபா வெளிநாட்டுதவியைப் பெற்றுள்ளோம். இந்த நீண்டகாலகடன் 10 வருடத்துக்கும் 30 வருடத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் செலுத்தி முடிக்கப்படவேண்டியதாகும். அதற்கான வட்டிவிகிதம் 0.75வீதம் முதல் 2.2வீதம் வரையானதாகும். இது, 570 கோடி ரூபாவாகும். இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு வர்த்தகக் கடனாக 26.400 கோடி ரூபாவைப் பெற்றுள்ளோம். இதற்குச் செலுத்தும் வட்டி 2வீதம் முதல் 3.5வீதம் வரையிலாகும். இது 780 கோடி ரூபா வரையிலாகும். இந்த வெளிநாட்டுக் கடன்களைவிட, எமக்குப் பெரும்பிரச்சினையாகவுள்ளது. உள்நாட்டில் பெற்றுள்ள வர்த்தகக் கனடாகும். தேசிய வர்த்தககடனை 11வீதம் முதல் 13.5வீதம் வரை மிகவும் உயர்வான வட்டிவீதத்தில் பெற்றுள்ளோம். இதுவரை 88,400 கோடி ரூபா தேசிய வர்த்தகக் கடனாகப் பெற்றுள்ளதோடு, அதற்காகச் செலுத்தப்படவேண்டிய வட்டியின் அளவு 116,000 கோடியை விட அதிகமான தொகையாகும். இந்த வட்டியை ஆண்டுதோறும் நாம் செலுத்திவருகின்றோம். இதன் பிரகாரம் நாம் செலுத்தும் வட்டியீல் 95வீதம் வரையில் செலவாகுவது தேசிய வர்த்தகக் கடனுக்காகவாகும். தேசியக் கடனைப்பெற்றுக் கொள்வது ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம், சேமிப்பு வங்கிபோன்ற நிறுவனங்களிலிருந்தேயாகும். இத்தேசிய வர்த்தகக் கடன்காரணமாக இந்த நாட்டு மக்கள் மீது பாரிய பொருளாதாரச் சுமை ஏற்பட்டுவருகின்றது. நாம் எதிர்பார்ப்பது தேசிய வர்த்தகக் கடன் தொகையை விரைவில் மிகவும் குறைத்து மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதாரச் சுமையை அகற்றுவதாகும். தேசிய வர்த்தகக்கடனுக்குப் பதிலாக, குறைந்த வட்டிசெலுத்தும் வெளிநாட்டுக் கடனைக் கூடுதலாகப் பெற்றுக்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும். உதாணரமாக ஜப்பானிடமிருந்து கிடத்த 1.5 பில்லியன் ரூபா கடனுக்கு 10 வருடங்களுக்கு வட்டிஎதுவும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இது நாற்பது வருடகாலத்தில் திருப்பிக்கொடுக்கவேண்டிய கடனாகும்.

இந்தக்கடனுக்கான வட்டிவிகிதாசாரம் 0.75வீதம் ஆகும். இத்தகைய கடனைப் பெறும்போது கருத்திட்டங்களில் அதை முதலீடு செய்து கிடைக்கும் நீண்டகால அனுகூலங்களிலிருந்து வட்டியைச் செலுத்தலாம். அதனால்தான் நாம் இத்தகைய வெளிநாட்டு உதவிகளில் அதிக ஈடுபாடு காட்டுகின்றோம். தனிநபர் ஒருவருக்கு இருக்கவேண்டிய கடன் என்பது ஓர் அரசியல் தர்க்கம் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

இம்முறை டோக்கியோ உதவிமாநாட்டில் எமக்குக் கிடைத்த உதவியின் அளவு எமது அரசியல் பயணத்துக்கு உதவுவதற்கு உலக வல்லரசுகள் தயாராகவிருப்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இச்செய்தி டோக்கியோ மாநாட்டில் மிகவும் தெளிவாக விடுக்கப்பட்டுள்ளது. எமது நாட்டுக்கு உதவி வழங்குவதற்கு இடம்பெற்ற உதவிமாநாடுதான் வரலாற்றிலேயே முதல் தடவையாக உலகவங்கி

மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையில் இடம்பெற்ற முதல் உதவிமாநாடாகும். பிரதமர் தெரிவித்தவாறு, கடந்த 10 வருடகாலத்தில் எமக்குக்கிட்டிய வெளிநாட்டு உதவிகளில் பயனுள்ள முறையிலோ அல்லது விரயமாக்கும் முறையிலோ நாம் செலவிட்டது 21.2வீதம் மாத்திரமேயாகும். இந்தப்போக்கை மாற்றியமைக்கவேண்டுமென்று டோக்கியொ மாநாட்டில் உதவிவழங்கும் நாடுகள் வலியுறுத்திக்கூறின. நாம் உதவிகளைப் பயன்படுத்தும் முறையில் பாரிய மாற்றங்களைச் செய்வதற்காக புதிய ஒழுங்கமைப்ப வியூகமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்று பிரதமர் எதிர்பார்க்கின்றார். வரலாற்றில் நிகழ்ந்த தவறுகளைத்திருத்திக்கொண்டு வெளிநாட்டு உதவியின் பூரண பயன்களையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும்.

டோக்கியோ மாநாட்டில் வழங்கப்பட்ட உதவி சமாதானத்துடன் நேரடியாக இணைந்த ஒன்றாகவுள்ளது. மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட டோக்கியோ அறிக்கையில் அரசாங்கத்தின் மீதும், எல்ரீரீஈ அமைப்பின் மீதும் இது குறித்த தெளிவான பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் யுத்தம்செய்வதற்கு உதவி வழங்குவதில்லை. கடனுக்குப் பணம்பெற்று யுத்தம் நடத்தும் போக்கு இன்று இல்லை. ஆகையால் சமாதானத்துக்கென பயணத்தை நாம் மேலும் முன்கொண்டு செல்லவேண்டியிருக்கும். ஆகவே, எனது சொந்த மதிப்பீட்டின் பிரகாரம், டோக்கியோ மாநாட்டில் கிட்டிய உதவித்தொகையைவிட, டோக்கியோ அறிக்கை மூலம் சர்வதேச சமூகம் வலியுறுத்தியுள்ள விடயம் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

டோக்கியோ மாநாட்டில் கிட்டிய உதவிகளை வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதோடு, இச்செயற்பாட்டில் எல்ரீரீஈ அமைப்பையும் நேரடியாக ஈடுபடுத்துவது எமது நோக்கமாகும். ஜப்பான் உதவி மாநாட்டுக்கு முன்னராக உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும், வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பூரணமான மதிப்பீட்டாய்வுகளை நடத்தியது. இதன் பிரகாரம் இப்பிரதேசங்களின் தேவைகளை இனங்கண்டுள்ளது. இத்தேவைகளுக்காக வருடமொன்றுக்கு 2500 கோடி ரூபா என்றவகையில் செலவிடுவதற்கான ஒதுக்கீடு டோக்கியொ உதவியில் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னரான காலம் முழுவதும் நீடித்த இனப்பிரச்சினைக்கு பதினெட்டுமாதத்தில் தீர்வுகாணமுடியாது. இதுவரை இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் புதிய உத்வேகம் இப்பொழுது அவசியப்படுகின்றது. எல்ரீரீஈ தத்துவாசிரியர் அன்டன் பாலசிங்கமும் இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார். எல்ரீரீஈ அமைப்புடன் இதுவரை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் நாம் பெருமளவுக்கு அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே பேசியுள்ளோம். இப்பொழுது நாம் பேச்சுவார்த்தையை உரிய இலக்கைநோக்கி நடத்துதல் வேண்டும். இதற்காக நாம் தெளிவான ஒரு வழிமுறைத்திட்டத்தை(Road Map) அமைத்துக்கொள்ளவேண்டும். அதன் இறுதி இலக்கு ஓர் இடைக்கால நிர்வாக சபையாக இருக்கலாம். அப்படியானால் சமாதானப்பேச்சுவார்த்தை இடைக்கால நிர்வாகசபையை நோக்கிச் செல்லும் இலக்கைக் கொண்டதாக அமையவேண்டும்.

இருபது வருடகாலமாக சிவில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்ரீரீஈ போன்ற ஓர் அமைப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்வது இலகுவான காரியமல்ல. நாம் எல்ரீரீஈ குறித்த விளக்கத்துடன் இந்தக்கொடுக்கல் வாங்கலுக்குச் செல்லவேண்டும். அத்தகைய விளக்கமொன்று ஏற்படும்போது எல்ரீரீஈ அமைப்பு தான் விரும்பிய விதத்திலும் செயற்படமுடியாது. நாம் எமது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான கவனத்தைச் சிறிதும் குறைக்கவில்லை. பாதுகாப்பென்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். அரசாங்கத்தின் இராணுவத்தை மறுசீரமைப்பதற்கு நாம் இந்தியாவிடமும், அமெரிக்காவிடமும் ஆலோசனை பெற்றுள்ளோம். புதிதாக ஆயுதங்களை விலைக்கு வாங்குவது சம்பந்தமாக அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. இதன்பிரகாரம் எதிர்காலத்தில் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படும். சர்வதேசிய அளவில்போன்று, தேசிய ரீதியிலும் எமக்கு சிறந்த பாதுகாப்பு ஏற்பாடு உண்டென்பதை நாம் எல்ரீரீஈ அமைப்புக்குக் காண்பிக்க வேண்டும்.

எல்ரீரீஈ அமைப்பு தற்காலிகமாக சமாதானச்செயல்முறையிலிருந்து விலகிக்கொண்ட பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பகுப்பாராய்வு செய்தால் இருதரப்பினரும் போர்நிறுத்தத்தைக் குழப்புவதற்கு விருப்பமின்றியிருப்பது விசேட அம்சமாகும். இருதரப்பினரும் மீண்டும் யுத்தத்துக்குச் செல்லவிரும்பவில்லை. ஆயினும் சிறு சம்பவம் ஒன்று பாரிய விளைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆயினும் அது குறித்து ஒரு காலப்பகுதியை நிச்சயமாகக்கூற முடியாது. எல்ரீரீஈ அமைப்புக்கு நிரந்தரமான, குறித்துரைத்த கால அட்டவணை கிடையாது - அது அத்தகைய கெரில்லாப்போராட்ட இயக்கங்களுக்குப் பொதுவான பண்பாகும்.

நேர்காணல் : தனஞ்சய ஒபேசேகர
நன்றி : சாம விமர்சி

# இலங்கையில் சமாதான இலாபங்கள் : முரண்பாட்டுத் தீர்வுக் குதிரைக்கு முன்னால் அபிவிருத்தி வண்டியைப் பூட்டும் முயற்சி?

(மேற்படி தலைப்பிலான தனஞ்சஜயன் ஸ்ரீஸ்கந்தராஜாவின் ஆய்வுக்கட்டுரையிலிருந்து "சமாதானமும், புனர்நிர்மாணமும்" என்ற உபதலைப்பிலான பகுதியே இங்கே தரப்படுகிறது....)




-தனஞ்ஜயன் ஸ்ரீஸ்கந்தராஜா-

போர்நிறுத்த உடன்படிக்கை மூலம், பிரதானமாக வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் சீராக்குவது சம்பந்தமான சில முன்னேற்றங்கள் காணப்பட்டபோதிலும், திட்டவட்டமான அரசியல்ரீதியான முன்னேற்றங்கள் எதுவுமே இடம்பெறவில்லை. நியதிகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாயின் தாம் தனிநாட்டுக்கோரிக்கையை வற்புறுத்தப் போவதில்லையென்று எல்ரீரீஈ அமைப்பு தெரிவித்தது. எதிர்காலத்தில் ஏதாவது ஒரு வகையிலான சமஷ்டிக்கட்டமைப்பு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்றும் இருதரப்பினரும் உடன்பாடு கண்டதாகவும் தோன்றுகிறது. ஆயினும் இவை திட்டவட்டமான நடவடிக்கைகள் அல்லவென்பதோடு, இது குறித்த பிரகடனம் மிகவும் காலம் பிந்தியே வெளியாகியது. அதாவது முக்கியமான அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள் முதலிலேயே கலந்துரையாடப்பட்டு அவற்றின்மேல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவிட்ட நிலையிலேயே இது இடம்பெற்றது.

புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் நேரடி அனுகூலங்களுக்கு மேலதிகமாக மேலும் இரு சாதனரீதியான அனுகூலங்களும் உள்ளன : பேச்சுவார்த்தை மேசையில் பொருளாதார விடயங்களின் ஒத்துழைப்பு நம்பிக்கையைக் கட்டியெழுப்புமென்றும், தனது பங்குக்கு அது அரசியல் தீர்வொன்றுக்கு வழிவகுக்குமென்றும் நம்பிக்கை நிலவியது. அத்தோடு மக்கள் மட்டத்தில் நாட்டின் வடக்கு, கிழக்கிலும் ஏனைய பகுதியிலும் அதிகரித்த பொருளாதார சுபீட்சமும், ஸ்திரநிலையும் சமாதானச் செயல்முறைக்கு பொதுமக்களின் அதிகரித்த ஆதரவுக்கு வழிசமைக்குமென்ற நம்பிக்கை நிலவியது. இவ்விரண்டு விடயங்களும் பரஸ்பரம் ஒன்றையொன்று வலுவூட்டுபவை என்று எண்ணப்பட்டதோடு, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோர் இது குறித்து வெளிப்படையாகத் தெரிவித்துமுள்ளனர் :

"நாம் எதிர்காலத்தில் வெகு தொலைவிலுள்ள பிரச்சினைகளை விவாதித்துக்காலத்தை விரயம் செய்யாமல், தற்போது

இருதரப்பினரும் உடன்படும் விடயங்களில் பணியை ஆரம்பித்தல் வேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து அரசாங்கம் மேலும் சாதகமான ஒரு சூழலில் இருக்கும்போது நாம் சரியான நேரத்தில் அவற்றைக் கையாள முடியும்" (அரசாங்கத்தின் பிரதான பேச்சாளர். மேற்கோள் டெயிலி மிரர் 2002.)

தற்போதைய அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகத் தென்படுதல் வேண்டுமென்றும் இதில் அரசியல் தீர்வுபோன்று பொருளாதார மீட்சியும் முக்கியமானதென்றும் எண்ணுகின்றது :

"எல்ரீரீஈ அமைப்புடனான எமது ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகளில் எமது சமுதாயத்துக்கு நிவாரணமும், வழமை நிலையும் கிட்டக்கூடிய வகையில் மக்களின் உடனடி நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயலுகின்றோம். அரசியல் பேச்சுவாத்தைகளுக்கான உத்வேகத்தைப் பேணுவதாயின், பாதிப்புற்ற பிரதேசங்களின் பொருளாதாரப் புனரமைப்பும், அபிவிருத்தியும் தீர்மானகரமான காரணிகள் ஆகும். அபிவிருத்தி ஒரு பாதிப்புற்ற, பிளவுண்ட சமூகத்தில் குணமாக்கல் செயல்முறையில் ஒரு பகுதியாகும். மக்களின் அவசரமான, அன்றாடப் பிரச்சினைகள் இயன்றளவு விரைவாகத் தீர்க்கப்படுதல் வேண்டும். வளர்ச்சியின் உத்வேகம் மீண்டும் நிலைநாட்டப்படுதல் வேண்டும்." (பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2002)

சமாதானத்துக்காக பொதுமக்களின் ஆதரவை அதிகரிக்கவேண்டியது சமாதானச் செயல்முறைக்கு மாத்திரமல்லாது, தற்போதைய அரசாங்கத்தின் இருப்புக்கும் முக்கியமானதாகும். இதற்கான காரணம் கொழும்பில் மிகவும் நெருக்குதல் நிறைந்த அரசியல் சகவாழ்வு(குறிப்பு 1 ஐப் பார்க்கவும்) பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கலாம், அல்லது இன்னமும் எந்த நிமிடமும் கலைக்கப்படலாம் என்பதையே காட்டுகின்றது.

தனது பங்குக்கு எல்ரீரீஈ அமைப்பும் முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னராக வடக்குக் கிழக்கின் புனர்நிர்மாண யோசனையை மிகவும் ஆர்வத்தோடு பற்றியுள்ளது. இந்த அமைப்பு தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களில் தன்னை ஒரு நிகழ்நிலை அரசாங்கமாக நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. அதுதான் அபிவிருத்தியில் ஈடுபாடுகொண்டுள்ளதாக மற்றவர்களுக்குத் தோற்றமளிக்க விரும்புகின்றது. ஒஸ்லோவில் எல்ரீரீஈ தலைமைப்பேச்சாளர் கொடைதருநர்களுக்கு வேண்டுகோள்விடுத்தபோது சமாதானம் கட்டியெழுப்பப்படவேண்டிய பொருள்முதல் அடிப்படையை வலியுறுத்தினார் :

"தற்போதைய சமாதானத்தைப் பலப்படுத்தி, இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வொன்றைக்காணும் நோக்கில் ஒரு தெளிவான தொலைநோக்குடனும், உத்தியுடனும் பேச்சுவார்த்தைச் செயல்முறை முன்செல்கையில் யுத்தத்தினால் பாதிப்புற்ற சிவிலியன் சனத்தொகையினிடையே, தமது அவசரமான வாழ்வுத்தேவைகள் தாமதமின்றிக் கவனிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுமென்றும் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் வளர்ந்துவருகின்றன. தாமதமின்றி, திட்டவட்டமான பண மற்றும் பொருள் உதவிகள் வருவதில் சமாதானப் பங்கிலாபம் அவர்களுக்குக் கிட்டாவிடில், துன்பப்படும் வெகுஜனங்களுக்கு சமாதானம் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவை அர்த்தமில்லாமல் போய்விடும்" (பாலசிங்கம் 2002)

இருதரப்பினரும் பகிர்ந்துகொள்ளும் இந்த வழிதுணை நிகழ்ச்சிநிரலை நோக்கும்போது அபிவிருத்திப் பிரச்சினை குறித்து அவர்கள் துடிப்பாகவும், ஆக்கபூர்வமாகவும் செயற்படுவது ஒன்றும் ஆச்சரியமில்லை. உதாரணமாக, பேச்சுவார்த்தைகளில் மிகவும் முக்கியமான ஆரம்பகாலச் சாதனை வடக்கு, கிழக்கில் புனர்நிர்மாணம் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான அமைப்பாகக் கூட்டுப்பணிக்குழு (JTF) அறிவிக்கப்பட்டதாகும். இந்த முன்முயற்சி வெகுவிரைவிலேயே கைவிடப்பட்டாலும், இந்த அமைப்பின் இறைமை குறித்த கரிசனைகள் காரணமாக, இருதரப்பினரும் விரைந்து உப-குழுக்கள் முறைமையைத் தாபித்தனர். இதுவரையில் உபகுழுக்களுள் சிரான் அமைப்பே அதிக செயற்பாடுள்ளதாக விளங்குவதோடு, அதன் உத்வேகம் அதிகரித்துவருகின்றது. கணிசமான பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏற்பட்டுள்ளது போலத்தோன்றும் உலகவங்கி சிரான் நிதியங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படும் ஏற்பாடு இருதரப்பினரும் இப்பிரச்சினையில் அர்ப்பணிப்புணர்வுடனும், ஆக்கபூர்வமாகவும் பணியாற்றுவதைக் காட்டுவதாயுள்ளது.

சிரான் அமைப்பின் பரிணமிக்கும் நடுநாயகத்தன்மை மற்றும் விரிவடையும் கருமங்கள் அரசாங்கத்தினாலும், எல்ரீரீஈ அமைப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நீண்டகாலக் காலச்சட்டகத்தையும் வெளிக்காட்டுவதாகவுள்ளது. பரந்த அடிப்படையில் உணரச்செய்யப்படுகையில், உப-குழுவின் பிரகடனப்படுத்தப்பட்ட நோக்கங்கள்(உள்நாட்டில் இடம்பெயர்ந்ததோர் மீள் குடியமர உதவுவது, சிறுவர்கள் மற்றும் பெண்களின் தேவைகளை நிறைவேற்றுவது, மற்றும் கௌரவமான ஜீவனோபாயத்துக்கு வழிசெய்தல்) சிரான் செயலகம் வடக்கு, கிழக்கின் ஒரு நிகழ்வை அபிவிருத்தி அதிகாரசபையாகச் செயற்பட வழிவகுக்கின்றன.

(முரண்பாட்டு ஆய்வுகளுக்கான மூலாதார நிறுவனம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2003).

2003 ஜனவரியில் NERF நிதியில் ஒதுக்கப்பட்ட பணத்தை உபயோகிப்பதற்கு பிரேரணைகளை நாடி, மதிப்பீடு செய்ய ஆரம்பித்தபோது, பரிணமித்த முன்னுரிமை பௌதீக(தெருக்களும், வைத்தியசாலைகளும்) மற்றும் பொருளாதார(நீர்ப்பாசன முறைமைகள், ஐஸ் தயாரிப்புத் தொழிற்சாலை, நெல் களஞ்சியப்படுத்தும் வசதிகள், பால் செயற்முறைப்படுத்தும் பொறிக்கோப்பு) அகநிலையமைவுகளாகும். (தமிழ்நெற் 2003)

அழிவடைந்த அகநிலையமைவுகளைப் புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் "வழமைநிலைக்குத் திரும்புதல்" என்னும் இப்பொதுவான கண்ணோட்டம் (எல்ரீரீஈ அமைப்பு எப்பொழுது வெளியிடும்). யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்கும் தேவைக்கும், (அரசாங்கத்தினால் வெளியிடப்படும்) இலங்கைப் பொருளாதாரத்தின் இழந்துவிட்ட உத்வேகத்தை மீட்டெடுக்கும் தேவைக்குமிடையில் நன்றாகப் பொருந்துவதாகும். புனர்நிர்மாணக் கருப்பொருள் பொதுமக்கள் ஆதரவை வென்றெடுப்பது மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது என்பவற்றுக்கு மேலதிகமாக இதன் வழியாகவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் சமாதானத்துக்கும், புனர்வாழ்வுக்கும் சர்வதேச ஆதரவாகக் கோரியுள்ளனர். மீண்டும் இருதரப்பினரும் (உதவி மூலம்) அபிவிருத்திக்கும், சமாதானத்துக்குமிடையிலான இணைப்பைப் பிரத்தியட்சமாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். :


"சமாதானப் பங்குலாபம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்குச் சர்வதேச ஆதரவு மற்றும் மூலவள உதவி கிட்டாவிடில் சமாதானத்தின் பிரகாரம் மங்கிவிடக்கூடும் மக்களுக்கு வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சி என்பவற்றை மீண்டும் உருவாக்கும்போது அரசியல்வாதிகளும், பேச்சுவார்த்தையாளர்களும் சமாதானத்தை முன்னேற்றவும், நிலைபேறாக்கவும் பணியாற்றுவதற்கு மேலும் தள்ளப்படுவர். அதிலிருந்து நாம் சிக்கலான அரசியலமைப்புப் பிரச்சினைகளை அணுக முடியும்" (விக்கிரமசிங்க 2002)

"தற்போதைய தீர்மானகரமான நிலையில் திட்டவட்டமான சர்வதேச உதவி சமாதானச் செயல்முறைக்கு சர்வதேச அரசியல் ஆதரவை வெளிக்காட்டுவதாக அமையும். தற்போது சமாதானத்துக்கும், இனத்துவ மீளிணக்கத்துக்கும் எதிர்ப்புக்காட்டுவோரை வாயடைக்க வைப்பதற்கு சர்வதேச ஆதரவு மிகவும் வாழ்வாதாரமானதாகும். இத்தகைய ஒரு செயற்பாடு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி ஆக்கபூர்வமான சூழலை ஏற்படுத்தி, நிரந்திர சமாதானத்தைநோக்கி பேச்சுவார்த்தைச் செயல்முறையை முன்னேற்றுவதற்கு உதவும்" (பாலசிங்கம் 2002)

இந்தநோக்கத்துக்காக இருதரப்பினரும் செயற்பட்டுள்ளனர் (உ-ம் : ஒஸ்லோ மாநாட்டுக்கு முன்னராக கூட்டுவேண்டுகோளைத் தயாரிப்பதிலும்(சிரான் 2002)) சர்வதேச ஆதரவை நாடித்தனியாகப் பிரசாரம் செய்வதிலும் அவர்கள் பணியாற்றியுள்ளனர். சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் எண்ணிறந்த இருதரப்பு, மற்றும் பலதரப்பு தூதுக்குழுக்களை வரவேற்று, உபசரித்துள்ளதோடு, தாமும் எண்ணிறைந்த சர்வதேச விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். எல்ரீரீஈ அமைப்பும் தமது கிளிநொச்சி அரசியல். தலைமையகத்தில் பெரும் எண்ணிக்கையிலான சிரேஷ்ட தூதுக்குழுக்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

(ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது)






# அபாயத்தின் மத்தியிலும் அரிசியை தேர்ந்தெடுத்தல்

-சொபியா எலெக்-

## "உரிமைகள், மீள்குடியேற்றம், இடம்பெயர்ந்த பெண்கள்"

### சமாதானமும் மீள் குடியேற்றமும்

எண்ணற்ற இன்னல்களுக்கிடையில், உயிர்த்துடிப்பும், முயற்சியும், மீளெழுந்தன்மையும் வடகிழக்கில் நாம் சந்தித்த பெண்களில் பார்க்கக்கிடைத்த முக்கியமான அம்சமாகும். மிகக்கொடுமையான ஏழ்மை, மனக்காயங்கள், தொடர்ச்சியான நிச்சயமற்றதன்மை என்பவற்றை எதிர்கொண்டும், அவர்கள் அவர்களது குடும்பத்தின் வாழ்க்கைப்போராட்டத்துக்கும், மேன்மைக்குமென பாடுபட்டமை எம்மை வியக்கவைத்தன. அவர்களது கூர்மதியும் கற்பனைத்திறனும் பரவும் பாங்குடையவை. நாம் சமாதானத்தைப் பற்றி கதைப்பதால், அது குழம்பிவிடும் சாத்தியமும், மீளவும் ஒருமுறை சிலபெண்கள் இடம்பெயரவும் நேரும் என்பதாலும் நிலையான சமாதானத்தின் தேவை அதிமுக்கியமானது. இதற்கு அனுசரணை செய்ய, பெருந்தொகையான பெண்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கையின் உள்நாட்டுப்போரின் அடிப்படைப்பிரச்சினை தீர்க்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். அதுவே நிலையான தொடர்ந்து நிலைக்கும் மாற்றத்தைக் கொண்டுவரும் இலங்கையின் சமூக அரசியல் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் நடைபெறுகையில் சமாதான மீள்குடியேற்ற தேவைகளை வலுப்படுத்துவதற்கு இனங்களிற்கு இடையேயான இணக்கப்பாடு சமாந்தரமாக வலியுறுத்தப்படுவதன் மூலமே சாத்தியமாகும்.

### மீள்குடியேற்றம் : நடைமுறைப்பிரச்சினைகள்

நடைமுறையில் எல்லா இடம்பெயர்ந்தவரும் தேவையென உணர்கிற அனைத்தும், பெண்களுக்கு தேவையாக இருக்கின்றது : பாதுகாப்பாக மதிப்புள்ள வகையில் அனுசரணையுடன் மீள்குடியேறுதல், மீளமர்த்துவதில் அல்லது அவர்கள் இருக்கும் இடங்களில் நிரந்தரமாக வாழவழிவகுத்துக்கொள்ளல் - நாம் உரையாடிய பலர் முதன்மையாக முன்னுரிமை கொடுத்த பிரச்சினைகள் நிலக்கண்ணிவெடிகள், வெடிக்காத பொருட்கள் என்பவற்றை அகற்றுதல், அத்தியாவசியமான உட்கட்டுமாணத்தை நிர்மாணித்தல் அதாவது பாடசாலை, மருத்துவமனைகள் மற்றும் அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவிடும் வழிகளில் நம்பிக்கையளித்தல்.

பெண்களுக்கு குறிப்பாக குடும்பத்தலைவியாக பெண்கள் உள்ள குடும்பங்களுக்கு, மீள் குடியேறுகையில் பொருளாதார பௌதீக யதார்த்தம் ஊக்கத்தை கொடுப்பதாக அமைகின்றது. அடர்ந்த பற்றைகளை வெட்டி, வீடுகள் கொட்டில்களை அமைத்து, வயல்களைகளையும் பயிர்களையும் செய்வதில் ஈடுபடவேண்டும். அல்லாவிடில் இவை சாத்தியமற்ற விடயமாகிவிடும்.

தமது உணவு நிவாரணத்தை விற்று அல்லது கடன்பெற்று அவர்களது செலவீனங்களை

எதிர்கொள்வதாகக் கூறுகின்றனர். சொந்தமில்லாத ஆண்களுடன் வேலைசெய்யும் போது அவர்களது உதவியை பெறுவதால் எற்படும் கிசுகிசுக்கள் வதந்திகளைப் பற்றியும் பெண்கள் கூறினார்கள். இதனால் சில பெண்கள் வெளியாட்களின் உதவியை பெறுவதை நிறுத்திவிட்டனர். உத்தியோகபூர்வ உதவிப்பொதி, நிலம் சொத்துக்கான நட்டஈடு, மரணமடைந்த வாழ்க்கை துணைக்கான நட்டஈடு என்பவை தொடர்பாக அரசாங்க நிறுவனங்களுடன் வெற்றிகரமாக தம்மால் பேசி பெற முடியுமா என்பது குறித்து பெருந்தொகையான இடம்பெயர்ந்த பெண்கள் நிச்சயமற்ற தன்மையை உணர்கிறார்கள்.

தற்காலிக வாழ்விடங்களில் இருந்தும், முகாம்களில் இருந்தும் தமது சொந்த காணிகளை பார்வையிடச் செல்லும் ஆண்கள், தமது குடும்பத்தை அங்கு இருத்துவதற்கு முன் அக்காணிகளில் வேலை செய்யத்துவங்குவதை நாம் அவதானித்தோம். குடும்பத் தலைவர்களாக பெண்கள் உள்ள குடும்பங்களுக்கு இவ்வகை தெரிவு இல்லை.

காணிகளற்ற பெண்களும், மீள்குடியேறாமல் இருப்போரில் அடங்குகின்றனர். தமது உரிமைகள் எதிர்கால தெரிவுகள்குறித்து நிச்சயமற்ற தன்மையில் உள்ளனர்.

## அபிவிருத்திக்கு உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையும், பால் கூருணர்வுள்ள கொள்கை திட்டமும்

இவையே எமது களஆய்வும், ஆராய்ச்சியிலும் முன்னின்ற பிரதான விடயங்கள். போர் இடம்பெயர்வு என்பவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, சமகாலத்திலும் எதிர்காலத்திலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொள்கைத்திட்டங்களை உருவாக்குவதன் மூலம், இன்னமும் புரிந்துணர்வுள்ள வழிகளில் உதவ முடியும் என நாம் நம்புகின்றோம். இங்கு குறிப்பிட்ட சில பிரச்சினைகளின் தீர்வுகளை நோக்குகையில், ஆரம்பத்தில் எமது ஆய்வில், அனுசரணைக்கும் அபிவிருத்திக்கும் உதவி செய்யும் உரிமைகளை ஆதாரமாகக் கொண்ட அணுகுமுறை என்பதில் குறித்துரைத்த மாதிரிகளில் ஈடுபாடு காட்டப்பட்டது.


அவசர உதவி, அபிவிருத்தி தொடர்பாக, வினைதிறனுடனும் பொருத்தமான முறையுடனும், அரசும், அரசுசார்பற்ற நிறுவனங்களும் செயலாற்ற அவற்றின் திறமையை வலுப்படுத்த இவ்வணுகுமுறை உருவாக்கப்பட்டது. வாழ்க்கைப் போராட்டத்துக்கும், சுய கௌரவத்துக்குமான பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுடன், வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டன. மறுபுறத்தில் மீள்குடியேற்ற பொதிகளை வெறுமனே பெற்றுக்கொள்ளும் நிலைக்கு இது மாறானது. பாலின அக்கறையுள்ள மீள்குடியேற்ற கட்டமைப்புகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், மதிப்பிடுதல் ஆகிய வழிமுறைகள் முழுவதும் பெண்களை உள்ளடக்குதல் எனப்பொருள்படும்.

அபிவிருத்திக்கான உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை பங்குகொள்ளும் அனைத்து தரப்பினரும் வகை சொல்லல், தெளிவான திட்டமிடலில் முக்கியத்துவத்தை வலியுறுத்தல், பங்குபெறுதல், முன்னுரிமைகளை ஒழுங்குபடுத்தல், உறுதிப்படுத்தும் முயற்சிக்காகவும் உருவாக்கப்பட்டது. இது உதவியை நாடி நிற்போரை வலுவூட்டும், அவர்களது கொள்திறனை கட்டமைக்கும். இது நடைமுறையில் சாத்தியப்பட இலங்கை அரசாங்கத்தால் சர்வதேச மனித உரிமைகள் முறைமையில், நியமங்கள், கொள்கைகள், கட்டளைச்சட்டங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவை மீள்குடியேற்ற திட்டங்களில் உள்ளடக்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். எவ்வாறு வளங்கள் வழங்கப்படுகின்றன, திட்டக்கொள்கைகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பவற்றை தீர்மானிப்பதில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்பது இதன் மையக்கருத்து. உரிமைகள் பற்றிய உரையாடல் பெண்களின் குரலை உயர்த்த வழி வகுக்கும்.

நிச்சயமற்ற தன்மையும், சவால்களும் நிலவுகையில், பெண்களின் இடம்பெயர்ந்த அனுபவம் தொடர்பாக தெரிந்தவை பற்றி அனுகூலமானவற்றை எடுக்கும் சந்தர்ப்பம் தோன்றியுள்ளது. உதவி, ஆதரவு, பொருளுதவி செய்தல் என்பவை அவற்றின் இலக்குகளை அடைய வேண்டுமெனின், நெகிழ்வான, சூழலுக்கு இசைவான பொருள்துலக்கத்தை தரும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அதிகம் கொடுக்கப்படவேண்டும். வடகிழக்கெங்கும் வாழ்கின்ற இடம்பெயர்ந்த பெண்கள், தமது தேவைகள் எளிமையானவை என எமக்குக் கூறினார்கள். அதாவது வாழ்வதற்கு பாதுகாப்பான, உற்பத்தி செய்யக்கூடிய இடம், குடும்பத்திலும் சமுதாயத்திலும் மதிக்கப்படக்கூடிய நிலை, தமதும் தமது குடும்பங்களினதும் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதுமான சேவைகளும், வசதிகளும் கிடைக்ககூடிய சூழல், எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது பயமின்றி வாழ்தல்.

நன்றி : மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் - கொழும்புப் பல்கலைக்கழகம்

## முரண்பாடுகளின் கட்டமைப்பு





''சமாதானச் சூழ்நிலையில் சரியான பங்கீட்டு முறையில்
அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும்போதுதான்
நீண்ட சமூக வாழ்வை நோக்கி......''